


எனது ஆல்பத்தில் ஒரு பக்கம்!

போட்டோ ஆல்பத்தின் ஒவ்வொரு பக்கமும் கவர்ச்சிகரமாக விளங்க என்ன வேண்டும்?

தேவைகள் மிகவும் சுலபமானவை. எளிதில் கிடைப்பவை.

முதலாவதாக ஒரு கேவார்ட்ஸ் ரோல் பிலிம் அல்லது பிளேட்.


இரண்டாவதாக ஒரு கேவார்ட்ஸ் பேப்பர் இவைகளே.



இந்தியாவில் மொத்த விற்பனையாளர்கள்:

அல்லையட் போட்டோகிராபிக்ஸ் லிமிடெட்

பம்பாய் - கல்கத்தா - மதராஸ்



மதராஸ் பென்ஸில் பாக்டரி, மதராஸ்

கல்கி

பொருளடக்கம்

மலர் 7 இதழ் 41 | மே 9 | சர்வஜித் ௵ சித்திரை 27

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனை.

வீரபத்தினியே! உன்னை வாழ்த்துகிறோம்! ஆருயிர்க் கணவனைத் தாய்நாட்டின் தொண்டுக்கு அர்ப்பணம் செய்த மாதரசியே! உன் தியாகத்தைப் போற்றுகிறோம். ஆறாய்ப் பெருகிய கண்ணீரைத் தடுத்து நிறுத்திக் கண்ணைத் துடைத்துக்கொண்டு கணவன் காட்டிய வழியில் பணி செய்ய முன் வந்த நாரீமணியே! உன் தீரத்தைப் பாராட்டுகிறோம்!

சென்ற சர்வஜித்து ஆண்டில் பல விந்தைச் சம்பவங்கள் கீழ்நாடுகளில் நடைபெற்றன. இந்தியா சுதந்திரம் அடைந்தது; பர்மா சுதந்திரம் அடைந்தது; இலங்கை கூட முக்கால் பங்கு சுதந்திரம் அடைந்தது. இவையெல்லாம் சரித்திரத்தில் பொறிக்கத் தக்க மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சிகள். ஆனால் நெஞ்சைப் பிளக்கும் திடுக்கிடும் சம்பவங்கள் பலவும் சென்ற சர்வஜித்தில் நிகழ்ந்தன. இந்தியாவின் சுதந்திர கர்த்தாவாகிய காந்தி மகாத்மா கொலைகாரனின் குண்டினால் இம் மண்ணுலகை நீத்தார். பர்மாவின் சுதந்திரப் பிரம்மாவாகிய ஸ்ரீ அவுங்ஸான் தம்முடைய சகாக்கள் பலரோடும் கூண்டோடு கைலாசமாகச் சதிகாரர்களின் குண்டுக்கு இரையாகி விண்ணுலகேகினார்.



பட்டப் பகலில் பகிரங்கமாக நடந்த இந்த பர்மாப் படுகொலை உலகத்தையே ஒரு குலுக்கு குலுக்கி விட்டது. இந்த நிகழ்ச்சியிலிருந்து கீழ் நாடுகள் சுதந்திரத்துக்கும் ஜனநாயகத்துக்கும் தகுதியற்றவை என்று முடிவு செய்ய மேனாட்டார் தயாராயிருந்தார்கள். பர்மாவில் பெருங் கலகங்களும் குழப்பங்களும் தோன்றும் என்று எதிர்பார்த்தார்கள்.

அப்படி ஒன்றும் நடைபெறவில்லை. ஸ்ரீ அவுங்ஸான் உள்பட ஆறு மந்திரிகள் ஏக காலத்தில் கொலையுண்டும் பர்மாவின் ஜனநாயக அரசாங்கம் தொடர்ந்து நடந்தது. எதிர்பாராத மகத்தான கொடுஞ் சோதனையிலிருந்து பர்மா தப்பிப் பிழைத்தது.


இவ்விதம் பர்மாவின் சுதந்திரத்தையும் கீழ்நாட்டின் கௌரவத்தையும் காப்பாற்றுவதற்குக் காரணமாயிருந்தவர்களில் வீர பத்தினியான ஸ்ரீமதி அவுங்ஸானும் ஒருவர்.

கணவன் எதிர்பாராத பயங்கர மரணத்தினால் ஏற்பட்ட திகைப்பையும் துயரத்தையும் மனோதிடத்தினால் வென்று, பர்மியத் தலைவர்களின் விருப்பத்தின்படி பர்மா சர்க்காரில் மந்திரியானார்; ஏற்றுக்கொண்ட பொறுப்பைத் திறம்பட நடத்தி வருகிறார்.

சென்ற மாதத்தில் லேடி மவுண்ட்பாட்டன் அழைப்புக்கிணங்க ஸ்ரீமதி அவுங்ஸான் புது டில்லிக்கு விஜயம் செய்தார். கவர்னர் ஜெனரலின் விருந்தாளியாகத் தங்கியிருந்தார். புது டில்லி அரண்மனையில் ஸ்ரீமதி அவுங்ஸானுக்கு ராஜ உபசாரம் நடந்தது; பொதுஜன உபசாரமும் நடந்தது. அச்சமயம் மலரும் மலர் மாலையும் மலர்ந்த முகமுமாகக் காட்சியளித்த ஸ்ரீமதி அவுங்ஸான் இந்த இதழ் "கல்கி" அட்டையை அலங்கரிக்கிறார்.

போட்டோ: கே. நடராஜன்.

சர்வதேச சதி


இவர்கள்
எக்கேடு கெட்டுப்போகும்
என்ன? நமக்கு வேண்டியது
அதோ இருக்கும்
எண்ணெய்தான்.
ஐ.நா. சபை
பொதுப்
சண்டையை
நிறுத்துங்கள்
அராபியர்கள்
யூதர்கள்
ஆதிக்க வலை
SHASTRY

கல்கி

மலர் 7 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார். | இதழ் 41

என்ன சேதி?

நீதி கிடைக்கவில்லை

காஷ்மீரத்தின் மீது கொள்ளைக்காரர்கள் படையெடுத்து ஜனங்களைப் படுகொலை செய்தும், கிராமங்களைக் கொளுத்தியும் வருகிறார்கள்; அந்தக் கொள்ளைக்காரர்களுக்குப் பாகிஸ்தான் சர்க்கார் இடவசதியும் போர்த் தளவாட வசதியும் அளித்து வருகிறார்கள்; அவ்விதம் செய்வது சர்வதேசச் சட்டத்துக்கும் உலக அமைதிக்கும் முரணானதால், பாகிஸ்தான் சர்க்கார் அவ்வாறு செய்யாமல் தடுக்க வேண்டும்;— இதுதான் ஐக்கிய காடுகள் சபையிடம் இந்திய சர்க்காரின் முறையீடு. கொள்ளைக்காரர்களுக்கு இடவசதி அளிக்கப் பாகிஸ்தான் சர்க்கார் மறுத்து விடுவார்களாயின், அந்த நிமிஷத்திலேயே காஷ்மீரப் பிரச்னை தீர்ந்துவிடும். ஆனால், இந்தத் தெளிவான விஷயத்தைச் சுயநல ஆதிக்க வெறி பிடித்த வல்லரசுகளால் ஆட்டி வைக்கப்பட்டு வரும் ஐக்கிய நாடுகள் சபை ஒரே யடியாகக் குழப்பி உருத் தெரியாமல் செய்து விட்டது. அது காஷ்மீர் சம்பந்தமாக நிறைவேற்றியுள்ள தீர்மானத்தின் மூலம் இந்தியாவுக்கு நீதி கிடைக்கவில்லை.

அந்தத் தீர்மானத்தை யொட்டிப் பேசியுள்ள பாகிஸ்தான் பிரதம மந்திரி லியாகத் அலிகான், காஷ்மீரில் மலை ஜாதியார் தொடுத்துள்ள "புனிதமான" போராட்டத்தைக் கைவிடும்படி செய்வது சுலபமல்ல என்று கைவிரித்திருக்கிறார். ஆனால், அந்தத் தீர்மானத்தைக் கண்டித்துள்ள பிரதம மந்திரி ஜவாஹர்லால்ஜி இரண்டு விஷயங்களைத் தெளிவு படுத்தி யிருக்கிறார். அதாவது காஷ்மீர் மீது படை யெடுத்துள்ள கொள்ளைக் கூட்டத்தினரை ஒருவர்கூடப் பாக்கியின்றி விரட்டும் வரையில் காஷ்மீர் யுத்தம் நடந்தே தீரும்; பாகிஸ்தானுடன் எந்த விஷயத்தை யொட்டியும் சமரசம் செய்து கொள்ள இந்திய சர்க்கார் தயாராக இருக்கின்றனர்; எனினும் தற்போதுள்ள நிலைமையில் அதனுடன் சமரசம் செய்து கொள்வதற்கு வழியே இல்லை என்று பண்டித ஜவாஹர்லால் நேரு குறிப்பிட்டிருப்பது இந்திய ஜனங்களின் ஏகோபித்த உறுதியைப் பிரதிபலிப்பதாக இருக்கிறது.

இரண்டு முட்கள்

"பாகிஸ்தானில் இருக்கும் பாசிஸ்டுவாதிகள் நைஜாமைத் தங்கள் இஷ்டப்படி பொம்மைபோல் ஆட்டிவருகிறார்கள். நூற்றைம்பது வருஷங்களாக பிரிட்டிஷாரின் ஆதிக்கத்துக்கு அடி பணிந்து கிடந்த நைஜாம் இப்போது இந்திய ஜனங்களின் ஆட்சி முறைக்கு உட்பட மறுப்பது மடத்தனமாக முடியும். இந்தியாவுக்கும் ஹைதராபாத்துக்கும் போர் மூண்டால் நைஜாமின் எதேச்சாதிகாரத்தை ஒழிக்க இந்தியாவிலுள்ள நாலு கோடி முஸ்லிம்களும் ஏகோபித்துப் போராடுவார்கள்" என்று பேராசிரியர் அப்துல் மஜீத்கான் கூறுகிறார்.

காஷ்மீர், ஹைதராபாத் பிரச்னைகள் சுதந்திர இந்தியாவுக்குத் துன்பத்தைக் கொடுக்கும் இரண்டு முட்களாக இருந்து வருகின்றன. இது வரையில் காலங் கடத்தி வந்த போபால் நவாப்கூடத் தமது சமஸ்தானத்தில் பொறுப்பாட்சி முறையை அமுலுக்குக் கொண்டு வரத் தீர்மானித்து விட்டார். ஆனால் சைத்தான் புனித தீர்த்தத்தைக் கண்டு நடுங்குவது போல ஹைதராபாத் பொறுப்பாட்சியைக் கண்டு நடுங்குகிறது. அங்கு ஜனங்களுக்குச் சொல்லொணாக் கஷ்டத்தை உண்டுபண்ணி வரும் ரஸாக்கியர்கள் தங்களுடைய நண்பர்கள் என்று ஹைதராபாத் சர்க்கார் மந்திரிகள் பகிரங்கமாகச் சொல்ல ஆரம்பித்திருப்பதால், நெருக்கடி முற்றி வருகிறது. இந்நிலைமையில் பேராசிரியர் அப்துல் மஜீத்கான் போன்றவர்கள் கூறும் புத்திமதி நைஜாம் செவியில் ஏறுமா?

"ஒழிக"க் கூச்சல் ஒழிக!

தமிழ் நாட்டில் எந்தப் புண்ணியவான் "ஒழிக!" என்னும் கோஷத்தை முதன் முதலில் கிளப்பினாரோ, தெரியவில்லை! தொற்று நோயைப் போல் தொற்றிக்கொண்டு அந்தக் கூச்சல் எங்கெங்கும் பரவியிருக்கிறது. நல்லது, பொல்லாதது இரண்டையும் பாதித்துத் தொலைக்கிறது! பொல்லாததைக் காட்டிலும் நல்லதையே அதிகமாகத் தாக்கி ஒழிக்கப் பார்க்கிறது!

சில நாளைக்கு முன்னால் மதுரைமா நகரில் நடந்த ஓர் அதிசயத்தைக் கேளுங்கள். பத்தாயிரம் ஜனங்கள் அடங்கிய ஊர்வலம்—அரை மைல் நீளம்—அணிவகுத்துச் சென்றது. ஊர்வலத்துக்குப் பின்னால் ரிஸர்வ் போலீஸார் சுமார் நூறு பேர் ஆயுதபாணிகளாய்ச் சென்றார்கள்.

ஊர்வலத்தின் முன்னால் என்ன காட்சி தென்பட்டது தெரியுமா? ஒரு பெரிய நீளமான அட்டையில் "நேரு சர்க்கார் ஒழிக!" என்று எழுதியிருந்தது. இன்னொரு பெரிய நீளமான அட்டையில் "படேல் சர்க்கார் ஒழிக!" என்று எழுதியிருந்தது. இன்னொரு அட்டையில் "காங்கிரஸ் சர்க்கார் ஒழிக!" என்று எழுதியிருந்தது. இந்த அட்டைகளைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு சிலர் ஊர்வலத்தின் முன்னணியில் சென்றார்கள். எழுதியிருந்த வாக்கியங்களைக் கோஷம் செய்து கொண்டும் சென்றார்கள். சென்றவர்கள் யார்? ஏழை எளிய ஜனங்கள்! கந்தலும் கரித்துணியும் உடுத்திய ஜனங்கள்! தொழிலாளி — பாட்டாளி மக்கள்!

இவர்கள் எதற்காக அவ்விதம் கோஷிக்க வேண்டும்? ஏழை பங்காளரான ஜவாஹர்லால்ஜி அமைத்திருக்கும் இந்திய சுதந்திர சர்க்கார் ஒழிக என்று ஏன் கூச்சலிட வேண்டும்?

அடடா! நம்முடைய ஜனங்களுக்கு என்ன வந்துவிட்டது? நன்றியறிதல் என்பது நம்மிடமிருந்து போய்விட்டதா? நல்லவர்கள் யார், பொல்லாதவர்கள் யார் என்று அறிந்து கொள்ளும் சக்தி போய்விட்டதா? ரோஜாவுக்கும் சப்பாத்திக் கள்ளிக்கும் வேற்றுமை தெரியாமல் போய்விட்டதா? "ரோஜா ஒழிக! சப்பாத்தி வாழ்க!" என்று கூச்சலிடுவோர் இந்த நாட்டு ஜனங்கள்தானா?

"இந்தியா தேசத்திலுள்ள முப்பது கோடி ஜனங்களையும் உலகத்தார் முப்பது கோடி புழுக்களாக மதிக்கிறார்களே!" என்று ஸ்வாமி விவேகானந்தர் இதயம் கொதித்துச் சொன்னார்.

அப்படிப் புழுக்கள் என மதிக்கப்பட்ட அடிமை இந்திய மக்களைச் சுதந்திர வீர புருஷர்களாக்கி உலகம் மதிக்கும்படி செய்த மாபெருந் தலைவர்களின் மன்னர் ஜவாஹர்லால் நேரு; அரண்மனை வாழ்வைத் துறந்து சிறை வாழ்வை உகந்தவர். தேசியப் போரில் ஈடுபட்டிருந்த இருபத்தைந்து வருஷத்தில் பன்னிரண்டு வருஷம் சிறைச்சாலையில் கழித்தவர்.

இன்றைய தினம் உலகத்தின் சுதந்திர தேசங்களின் மத்தியில் இந்தியாவுக்கும் ஒரு சரிசமமான கௌரவஸ்தானம் கிடைத்திருக்கிறது என்றால், அதற்கு முதன்மையான காரண புருஷர் காந்தி மகாத்மா; — அடுத்த காரண புருஷர் ஜவாஹர்லால் நேரு.

அத்தகைய ஜவாஹர்லால் நேரு அரசாங்கத் தலைவராகி ஒன்பது மாதம் இன்னும் முழுமையாக ஆகவில்லை! அதற்குள்ளே "நேரு சர்க்கார் ஒழிக!" என்ற கூச்சல் இந்தத் தமிழ் நாட்டிலே கிளம்பியிருக்கிறதென்றால், இதற்கு என்ன காரணம்? தமிழ் மக்கள் அவ்வளவு மோசமானவர்களா?

இல்லை, இல்லை! தமிழ் மக்கள் அவ்வளவு மோசமானவர்கள் இல்லை; நன்றியில்லாதவர்களுமில்லை; பகுத்தறிவு அற்றவர்களும் இல்லை; நன்மை தீமை தெரியாதவர்களும் இல்லை.

தமிழ் மக்களில் ஒரு சிலருடைய மனம் இம்மாதிரி கெட்டுப் போனதற்குக் காரணங்கள் இருக்கின்றன.

எல்லாவற்றிற்கும் முதன்மையான காரணம் வயிற்றுப் பசிதான். 'மானம் கல்வி வாய்மை அறிவுடைமை எல்லாமே பசி வந்திடப் பறந்து போம்' அல்லவா? தமிழ் நாட்டில் துரதிர்ஷ்டவசமாக உணவுப் பொருள் பஞ்சம் பரவியிருக்கிறது. மதுரைக்குத் தெற்கே

பஞ்சம் அதிகக் கொடுமையாயிருக்கிறது. வயிறு பசிக்கும்போது மனம் குழம்புவது மனித இயற்கைதானே?

சந்தடி சாக்கில் கந்தகப் பொடி தூவுகிறவர்கள் சிலர் இருக்கிறார்கள். ஜனங்களுடைய பசியைப் பயன்படுத்திக் கொண்டு அவர்கள் பொய்ப் பிரசாரம் செய்கிறார்கள். நேரு சர்க்காரை ''முதலாளி சர்க்கார்'' என்று அவதூறு சொல்கிறார்கள். வயிறு பசித்திருக்கும்போது அறிவு எதை வேணுமானாலும் நம்பத் தயாராகி விடுகிறது!

துரதிர்ஷ்டவசமாக நமது சென்னை சர்க்கார் ஜனங்களின் பசியைப் போக்குவதற்குப் போதிய அளவு நடவடிக்கை எடுக்கவில்லை. பொய்ப் பிரசாரத்துக்கு மாற்றுப் பிரசாரமோ கொஞ்சங்கூடச் செய்யவில்லை. காங்கிரஸ் ஸ்தாபனங்களும் பிரசார விஷயத்தில் தங்கள் கடமையைச் சிறிதளவும் நிறைவேற்றவில்லை என்று சொல்ல வேண்டியிருக்கிறது.

* * *

ஜனங்களின் பசியைப் போக்கும் விஷயத்தில் சென்னை சர்க்கார் போதிய அளவு நடவடிக்கை எடுக்கவில்லையென்று சொன்னோம்.

எவ்வளவோ காரியங்கள் செய்து கொண்டுதான் வருகிறார்கள்; இல்லையென்று சொல்லவில்லை. சென்ற வாரத்திலே கூடப் பிரதம மந்திரி கனம் ரெட்டியாரும், உணவு மந்திரி டாக்டர் ராஜனும் புதுடில்லிக்குப் போயிருந்தார்கள். ''அதிக தானியம் அனுப்ப வேண்டும்'' என்று உணவு மகாநாட்டில் மன்றாடினார்கள். ''எட்டு அவுன்ஸ் ரேஷனில் எங்கள் ஜனங்கள் எலும்பும் தோலுமாகி விட்டார்களே!'' என்று கனம் ரெட்டியார் கதறினார்.

இதையெல்லாம் பத்திரிகைகளில் பார்த்தோம். இரு மந்திரிகளும் செய்திருக்கும் பிரயத்தனங்களுக்காக மிக்க நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம்.

அதாவது எட்டு அவுன்ஸ் ரேஷனாவது கிடைத்துக் கொண்டிருக்கும் சென்னை நகரில் வாழும் நாம் நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம்.

ஆனால் அந்த எட்டு அவுன்ஸ் கூடக் கிடைக்காமல் பசியினால் துடிக்கும் மதுரை — ராமநாதபுரம் — திருநெல்வேலி ஜில்லா வாசிகளின் நிலைமை என்ன? படி அரிசி ஒன்றேகால் ரூபாய் கொடுத்து வாங்குவோரின் நிலைமை என்ன? அந்த விலைக்கும் அரிசி கிடைக்காமல் தவிப்போரின் நிலைமை என்ன? அவ்வளவு விலை கொடுத்து அரிசி வாங்க முடியாமல் கஷ்டப்படுவோரின் நிலைமை என்ன?

பிரதம மந்திரியும் உணவு மந்திரியும் நேரில் மதுரை—ராமநாதபுரம்—திருநெல்வேலி ஜில்லாக்களுக்குப் போக வேண்டும். எந்தெந்த இடத்தில் ஜனங்கள் எந்தக் காரணத்தினால் பசித்திருக்கிறார்கள்,—அதாவது தானியம் இல்லாததினாலா; பணம் இல்லாததினாலா.—என்று நேரில் பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டும். குறைகளைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். நேரில் போய்ப் பார்த்தால் பாதிக் குறைகளுக்கு மேலே நிவர்த்தி செய்யலாம். ஆங்காங்குள்ள அதிகாரிகளின் வார்த்தையையே வேத வாக்காக நம்பிக்கொண்டு இருக்கக்கூடாது. ''அரிசி ரயிலில் வருகிறது; கப்பலில் வருகிறது: ஆகாச மார்க்கமாக வருகிறது''—என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருந்தால் போதாது. வருகிற அரிசி கிராமங்களிலும் பட்டணங்களிலும் எங்கெங்கே ஜனங்கள் பசித்திருக்கிறார்களோ, அங்கே போய்ச் சேருகிறதா என்று பார்க்க வேண்டும். அதுவும் சமயத்தில் போய்ச் சேருகிறதா என்று பார்க்க வேண்டும்.

நியாய விலைக்கு அரிசி விற்கும் கடைகளை சர்க்கார் பஞ்சப் பிரதேசங்களில் ஏற்படுத்தி வருவதாக அறிக்கை விடுகிறார்கள் ஆனால் அந்தக் கடைகளில் நியாய விலைக்கு அரிசி விற்கப்படுகிறதா, போதிய அளவு விற்கிறதா என்று பார்க்க வேண்டாமா? நியாயமாகச் சொல்லப் போனால், மந்திரிகள் மாறுவேடம் பூண்டு போய்ப் பார்க்க வேண்டும். இது முடியாவிட்டால், முன்னறிவிப்பு இல்லாமல் அவசியம் போய்ப் பார்க்க வேண்டும்.

பிரதம மந்திரியும் உணவு மந்திரியும் புதுடில்லிக்குப் போய் வந்தது மட்டும் போதாது. தானியப் பஞ்சம் நேர்ந்துள்ள ஜில்லாக்களுக்கும் அவர்கள் விஜயம் செய்ய வேண்டும் என்று வற்புறுத்துகிறோம்

அப்படி விஜயம் செய்தால் ஜனங்களுக்கு அநாவசியமாக ஏற்பட்டிருக்கும் பல சில்லறை அவதிகளை அவர்கள் தெரிந்துகொண்டு அவற்றை நிவர்த்தி செய்யலாம்.

உதாரணமாக, ஒன்றைக் கவனியுங்கள். மதுரையிலிருந்து ராமநாதபுரம் – திருநெல்வேலிக்கு அரிசி போகக் கூடாது என்று ஒரு தடை அமுலில்

இருக்கிறது. இது எதற்காக? மதுரையும் ராமநாதபுரமும் ஒரே ஜில்லாவென்றே சொல்லக் கூடியவை. மதுரையிலிருந்து ராமநாதபுரத்துக்கு அரிசி போனால் அதன் பொருள் என்ன? மதுரையில் அரிசி கொஞ்சம் அதிகம் இருக்கிறது; ராமநாதபுரத்தில் அதற்குத் தேவை இருக்கிறது என்று தானே அர்த்தம்? இதைப் போய்த் தடை செய்வானேன்? அரைப்படி அரிசி மடியில் கட்டிக்கொண்டு போகும் ஏழை ஸ்திரீகளைப் போலீஸார் தடுத்து நிறுத்தித் துன்புறுத்த இடங் கொடுப்பானேன்? அவர்கள் காங்கிரஸ் சர்க்காரைச் சபித்து மண்ணை வாரி இறைப்பானேன்?

மந்திரிகள் சென்னையிலிருந்தபடி கேட்டால், மதுரைக் கலெக்டர் ஏதாவது காரணம் சொல்லத்தான் சொல்வார். 'கண்ட்ரோல்' விதிகள் கடவுளின் விதிகளைவிட முக்கியமானவை என்பது அதிகாரவர்க்கத்தின் அழியாத நம்பிக்கை அல்லவா? "மதுரையிலிருந்து அரிசி வெளியே போனால் மதுரையில் பஞ்சம் வராமலிருக்க நான் ஜவாப்தாரி இல்லை" என்று சொல்வார்.

அப்படிப்பட்ட கலெக்டரைத் தூக்கி வேறு இடத்துக்குப் போட்டுவிட்டு ஜவாப்தாரியாயிருக்கக் கூடிய கலெக்டரைப் போடவேண்டும்.

மதுரையிலிருந்து அரிசி ராமநாதபுரத்துக்குப் போனால் திருச்சியிலிருந்து அரிசி மதுரைக்கு வருகிறது. தஞ்சையிலுள்ள அரிசி திருச்சிக்கு வருகிறது. இதில் என்ன கெடுதல் நேர்ந்துவிடும்?

கெடுதல் நேராதது மட்டும் அல்ல; நன்மையும் உண்டு. இன்றைய தினம் தஞ்சாவூரில் நெல் கட்டிக் கிடக்கிறது என்பதை நாம் அறிவோம். தஞ்சை விவசாயிகள் பலர் நெல்லை விற்க விரும்புகிறார்கள்; ஆனால் வாங்குவதற்கு ஆள் இல்லை. "விற்கக் கூடாது" என்று சர்க்கார் உத்தரவு போட்டு விடுகிறார்கள். தாங்களும் வாங்கிக் கொள்வதில்லை.

ஜில்லாவுக்கு ஜில்லா தானியம் போவதில் உள்ள தடைகளை நீக்கினால் பாண்டிய நாட்டில் பாதிப் பஞ்சம் உடனே நீங்கி விடும்.

அப்படித் தஞ்சாவூர் ஜில்லாவில் அரிசி ஸ்டாக் குறைந்து விடுகிறது என்றே வைத்துக் கொள்ளலாம். மோசம் என்ன நேர்ந்து விடும்? வடக்கே இருந்துதான் அரிசியும் சோளமும் கோதுமையும் வரவழைக்கிறீர்களே? மற்ற ஜில்லாக்காரர்களைப் போல் தஞ்சாவூர்க்காரர்களும் சில காலம் சோளமும் கோதுமையும் வாங்கிச் சாப்பிட்டு விட்டுப் போகிறார்கள்! கண்ட்ரோலை முக்கால்வாசி எடுத்துவிட்டுக் கால்வாசி மட்டும் வைத்துக்கொண்டு ஜனங்களை பல வீண் தொந்தரவுகளுக்கு உள்ளாக்க வேண்டுமா?

ஆம்; மந்திரிகள் நேரில் ஸ்தலத்துக்குப் போய்ப் பார்த்தால் ஜனங்களின் கஷ்டங்களை நன்கு தெரிந்துகொண்டு நிவர்த்திக்க வழி தேடலாம். உண்மையில் கஷ்டம் உள்ள இடத்துக்கு உதவி அனுப்பலாம். அதோடு ஜனங்களும் "ஏதோ மந்திரிகள் நேரில் வந்து பார்த்தார்கள்; குறைகளைக் கேட்டார்கள்; முடிந்தவரை செய்தார்கள்!" என்று எண்ணி மகிழ்வார்கள். இல்லாவிட்டால், "வோட்டு வாங்கிக் கொண்டு போன பாவிகள் நம்மைக் கவனிக்கவேயில்லையே! காங்கிரஸ் சர்க்கார் ஒழிக! நேரு சர்க்கார் ஒழிக!" என்று கூச்சலிடுவார்கள்.

* * *

ஜனநாயக யுகத்தில் மந்திரிமார்கள் ஜனங்களுக்கு நன்மையான காரியங்களைச் செய்யவும் வேண்டும்; அவ்விதம் நன்மையான காரியங்களைச் செய்கிறோம் என்பதை அடிக்கடி எடுத்துச் சொல்லிப் பிரசாரம் செய்யவும் வேண்டும். ஜனங்களோடு நெருங்கிப் பழக வேண்டும்; அவர்களுடைய சுக துக்கங்களைக் கவனிப்பதாகக் காட்டிக் கொள்ளவும் வேண்டும்.

தாற்காலிக உணவு நெருக்கடி பற்றித் தான் இவ்வளவும் சொன்னோம். வருங்காலத்தில், — அடுத்த வருஷம் முதலாவது, — பஞ்சப் பாட்டுப் பாடாமலிருப்பதற்குத் தக்க ஏற்பாடு நடக்கிறதா என்று கேட்டால், நமக்குத் தெரியவில்லை. ஏதாவது நடந்தால் அது பரம இரகசியமாக வைக்கப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது.

சென்னை மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு ஜில்லாவிலும் இவ்வளவு ஜனங்கள் இருக்கிறார்கள். இவ்வளவு தானிய உற்பத்தி இப்போது ஆகிறது. அதிகப்படி எவ்வளவு. பற்றக்குறை எவ்வளவு. தரிசு நிலம் எவ்வளவு. புதிதாகச் சாகுபடியாகக் கூடிய நிலம் எவ்வளவு. ஒவ்வொரு ஜில்லாவிலும் விவசாயக் கிணறுகள் எவ்வளவு. கிணறுகளின் மூலம் சாகுபடி எவ்வளவு. புதிய கிணறுகள் எவ்வளவு

வெட்டலாம், மினேற்றுப் பாசனத்தினால் எவ்வளவு சாகுபடி செய்யலாம், எத்தனை ஏரிகள் இருக்கின்றன, அவற்றில் மேடிட்டுப் பயனற்றுப் போனவை எத்தனை. சீர்திருத்தி எவ்வளவு ஏரிகளைப் பாசனத்துக்குத் தகுந்தவை ஆக்கலாம்; — ஆகிய விவரங்களெல்லாம் சர்க்காரிடம் கணக்கு இருக்கிறதா? இருந்தால் தயவுசெய்து அவ்விவரங்களைப் பகிரங்கப் படுத்தும்படியாகக் கேட்டுக் கொள்கிறோம்.

ஒவ்வொரு ஜில்லா கலெக்டருக்கும் அவருடைய ஜில்லாவில் அடுத்த வருஷத்தில் இவ்வளவு சத விகிதம் உணவு உற்பத்தியை அதிகமாக்க வேண்டும் என்று சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்களா? அப்படியானால் அதை வெளியிட்டுச் சொல்லும்படி கேட்டுக் கொள்கிறோம்.

விவசாய ஆபீஸ்களில் விவசாயிகளுக்கு இந்தந்தக் காலத்தில் இன்னின்ன உதவிகள் கிடைக்கும் என்பதற்கு சர்க்காரிடம் ஜாபிதா இருக்கிறதா? இருந்தால், அதையும் மூடு மந்திரமாக வைத்துக்கொண்டிராமல் பட்டவர்த்தனமாக்கி விடும்படி மன்றாடிக் கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்கள் மகத்தான காங்கிரஸ் அபிமானம் கொண்டவர்கள்; மகாத்மாவிடம் ஒப்பற்ற பக்தி கொண்டவர்கள்; ஜவாஹர்லால் நேருவினிடம் இணையில்லா அன்பு கொண்டவர்கள். அப்படிப்பட்ட தமிழ் மக்களிடையே ''காங்கிரஸ் சர்க்கார் ஒழிக'' ''நேரு சர்க்கார் ஒழிக'' என்னும் கோஷங்கள் ஒழிவதற்கு முயற்சிக்கும்படி சென்னைக் காங்கிரஸ் மந்திரிகளை ரொம்பவும் கேட்டுக் கொள்கிறோம்.

சுவாமி விபுலானந்தர்

வட வேங்கடம்—தென் குமரி என்று தமிழ்நாட்டின் எல்லை வகுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தமிழ் மக்கள் இந்த எல்லையைத் தாண்டி அப்பால் விரிந்து பரந்து குடியேறி யிருக்கிறார்கள். தமிழன்னையையும் தமிழ் மக்களின் பண்பாட்டையும் வளர்த்து வந்திருக்கிறார்கள். இவ்வாறு தமிழகத்துக்கு அப்பால் தமிழும் தமிழர் பண்பாடும் வளர்த்த இடங்களுக்குள்ளே இலங்கைத் தீவின் ஒரு பகுதியான ஈழ நாட்டைக் குறிப்பிட வேண்டும்.

ஈழ நாட்டில் தமிழர்கள் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே குடியேறினார்கள். தமிழகத்தோடு எப்போதும் தொடர்பு கொண்டிருந்தார்கள். தமிழையும் தமிழ் நாகரிகத்தையும் சமயத்தையும் வளர்த்தார்கள்.

சில காலமாகத் 'தமிழ் மறுமலர்ச்சி' என்பது பற்றி அடிக்கடி கேள்விப்பட்டு வருகிறோம். தமிழ் மறுமலர்ச்சிக்குக் காரணமானவர்கள் என்று பலருடைய பெயர்களும் சொல்லப்படுகின்றன. ஆனால் உண்மையில் தமிழ் மறுமலர்ச்சிக்கு ஆதிகாரண புருஷர் யார் என்று ஆராய்ந்து பார்த்தோமானால், அவர் ஈழ நாட்டைச் சேர்ந்த ஸ்ரீ ஆறுமுக நாவலர் என்பது தெரியவரும்.

பழைய காலத்தில் தமிழ் வசனம் அபூர்வமாயிருந்தது. அபூர்வமாயிருந்த வசனமும் சங்கச் செய்யுள் நடையைவிடக் கடினமான நடையில் இருந்தது. இல்லையென்றால், இலக்கண வழுக்கள் நிறைந்த கொச்சைத் தமிழில் ஒரு பக்கம் முழுவதையும் ஒரே வாக்கியத்தினால் நிறைக்கும் அசம்பாவித வசன நடையாயிருந்தது. பிழையில்லாத எளிய தமிழ் வசன நடையை முதன் முதலில் கையாண்டு காட்டி வெற்றி பெற்ற பெரியார் ஸ்ரீ ஆறுமுக நாவலரே யாவர்.

ஸ்ரீ ஆறுமுக நாவலரைத் தவிர இன்னும் இரு தமிழ்ப் பெரியார்களை ஈழ நாடு இக்காலத்தில் ஈன்று அருளியது. ஒருவர் உலகப் புகழ் பெற்ற ஸர் பொன்னம்பலம் ராமநாதன். தமிழ் மொழியின் சிறப்பையும் ஹிந்து சமயத்தின் பெருமையையும் அமெரிக்கா முதலிய நாடுகளிலும் பரப்பிய மகான் ஸர் பொன்னம்பலம் ராமநாதன்.

மும்மூர்த்திகளில் மூன்றாமவர் சுவாமி விபுலானந்தர். பூர்வாசிரமத்தில் சுவாமிகளின் பெயர் ஸ்ரீ மயில்வாகனம். அந்த நாட்களில் இந்தியாவைப் போலவே இலங்கையிலும் ஆங்கில பாஷையில் மோகம் மிகப் பரவியிருந்தது. எனினும் ஸ்ரீ மயில்வாகனர் பிள்ளைப் பிராயத்தில் ஆங்கிலக் கல்வியோடு தமிழ் மொழியையும் ஆர்வத்துடன் பயின்றார். மதுரைத் தமிழ்ச் சங்கப் பரீட்சையில் தேறிப் பண்டிதர் என்னும் பட்டம் பெற்றார். வடமொழியை

யும் பயின்று தேர்ச்சி பெற்றார். சில காலம் இலங்கையிலுள்ள ஆங்கிலக் கல்லூரிகளில் ஆசிரியராக வேலை பார்த்து வந்தார்.



ஸ்ரீ மயில்வாகனரின் சமய வாழ்க்கைப் பற்றும் தொண்டு செய்யும் ஆர்வமும் அவரை ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தை நாடச் செய்தன. ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தில் சில காலம் பிரம்மசரிய விரதியாக வாழ்ந்த பிறகு காவி வஸ்திரம் தரித்துச் சந்நியாச ஆசிரமம் புகுந்தார். சுவாமி விபுலானந்தர் என்னும் நாமம் அடைந்தார். அது முதல் சமயத்துக்கும் தமிழுக்கும் இடைவிடாத தொண்டு செய்து வந்தார். இலங்கையிலுள்ள கிரிமலையிலிருந்து இமயத்திலுள்ள கைலயங்கிரி வரையில் பிரயாணம் செய்து வந்து தமது யாத்திரை வரலாறுகளைப் பற்றி மிகச் சுவையுள்ள பல சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சில காலம் தமிழ்ப் பேராசிரியராகத் தொண்டாற்றினார். பின்னர் இலங்கைக்குச் சென்று கொழும்புப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியர் பதவி வகித்து வந்தார்.

பழந் தமிழ் நாட்டில் வழங்கிய இசைக் கருவிகளைப் பற்றிச் சுவாமிகள் ஆராய்ச்சி செய்து பல அரிய உண்மைகளைக் கண்டார். அவற்றைக் குறித்து நாடெங்கும் பல சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். அடிகள் பதினான்கு ஆண்டுகளாக ஆராய்ச்சி செய்து தமிழ் நாட்டு இசைக் கலையைப் பற்றிக் கண்ட உண்மைகளை "யாழ் நூல்" என்னும் புத்தகத்தில் காணலாம்.

ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தினரால் சுவாமிகள் பெரிதும் கௌரவிக்கப்பட்டார். ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கத்தாரின் ஆங்கில மாத சஞ்சிகையான "பிரபுத்த பாரதம்" என்னும் பத்திரிகைக்குச் சுவாமிகள் ஆசிரியராக இருந்தார் என்பதிலிருந்து அவருடைய சமய ஆராய்ச்சித் திறனை அறியலாம்.

ஈழநாடு செய்த தவப்பயன் என்றும், தமிழ்த் தாயின் அருந் தவப் புதல்வர் என்றும் கருதத்தக்க சுவாமி விபுலானந்தர் சென்ற 1947-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 19உ இறைவன் திருவடியை அடைந்தார்.

* * *

தமிழுக்காகவும் சமயத்துக்காகவும் உயிர் வாழ்ந்து பணி செய்த சுவாமி விபுலானந்தரின் நினைவை நல்ல முறையில் நிலைநாட்டுவதற்கு இலங்கைத் தமிழன்பர்கள் பிரயத்தனம் தொடங்கியிருப்பது தெரிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம்.

சென்ற ஏப்ரல் மீ 23உ யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் உள்ள வைத்தீசுவர வித்யாலயத்தில் ஸ்ரீ கே. கனகரத்தினம் எம்.பி. அவர்களின் தலைமையில் தமிழன்பர்களின் மகாநாடு ஒன்று கூடியது. இந்த மகாநாட்டுக்குத் தமிழகத்தி லிருந்தும் தமிழன்பர்கள் சிலர் சென்றிருந்தார்கள். தமிழ்ப் பேராசிரியர்களான ஸ்ரீ என். ஆறுமுக முதலியார், ஸ்ரீ கே. வெள்ளைவாரணர், ஸ்ரீ ஆலாலசுந்தரம் ஆகியவர்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

சுவாமிகள் வெளியிட்ட கருத்தின்படி அமைக்கப்பட்டிருந்த "சுருதி வீணை"யில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைச்சேர்ந்த ஸ்ரீ கே. பி. சிவானந்தம் தமிழ் இசைக் கச்சேரிசெய்து சபையோரை மகிழ்வித்தார்.

வைத்தீசுவர வித்யாலயத்தின் ஆசிரியர் குழுவினரால் அளிக்கப்பட்ட சுவாமிகளின் திரு உருவப் படம் ஆசிரியர் ஆறுமுகனார் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

சுவாமி விபுலானந்தரின் ஞாபகார்த்தமாகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகம் ஒன்றை நிறுவ வேண்டுமென்று அக்கிராசனர் ஸ்ரீ கனகரத்தினம் கூறிய யோசனை மகாநாட்டினரால் உற்சாகமாக வரவேற்கப்பட்டது.

ஈழத்துத் தமிழன்பர்களும் தமிழ்நாட்டுத் தமிழாசிரியர்களும் மேற்கொண்டிருக்கும் இவ்வரும் பெரும் பணி துரிதமாக நடந்தேற வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

தமிழ் உள்ளளவும், தமிழகம் உள்ளளவும், தமிழ் மக்கள் உள்ளளவும் விபுலானந்த அடிகளின் திருநாமம் வாழ்ந்திருப்பதாக.



மாந்தருக்குள் ஒரு தெய்வம்

ரா.கி.

28. கடலில் அபாயம்

தாதா அப்துல்லா கம்பெனியார் "கோர்லாண்டு" என்னும் நீராவிக் கப்பலை அப்போது தான் விலைக்கு வாங்கியிருந்தார்கள். கல்கத்தாவிலிருந்து காந்திஜி தந்தி கொடுத்த சமயத்தில் "கோர்லாண்டு" கப்பல் தென்னாப்பிரிக்காவுக்குப் புறப்படுவதாயிருந்தது. அந்தக் கப்பலிலேயே காந்திஜி பிரயாணம் செய்ய வேண்டும், என்றும், டிக்கட் கிரயம் அவரிடம் பெற்றுக் கொள்ள முடியாது என்றும் அப்துல்லா கம்பெனியார் தெரிவித்தார்கள். காந்திஜி இம்முறை தமது மனைவியையும், இரண்டு புதல்வர்களையும், சகோதரி குமாரன் ஒருவனையும் தம்மோடு அழைத்துப் போவதாக எண்ணியிருந்தார். அதைக் காந்திஜி தெரியப்படுத்தியதும் அவர்களுக்கும் கப்பலில் இடந்தருவதாகவும் டிக்கட் வாங்கக் கூடாதென்றும் கம்பெனியார் வற்புறுத்தினார்கள். அவர்களுடைய உதவியைக் காந்திஜி நன்றியுடன் ஏற்றுக் கொண்டார். "கோர்லாண்டு" கப்பல் புறப்பட்ட அதே சமயத்தில் "நாதேரி" என்னும் இன்னொரு நீராவிக் கப்பலும் டர்பனுக்குப் புறப்பட்டது. இரண்டு கப்பல்களிலும் சுமார் 800 பிரயாணிகள் இருந்தார்கள். இவர்களில் பாதிப்பேர் டிரான்ஸ்வாலுக்குச் செல்லும் உத்தேசம் கொண்டவர்கள்.

மனைவியையும் குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு கப்பல் ஏறுவதற்கு முன்னால் அவர்களுடைய உடை விஷயமாகக் காந்திஜி யோசிக்க வேண்டியதாயிற்று. ஐரோப்பிய நாகரிகத்தையும் நடை உடை பாவனைகளையும் கைக் கொண்டால்தான் தென்னாப்பிரிக்கா வெள்ளைக்காரர்களுக்கு மத்தியில் கௌரவமான வாழ்க்கை நடத்தலாமென்றும், அங்குள்ள இந்தியர்களுக்கு அப்போதுதான் நல்ல சேவை செய்ய முடியுமென்றும் காந்திஜி கருதினார். ஆனால் நிமொன்று அவர்கள் முழு ஐரோப்பிய உடை தரிப்பது சாத்தியமன்று. ஐரோப்பிய உடைக்கு அடுத்தபடியாக பார்ஸிக்காரர்களின் உடை நாகரிகமானது என்று தோன்றியது. எனவே கஸ்தூரிபாயைப் பார்ஸி மாதரைப் போல் சேலை அணியச் செய்தார். குழந்தைகளுக்குப் பார்ஸிகளைப் போல் மேற் சட்டையும், கால்சட்டையும் வாங்கிக் கொடுத்தார். காலுறையும் அதன்மேல் பூட்ஸும் எல்லாரும் அணிய வேண்டியிருந்தது.

பாவம்! தாயும் குழந்தைகளும் உடை மாறுதலினால் மிகவும் கஷ்டப்பட்டனர். ஆயினும் பொறுமையோடு சகித்துக் கொண்டு காந்திஜி சொன்னபடி நடந்தார்கள். நாகரிக உடை தரித்ததோடு, ஐரோப்பிய முறையில் மேஜையின் மீது உணவு வைத்துக் கொண்டு கத்தியும் முள்ளும் உபயோகித்துச் சாப்பிடவும் பழகிக் கொண்டார்கள். ஆனால் இந்த நாகரிகமெல்லாம் நெடுங்காலம் நிலைத்திருக்கவில்லை. "இவையெல்லாம் வெறும் பைத்தியக்காரத்தனம்" என்று பிற்காலத்தில் காந்திஜி தீர்மானித்து அவற்றைக் கைவிடச் செய்தார். கைக்கொள்ளுவது கஷ்டமாயிருந்தது போலவே சில காலம் பழகிய பிறகு கைவிடுவதும் கஷ்டமாயிருந்தது. ஆயினும் அந்த மாதரசி கணவருடைய விருப்பத்தின்படி தம்முடைய பழக்கத்தை மாற்றிக் கொண்டார். குழந்தைகளும் அப்படியே செய்தனர். கிற்க.

கப்பல்கள் இரண்டும் நடுவில் எந்தத் துறைமுகத்திலும் நில்லாமல் நேரே சென்றபடியால் பதினெட்டே நாளில் டர்பன்

துறைமுகத்தை அடைந்தன. ஆனால் வழியில், இன்னும் நாலு நாள் பிரயாணம் பாக்கியிருந்த போது, ஒரு பெரிய அபாயம் நேரிட்டது. பயங்கரமான புயற்காற்றில் கப்பல்கள் அகப்பட்டுக் கொண்டன. பிரயாணிகள் பெரும் பீதி கொண்டார்கள். ஹிந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் எல்லாரும் சமய வேறுபாடுகளை மறந்து ஏக பரம்பொருளை நினைத்து வேண்டுதல் செய்து கொண்டார்கள். கப்பல் தலைவரும் பிரயாணிகளுடன் சேர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கத் தொடங்கினர். காற்றின் வேகத்தினால் மோதப்பட்டுக் கப்பலில் எல்லா இடங்களிலும் 'கிரீச்' 'கிரீச்' என்ற சத்தம் உண்டாயிற்று. எந்த நிமிஷத்தில் எந்த இடம் பொத்துக் கொள்கிறதோ என்று பயப்படும்படி இருந்தது. ஒரு பலகை சிறிது அகன்று ஒரு சிறு துவாரம் ஏற்பட்டால் போதுமே! குபு குபு என்று கடல் நீர் கப்பலுக்குள் வர ஆரம்பித்து விடுமே! அது கூட அவசியமில்லை! காற்றில் அடிபட்டுக் கப்பல் அப்படியும் இப்படியும் ஆடி அசைந்ததைப் பார்த்தால் எந்த நிமிஷமும் கப்பல் கவிழ்ந்து 'அரோகரா' ஆகி விடலாம் என்றும் எண்ண ஏது இருந்தது. கப்பலின் மேல் தளத்தில் ஓர் ஈ காக்கை இல்லை! எல்லாரும் கீழே இறங்கி ஒரே கும்பலாய் ஒதுங்கியிருந்தார்கள். "எல்லாம் ஆண்டவன் சித்தம்!" என்று ஒருவரைப் பார்த்து ஒருவர் அடிக்கடி சொல்லிக்கொண்டார்கள்.

இப்படிப்பட்ட பீதிகரமான சமயத்தில் அந்தக் கப்பலில் தைரியமாயிருந்த பிரயாணி காந்திஜி ஒருவர்தான். அவருக்குக் கடல் யாத்திரை பழக்கமாகியிருந்தது. இயற்கையிலேயே இம்மாதிரி சந்தர்ப்பங்களில் திடசித்தம் கொண்டிருப்பவர். அத்துடன் கடலில் அடிக்கும் இத்தகைய புயல்களையும் ஏற்கெனவே பார்த்து அநுபவமுள்ளவர். ஆகையால் மற்றப் பிரயாணிகளைச் சந்தித்துத் தைரியம் சொல்லுவதில் காந்திஜி ஈடுபட்டிருந்தார். புயல் நிலைமையைப் பற்றி அடிக்கடி கப்பல் தலைவர் தெரிவித்த செய்திகளைத் தெரிந்து கொண்டு வந்து பிரயாணிகளுக்கு அறிவித்து வந்தார். இவ்விதம் அன்று கப்பல் பிரயாணிகள் பலருடன் காந்திஜிக்கு ஏற்பட்ட பழக்கம் சில நாளைக்குள்ளே மிகவும் பயன் பட்டது என்பதை அடுத்தாற்போல் பார்க்கப் போகிறோம்.

புயல் இருபத்து நாலுமணி நேரம் நீடித்திருந்த பிறகு அதன் வேகம் தணிந்தது. வானம் வெளி வாங்கிற்று. சூரியபகவான் தரிசனம் தந்தார். அவ்வளவுதான்! இத்தனை நேரமும் சோகக் கடலில் மூழ்கி 'ஐயோ! அப்பா!' என்று அலறிக்கொண்டிருந்தவர்கள் ஆனந்தக் களியாட்டங்களில் ஈடுபட்டார்கள். சம்பிரதாயமாகக் கடவுளுக்கு நன்றி செலுத்தினார்கள் என்றாலும், அபாய நிலைமையில் ஏற்பட்டிருந்த பக்தி சிரத்தை மறைந்து விட்டது என்பதைக் காந்திஜி கண்டு வருந்தினார்.

ஆனால் அந்தப் பிரயாணிகளுக்காவது காந்திஜிக்காவது ஒரு விஷயம் அப்போது தெரியாது. கடலில் நேர்ந்த இந்த அபாயத்தைக் காட்டிலும் பெரியதோர் அபாயம் கரையிலே காத்திருக்கிறது என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை. அறிந்திருந்தால் காந்திஜியின் மனோநிலையில் மாறுதல் இருந்திராது; ஆனால் மற்றப் பிரயாணிகள் களியாட்டங்களில் ஈடுபட்டிருக்க மாட்டார்கள் என்பது நிச்சயம்.

* * *

டிசம்பர் மாதம் 18-ந் தேதி காந்திஜி ஏறிவந்த "கோர்லாண்டு" கப்பல் டர்பன் துறைமுகத்தை அடைந்தது. அதே தினத்தில் "நாதேரி" கப்பலும் வந்து சேர்ந்தது. இரண்டு கப்பல்களும் துறைமுகத்தில் நங்கூரம் பாய்ச்சி நிறுத்தப்பட்டன.

வெளிநாடுகளிலிருந்து கப்பல்களில் வந்து இறங்குவோரைத் துறைமுகத்தில் வைத்திய பரிசோதனைக்கு உள்ளாக்குவது வழக்கம். தொத்து நோய்கள் பரவாதிருக்கும் பொருட்டு இந்த வழக்கம் கையாளப்படுகிறது. தென்னாப்பிரிக்கா துறைமுகங்களில் கப்பலிலேயே வைத்திய பரிசோதனை செய்து பார்த்து விட்டுத்தான் கரையில் இறங்க விடுவார்கள்.

'கோர்லாண்டு' 'நாதேரி' கப்பல்கள் பம்பாயிலிருந்து புறப்பட்டபோது பம்பாயில் பிளேக் நோய் பரவியிருந்தது. ஆகையினால் இந்தக் கப்பல்களின் விஷயத்தில் வைத்திய பரிசோதனை கடுமையாக இருக்கலாம் என்றும், கொஞ்சம் காலதாமதமும் ஏற்படலாம் என்றும் எதிர்பார்த்தார்கள்.

வெளிநாட்டிலிருந்து துறைமுகத்துக்கு வரும் ஒவ்வொரு கப்பல் மீதும் ஒரு மஞ்சள் கொடி பறக்க விடப்பட்டிருக்கும். மஞ்சள் கொடியை இறக்கிவிட்டால் வைத்திய பரிசோதனை முடிந்துவிட்டது என்று பொருள். அதன் பிறகு கப்பலில் வந்த பிரயாணிகளை வரவேற்பதற்காக அவர்களுடைய நண்பர்களும் பந்துக்களும் கப்பலுக்குள் ஏறிவரலாம்.

“கோர்லாண்டு” கப்பலிலும் மஞ்சள் கொடி பறக்க விடப்பட்டிருந்தது. டாக்டர் வந்து பிரயாணிகளைப் பரிசோதனை செய்தார். ஆனால் அத்தாட்சிப் பத்திரம் உடனே கொடுக்கவில்லை. “பிளேக் கிருமிகள் வளர்ச்சி பெறுவதற்கு 23 நாள் ஆகலாம்; இந்தக் கப்பல் பம்பாயிலிருந்து புறப்பட்டு 18 நாள் தான் ஆகிறது. ஆகையால் இன்னும் ஐந்து நாள் எல்லாரும் கப்பலிலேயே இருக்க வேண்டும்” என்று சொல்லிவிட்டு டாக்டர் போய்விட்டார். “நாடேரி” கப்பலில் இருந்தவர்களுக்கும் இதே விதமான தகவல் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இவ்விதம் வைத்தியர் ஐந்து நாளைக்குத் தடை உத்தரவு போட்ட காரணம் பம்பாய்ப் பிளேக் மட்டும் அல்ல என்பது சீக்கிரத்திலேயே தெரியவந்தது. மேற்படி இரண்டு கப்பலிலும் வந்த இந்தியர்களை டர்பனில் இறங்க விடாமல் திருப்பி அனுப்பிவிட வேண்டும் என்று அந்த நகரில் வசித்த ஐரோப்பியர்கள் பெருங்கிளர்ச்சி செய்து கொண்டிருந்தார்கள் என்பதாகத் தகவல் கிடைத்தது.

ஒவ்வொரு நாளும் வெள்ளைக்காரர்கள் பெருங் கூட்டம் நடத்தினார்கள். “காந்தியையும் அவருடன் வந்திருக்கும் இந்தியர்களையும் இறங்கவிடக்கூடாது” என்று ஆவேசமாகப் பேசினார்கள்; தீர்மானங்கள் நிறைவேற்றினார்கள். அவர்களுடைய கிளர்ச்சிக்கு நேட்டால் அரசாங்கத்தாரின் ஆதரவும் இருந்தது. அரசாங்க மந்திரிகளில் செல்வாக்குள்ள ஒருவர் மேற்படி கிளர்ச்சிக் கூட்டங்களுக்குச் சென்று பகிரங்கமாகக் கலந்து கொண்டார்.

வெள்ளைக்காரர்கள் டர்பனில் ஏற்கெனவே வசித்த இந்தியர்களைப் பயமுறுத்தினார்கள். தாதா அப்துல்லா கம்பெனியைப் பயமுறுத்தினார்கள். இரண்டு கப்பல்களையும் திருப்பி அனுப்பி விட்டால் நஷ்டஈடு தருவதாக ஆசையும் காட்டினார்கள்!

ஆனால் டர்பன் இந்தியர்களும் தாதா அப்துல்லா கம்பெனியாரும் உறுதியுடனிருந்தார்கள். டர்பன் இந்திய சமூகத்துக்கு அப்போது மிஸ்டர் லாப்டன் என்னும் ஆங்கிலேயர் வக்கீலாக இருந்து வந்தார். அவர் அஞ்சா நெஞ்சம் படைத்த தீரர். மற்ற வெள்ளைக்காரர்களின் கிளர்ச்சியை அவர் பலமாகக் கண்டித்தார். இந்தியர்களுக்கு உண்மையாக நண்பராயிருந்து ஆலோசனை சொல்லி வந்தார்.

அச்சமயம் தாதா அப்துல்லா கம்பெனியின் டர்பன் கிளையைச் சேத் அப்துல்லா கரீம் ஹாஜி ஆதம் என்பவர் நிர்வகித்து வந்தார். அவர் தினந்தோறும் விவரமாகக் கடிதம் எழுதிக் கப்பலில் காத்திருந்த காந்திஜிக்கு அனுப்பி வந்தார்.

வெள்ளைக்காரர்களின் சார்பாகவும் கப்பலுக்குக் கடிதம் வந்தது. “மரியாதையாகத் திரும்பிப் போய் விடுங்கள். திரும்பிப் போகச் சம்மதித்தால் பிரயாணச் செலவு கொடுத்து விடுகிறோம். திரும்பிப் போகச் சம்மதிக்கா விட்டால் கடலிலே தள்ளிச் சாக அடித்து விடுவோம்! ஜாக்கிரதை!” என்பது போன்ற கடிதங்கள் வந்து கொண்டிருந்தன. காந்திஜி பிரயாணிகள் எல்லாரிடையிலும் சென்று அவர்களுடனே பேசித் தைரியமூட்டி வந்தார். “நாடேரி” கப்பலில் இருந்தவர்களுக்கும் அவ்வப்போது தைரியப் படுத்திச் செய்திகள் அனுப்பிக் கொண்டிருந்தார்.

டர்பன் வெள்ளைக்காரர்கள் இவ்வளவு மூர்த்தண்யமான துவேஷங் கொண்டு கிளர்ச்சி செய்ததின் காரணம் என்ன தெரியுமா? அவர்கள் காந்திஜியின் மீது இரண்டு குற்றங்களைச் சுமத்தினார்கள்.

1. இந்தியாவி லிருந்தபோது காந்திஜி நேட்டால் வெள்ளைக்காரர்கள் மீது அவதூறு கூறித் துவேஷப் பிரசாரம் செய்தார் என்பது ஒன்று.

2. நேட்டாலில் இந்தியர்களைப் பெருந் திரளாகக் கொண்டு சேர்த்து நேட்டாலை இந்திய மயமாக்கி விடும் நோக்கத்துடன் இரண்டு கப்பல் நிறைய இந்தியப் பிரயாணிகளை அவர் அழைத்து வந்திருக்கிறார் என்பது இரண்டாவது.

உண்மையில், மேற்படி இரண்டு குற்றங்களுக்கும் காந்திஜி உரியவர் அல்ல. இந்தியாவில் காந்திஜி நேட்டால் வெள்ளைக்காரர்களைப் பற்றி மிகைப்படுத்தி ஒன்றும் சொல்லவில்லை. அவர்களுடைய குற்றங்களைக் குறைத்தே கூறினார். நேட்டாலில் இருந்தபோது அவர்களைப் பற்றிக் கூறாத ஒரு வார்த்தையையாவது இந்தியாவிலே அவர் சொல்லவில்லை.

மற்றப்படி அந்த இரு கப்பல்களிலும் இருந்தவர்களில் தம்முடைய மனைவி மக்களைத் தவிர வேறு யாரையும் காந்திஜிக்குத் தெரியவே தெரியாது. யாருக்கும் கடிதம் எழுதியோ நேரில் பேசியோ நேட்-

டாலுக்கு வரும்படி அவர் தூண்டியதும் அழைத்ததும் கிடையாது.

இப்படிக் காந்திஜீ நிரபராதியா யிருந்த போதிலும் அவருக்குத் தம்மால் மற்றப் பிரயாணிகளுக்கு இந்த நெருக்கடி ஏற்பட்டு விட்டதே என்று வருத்தமா யிருந்தது. தாதா அப்துல்லா கம்பெனிக்கும் பெரும் சங்கடம் உண்டாகி யிருந்தது. கப்பலில் இருந்த பிரயாணிகளுக் கெல்லாம் உயி ருக்கே ஆபத்து என்ற நிலைமை ஏற்பட் டிருந்தது. காந்திஜீயின் மனைவி மக்களும் அபாயத்துக்கு உள்ளாகி யிருந்தனர்.

இதைப்பற்றி யோசிக்க யோசிக்க, காந்திஜீக்கு மேனாட்டு நாகரிகத்தைப்பற்றி வருத்தம் உண்டாயிற்று. மேனாட்டு நாக ரிகத்தின் விளைவாகத்தானே கேட்டால் வெள்ளைக்காரர்கள் இப்படி யெல்லாம் நடந்து கொள்ளுகிறார்கள்!

நடுசமுத்திரத்தில் கப்பல் காத்திருந்த சமயத்தில் கிறிஸ்மஸ் பண்டிகை வந்தது. அந்தப் பண்டிகையை முன்னிட்டுக் கப்பல் தலைவர் முதல் வகுப்பு இரண்டாம் வகுப்புப் பிரயாணிகளைத் தம்முடன் விருந்துண்ண அழைத்தார். விருந்துக்குப் பிறகு விருந் தாளிகளில் சிலரும் விருந்து கொடுத் தவரும் பேசுவது மேனாட்டு முறை. இந்திய விருந்தாளிகளின் சார்பாகக் காந்திஜீ பேச வேண்டி ஏற்பட்டது. சாதாரணமாகப் பண்டிகை விருந்துகளில் பேசுவோர் தமா ஷாகச் சிரிக்கச் சிரிக்கப் பேசுவார்கள். அல்லது ஒருவருக்கொருவர் உபசாரம் சொல்லிக் கொள்வார்கள். ஆனால் காந்தி ஜீக்குத் தமாஷ்ப் பேச்சில் அப்போது மனம் செல்லவில்லை. அவருடைய உள்ளம் டர்பனில் நடந்து கொண்டிருந்த துவேஷக் கிளர்ச்சிப் போராட்டத்திலேயே ஈடுபட் டிருந்தது. எனவே, கப்பல் தலைவர் அளித்த கிறிஸ்மஸ் விருந்தில் "மேனாட்டு நாகரிகம்" என்னும் விஷயமாகக் காந்திஜீ பேசினார்.

மேனாட்டார் கிறிஸ்தவ மதத்தினரா யிருந்த போதிலும் கிறிஸ்துவின் போதனை களைக் கைக்கொள்வதில்லை யென்றும், பலாத்காரத்தை அடிப்படையாகக் கொண்டு அவர்களுடைய வாழ்க்கை அமைந்திருக்கிற தென்றும், காந்திஜீ தமது பேச்சில் கூறினார். இதற்கு மாறாகக் கீழ்நாட்டு நாகரிகம் அஹிம்சையை அடிப்படையாகக் கொண்டதென்று எடுத்துக் காட்டினார். கப்பல் தலைவரும், மற்றக் கப்பல் உத்தி யோகஸ்தர்களும் வெள்ளைக்காரர்கள். எனி னும் அவர்கள் காந்திஜீ கூறியதைக் கவன மாகக் கேட்டார்கள். விருந்துப் பேச்சுகள் முடிந்தபிறகு அது விஷயமாகக் காந்திஜீ யுடன் சம்பாஷணை நடத்தினார்கள். அவர் களில் ஒருவர், "நீங்கள் அஹிம்சையைப் பற்றி இவ்வளவு பேசுகிறீர்களே? உங்க ளுடைய கொள்கையை உங்களாலேயே நிறைவேற்றி வைக்க முடியுமா? டர்பன் வெள்ளைக்காரர்கள் பயமுறுத்துகிறபடி காரி யத்தில் செய்தார்களானால் நீங்கள் என்ன செய்வீர்களாம்?" என்று நேரடியாகக் கேட்டார்.

அதற்குக் காந்திஜீ, "அவர்களிடம் நான் கோபங் கொள்ளமாட்டேன். சட்டப்படி வழக்குத் தொடரவும் மாட்டேன். உண் மையிலேயே அவர்கள்மேல் எனக்குக் கோபம் கிடையாது. அவர்களுடைய அறி யாமைக்காகவும் குறுகிய மனப்போக்குக் காகவும் வருந்துகிறேன். ஆனால் அதற்காக அவர்களுக்குப் பதிலுக்குத் தீங்கு செய்ய என் மனம் இடங் கொடாது!" என்று சொன்னார். கேள்வி கேட்டவர் புன்னகை புரிந்தார். காந்திஜீயின் பதிலில் அவருக்கு நம்பிக்கை ஏற்படவில்லை.

இவ்விதம் நாட்கள் கழிந்து கொண்டிருந் தன. வைத்திய பரிசோதகர் இப்போது விஷயம் தம் கையில் இல்லை யென்றும், சர்க்காரிடமிருந்து உத்தரவு வந்தால் காந்திஜீ முதலியவர்கள் கப்பலிலிருந்து இறங்கலா மென்றும் சொன்னார்.

காந்திஜீக்கு இறுதிச் செய்தி கரையி லிருந்து வந்தது. "உயிர் தப்பிப் பிழைக்க வேண்டுமானால் பிடிவாதத்தை விடுங்கள்; திரும்பிப் போய்விடச் சம்மதியுங்கள்!" என்று அந்தச் செய்தி சொல்லிற்று.



எத்தனை நாள் இக்கொடுமை!

பெற்றேன்

3

ஸ்ரீ அவிநாசிலிங்கம் அவர்கள் கல்வி மந்திரியாக வந்த பிறகு பள்ளிக்கூடங்களில் தமிழுக்கு முதல் ஸ்தானம் கொடுத்திருக்கிறார்; ஆங்கிலத்தை இழுத்துக் கீழே மூன்றுவது ஸ்தானத்துக்குத் தள்ளியிருக்கிறார்.

தாய் மொழியைக் கௌரவித்தல் என்ற முறையில் இது மகிழ்ச்சிதரக்கூடிய காரியம்.

ஆனால் தமிழை முதல் மொழியாகக் கற்பிக்கும் முறை இன்னும் வகுக்கப்படவில்லை. அப்படி வகுக்கப்படும்போது பிள்ளைகள் தமிழின்மேல்,—அருமைத் தாய் மொழியின்மேல்,—வெறுப்புக் கொள்ளாத முறையில் வகுக்கப்பட வேண்டுமேயென்று ஆதி சிவனையும் ஆறுமுகத்தானையும் அகத்திய முனிவரையும் பிரார்த்தனை செய்து கொண்டிருப்போமாக.

தமிழ் முதல் மொழியாகச் செய்யப்பட்ட காரணத்தினால், ஆங்கில பாஷையின் கொடுங் கோன்மையும் கொடூர ஆதிக்கமும் எந்த விதத்திலாவது குறைந்திருக்கிறதா என்று கேட்டால் இன்று வரையில் இல்லை. அன்னிய பாஷையாகிய ஆங்கிலம் சொல்லிக் கொடுப்பதற்கு இது வரை கடைப்பிடிக்கப்பட்ட பரம மௌடீகமான முறை இந்த 1948—மார்ச்சு மாதம் வரையில் அமுலில் இருந்து வருகிறது.

அன்னிய பாஷை சொல்லிக் கொடுப்பதற்குச் சிறந்த வழி என்னவென்று குழந்தைகளின் கல்வி விஷயத்தில் ஆராய்ச்சி செய்தவர்களைக் கேட்டால் அவர்கள் ஒருமுகமாக, "பிள்ளைகளுக்குத் தெரிந்திருக்கிற விஷயங்களைப் பற்றியும் அவர்கள் பார்த்திருக்கிற கேட்டிருக்கிற பழக்கப்பட்டிருக்கிற விஷயங்களைப் பற்றியும் அன்னிய பாஷையில் சொல்லுவது தான் சிறந்த வழி!" என்று அபிப்பிராயம் கூறுவார்கள். பிள்ளைகளுக்குத் தெரியாத விஷயங்களைப் பற்றிச் சொல்லி அன்னிய பாஷை கற்பிக்கும் முறை அன்னிய பாஷை கற்பதில் உள்ள கஷ்டத்தை 100-க்கு 100 மடங்கு அதிகமாக்கி விடுகிறது என்றும் சொல்லுவார்கள்.

இப்போது ஆங்கிலம் கற்பிக்க அமுலில் இருந்துவரும் முறையைப் பார்க்கலாம்.

கிராமங்களில் உயர்தர எலிமெண்டரி ஸ்கூல்களில் படிக்கும் பிள்ளைகளின் படிப்பு முடிந்ததும் கவர்ன்மெண்டார் ஒரு பரீட்சை நடத்துகிறார்கள். அதற்கு எட்டாவது ஸ்டாண்டர்டு பரீட்சை என்று பெயர். இதில் பாஸ் செய்த பிள்ளைகளைப் பட்டணங்களில் உள்ள ஹைஸ்கூல்களில் மூன்றாவது பாரத்தில் சேர்த்துக் கொள்வார்கள்.

ஆகவே கிராமத்து எட்டாவது ஸ்டாண்டர்டு என்பது பட்டணத்து இரண்டாவது பாரத்துக்குச் சமமாகிறது.

சென்ற 1948-ம் மார்ச்சு மாதத்தில் எட்டாவது ஸ்டாண்டர்டுக்குப் பரீட்சை நடந்தது. அதில் ஆங்கிலப் பரீட்சைக் கேள்விகளில் சிலவற்றைக் கேளுங்கள் :—

(1) Narrate an incident in the life of Nelson which shows his sense of honour or honesty.

(2) What do you learn of Napolean's character from his treatment of the British soldier?

(3) How did the Czar show his respect to the dead soldier and what lesson did his people learn from the Czar's example?

முதல் கேள்வி நெல்ஸனைப் பற்றியும் இரண்டாவது கேள்வி நெப்போலியனைப் பற்றியும் மூன்றாவது கேள்வி ஜார் சக்கரவர்த்தியைப் பற்றியும் கேட்டிருக்கிறது!!!

இன்னும் ஸிண்டரெல்லாவைப் பற்றிக் கேட்டிருக்கிறது. அவள் King's ball க்குப் போனது பற்றிக் கேட்டிருக்கிறது. ஜார்ஜ் ஸ்டிவனைப் பற்றிக் கேட்டிருக்கிறது.

இந்தியப் பிரமுகர், இந்திய சரித்திர புருஷர், இந்திய இலக்கிய பாத்திரம் யாரையும் பற்றி ஒரு கேள்விகூடக் கிடையாது.

அசோகர், சிவாஜி, அக்பர், விவேகானந்தர், திலகர், காந்தி,—இவர்களைப் பற்றியெல்லாம் ஆங்கிலத்தில் பாடங்கள் இருக்கக் கூடாதா? கேள்வி கேட்கக் கூடாதா?

மேற்படி எட்டாவது ஸ்டாண்டர்டு பரீட்சையில் இங்கிலீஷ் பாஷைத் தரம் எவ்வளவு கடினமானது என்பதற்குச் சில உதாரணங்கள் சொல்கிறேன் :—

"Be sure that rifles aim,
Swift choice of generous part,
Showed in its passing gleam
The depths of a brave heart."

மேற்படி செய்யுளுக்குப் பொருள் கேட்டிருக்கிறது. "To make lee-way" என்பதற்கும் "To make head-way" என்பதற்கும் பொருள் வித்தியாசம் கேட்டிருக்கிறது. அப்படியே "To lose heart" என்பதற்கும் "To lose one's heart" என்பதற்கும் பொருள் வேற்றுமை கேட்டிருக்கிறது. இந்தச் சொற்றொடர்களை வைத்துக்கொண்டு வாக்கியம் அமைக்கும்படியாகக் கேட்டிருக்கிறது.

இந்தப் பரீட்சைத்தாளிலுள்ள கேள்விகளை நாலாவது, ஐந்தாவது, ஆறாவது பாரத்துப் பிள்ளைகள் பலரிடம் நான் கேட்டேன். ஒருவராவது மூன்றில் ஒரு கேள்விக்குக் கூடச் சரியானபடி பதில் சொல்லவில்லை.

"King's Ball" என்பதற்குப் பத்து பிள்ளைகளை அர்த்தம் கேட்டேன். "அரசனுடைய பந்து" என்றுதான் அத்தனை பேரும் சொன்னார்கள். "Ball" என்னும் மேனாட்டின் களியாட்ட நடனத்தைப் பற்றி நம் பிள்ளைகளுக்குத் தெரியுமா? எலிமெண்டரி ஸ்கூல் ஆசிரியர்களுக்குத்தான் தெரிந்திருக்க முடியுமா? அல்லது அவசியமாகத் தெரிந்திருக்கத்தான் வேண்டுமா?

மேற்படி கேள்விகளுக்கு ஆதாரமான ஆங்கில பாட புத்தகத்தை வாங்கிப் பார்த்தேன். "The Middle School English Readers" என்று பெயர். இது நாலாவது புத்தகம். உள்ளேயும் புரட்டிப் பார்த்தேன். படம் ஒன்றுகூடக் கிடையாது. கடவுள் இழவுக்காக முதற் பாடம் "Our mother-land" என்று இருக்கிறது. பின்னால் வரும் பாடங்கள் அவ்வளவும் ஆங்கிலேயரையும் ஆங்கில நாட்டையும் பற்றியவை. இந்தப் பாட புத்தகத்தை அமைத்தவரை மெக்காலேயின் அவதாரம் என்று வணங்குகிறேன்! பரீட்சைத்தாள் தயாரித்தவரை நம்முடைய புனர் ஜன்மம் என்று போற்றுகிறேன்! வேறு என்ன செய்வது? ஆனால் இந்தப் புத்தகத்தைப் பாடமாகச் சிபார்சு செய்த கல்வி இலாகா அதிகாரிகளை அழைப்பதற்கு வார்த்தையே இல்லை !!

* * *

நாலாவது - ஐந்தாவது பார ஆங்கில பாட புத்தகங்களை எடுத்துப் புரட்டிப் பார்த்தேன். அவற்றில் இந்தியக் குழந்தைகளுக்கு ஆங்கில பாஷை எளிதில் கற்பிக்கக் கூடிய முறையில் அமைந்த பாடம் மிகவும் அபூர்வமாயிருக்கிறது.

ஆங்கில நாட்டு மரங்கள், மிருகங்கள், ஆங்கில நகரங்கள், ஆங்கிலக் கிராமங்கள், ஆங்கில மயானங்கள், ஆங்கில உணவு வகைகள், ஆங்கிலேயரின் நடை உடை பாவனைகள் முதலியவற்றைக் கொண்ட பாடங்களே ஆங்கில பாட புத்தகங்களில் மிகப் பெரும்பாலும் இருக்கின்றன.

ஆங்கில தேசத்துப் பாட புத்தகங்களில் நல்ல வர்ணப் படங்கள் நிறையச் சேர்த்திருப்பார்கள். குழந்தைகளுக்கு அவற்றைப் பார்ப்பதில் ஒரு ஆனந்தம் உண்டாகும். படிக்கும் விஷயமும் அந்தப் படங்களின் உதவியினால் நன்றாக விளங்கும்.

நம் நாட்டு ஆங்கில பாட புத்தகங்களில் படமே கிடையாது; இருந்தால் வெறும் அவலட்சணக் கிறுக்கல் படம் இரண்டொன்று இருக்கும். மற்றப்படி இங்கிலாந்தில் ஆங்கிலக் குழந்தைகள் படிப்பதற்குரிய விஷயங்களையே இன்னமும் நம்முடைய குழந்தைகள் ஆங்கில பாட புத்தகங்களில் படிக்கிறார்கள். "படிக்கிறார்கள்" என்று சொல்வது தவறு. உருப் போட்டு மூளையில் திணித்துக் கொள்ளுகிறார்கள். எதற்காக என்பது கடவுளுக்கும் கல்வி இலாகாவுக்குந்தான் தெரியும்.

ஐந்தாவது பாரத்துக்குரிய பாட புத்தகத்தில், "The Tortoise Speaks" (ஆமை பேசுகிறது) என்று ஒரு பாடம் இருக்கிறது. அதில் அந்த ஆமை பின்வரும் செய்யுளைக் குறிப்பிட்டிருக்கிறது :—

Timotheus, placed on high,
Amidst the tuneful choir,
With flying fingers
touched the lyre.

இன்னும் அந்த ஆமை சொல்லுகிற விஷயத்தைக் கொஞ்சம் கேளுங்கள்:

"It was in the month of May last, that I resolved to elope from my place of confinement for my fancy had represented to me that probably many agreeable tortoises of both sexes might inhabit the heights of Baker's Hill or the extensive plains of the neighbouring meadows, both of which I could discern from the terrace. One sunny morning therefore I watched my opportunity, found the wicket open, eluded the vigilance of Thomas Hoar, and escaped into the St. Foin, which began to be in blooms, and thence into the beans."

'St. Foin' என்றால் என்ன வென்று சொல்லிவிடுங்கள், பார்க்கலாம்! ஒன்று! இரண்டு! மூன்று! என்ன? "அந்தப் பெயர் கொண்ட ஒரு சர்ச்சா ரிருக்கலாம்" என்கிறீர்களா? கிடையாது, ஸார், கிடையாது! அது ஒரு பூண்டு! இங்கிலாந்திலே சிற்சில இடங்களிலே மட்டும் முளைக்கும் ஒரு பூண்டு!! தாவர வர்க்கம்!!!

ஆமையாவது தப்பித்துக்கொண்டு எப்படியோ எங்கேயோ போய்ச் சேர்ந்தது. ஆனால் நம்முடைய பிள்ளைகளும் பெண்களும் தாங்கள் பார்த்திராத, பார்க்க முடியாத, அறிந்து கொள்ளவே முடியாத இடங்களையும் விஷயங்களையும் பற்றி அன்னிய பாஷையில் படிக்க வேண்டி யிருக்கும் கொடுமையிலிருந்து தப்ப முடியவில்லை!

ஆசிரியர்களையும் போதாசிரியர்களையும் உபாத்தியாயர்களையும் மறுபடி இக்கு நோக்கித் தண்டம் சமர்ப்பித்துக் கேட்கிறேன். நமது கல்வி முறையையும் பாட திட்டத்தையும் பாட புத்தகங்களையும் நம் நாட்டுக் குழந்தைகளுக்குத் தகுந்தவாறு, சுதந்திர மடைந்த இந்தியாவின் முன்னேற்றத் துக்குத் தகுந்தவாறு, மாற்றி அமைக்க வேண்டாமா? அதற்கு அவர்கள் பிரயத்தனம்செய்ய வேண்டாமா? (தொடரும்)

வட்ட மேஜை

பாலக்கரை, திருச்சிராப்பள்ளி,
1—5—48.

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு.

திருவாங்கூரிலும் தமிழர் என்றொரு இனமுண்டு என்பதைத் தமிழ்நாட்டாரில் அநேகர் அறியார். அப்பேர்ப் பட்டவர்களுக்கு அவ்வுண்மையைத் தெளிவு படுத்தி வருகிறது பற்றி மகிழ்கிறேன். எங்கள் ஊர் அகஸ்தீசுவரம். நாங்கள் திருவாங்கூர்த் தமிழர். ஆனால் தமிழ்நாட்டார் எங்களை 'மலையாளிகள்' என்றே கருதி வந்தனர். அது எங்களுக்கு மிகவும் மனக்கஷ்டத்தை உண்டு பண்ணியது. எங்களை 'மலையாளிகள்' என்று அழைத்த மக்களுக்கு திருவாங்கூர்த் தமிழரைக் குறித்து எவ்வளவோ எடுத்துரைத்தோம். 'நாங்கள் மலையாளிகளல்ல. திருவாங்கூர்த் தமிழர். எங்கள் தாய் பாஷை தமிழ்' என்று கூறினால் அவர்கள் எங்களைக் கேலி செய்வது தான் வழக்கமாக இருந்து வந்தது! மலையாளத்திலும் தமிழரா? என்று அதிசயப்பட்டனர் போலும்!

அத்தகைய மக்களுக்கு உண்மையை அறிவிக்கத் தங்கள் பத்திரிகையைத் திறந்து 'குமரி முனையின் தமிழர் தவம்' என்ற கட்டுரையைப் படித்துக் காட்டினேம். பலன் கிட்டியது. உண்மை அவர்களுக்குப் புலனாயிற்று!

சிறையில் அடைபட்டதுபோல் வெளியுலகிற்கு அறியாது வாழ்ந்து வந்த திருவாங்கூர்த் தமிழரின் ஒப்பற்ற தமிழன்பையும் தியாக மனப்பான்மையையும் தமிழ்நாட்டாருக்கு வெட்ட வெளிச்சமாக்கி வருவது பற்றி நன்றி செலுத்துகிறோம். குமரி முனையில் தவம் செய்யும் தமிழரின் பிரார்த்தனை விரைவில் நிறைவேற இறைவன் அருள் புரிவாராக!

ஸி. வி. சுலோசனா டானியல்.

தெரூர், நாகர்கோவில்,
24—4—48.

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு.

உங்கள் பத்திரிகையில் திருவாங்கூர் விஷயங்கள் குறிப்பிட்டிருப்பது ஒரு கட்சியின் வாக்குமூலமே. . . . .

திருவிதாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் நாளது வரை பொறுப்பாட்சிப் போராட்டத்தில் பங்கு கொள்ளவில்லை. அதிலிருக்கும் பலர் காங்கிரஸில் தோற்று வந்து சேர்ந்தவர்கள். ஜெயில் வாசம் அறியாதவர்கள். பதவி வேட்டைப் பித்தலாட்டக்காரர்கள். ஜின்னா மத வெறியைக் கிளப்பியதுபோல் இந்த ஸ்தாபனம் பாஷை வெறியைக் கிளப்பி வெற்றி பெற்றது. அது நிலைக்காது. இந்தத் தலைவர்கள் ஒவ்வொருவரும் ஸி. பி. யின் ஆட்சிக் காலத்தில் எங்கிருந்தார்கள், என்ன செய்துகொண்டிருந்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? சென்னை மாகாணத்துடன் தமிழ்ப் பிரதேசம் சேருவதற்குச் சமஸ்தான காங்கிரஸின் முட்டுக்கட்டை காரணம் அல்ல என்பது உங்களுக்குத் தெரியுமா? பொறுப்பாட்சிக்குப் பாடுபட்டு, மாண்டு, ஜெயில் வாசம் அனுபவித்த தியாகி யாராவது தமிழ் நாடு காங்கிரஸில் இருக்கிறாரா என்பது உங்களுக்க்

குத் தெரியுமா? வகுப்பு வாதிகளும், பிற்போக்காளர்களும் நிறைந்த ஸ்தாபனம் அது. இவர்கள் தமிழுக்காக ஒரு துரும்புகூட எடுத்துப் போடாதவர்கள். இது விஷயத்தை நன்கு பரிசீலனை செய்து உண்மை விஷயங்களைப் பிரசுரிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கல்கி அன்பன்,
எஸ். ராம...............

[மிகவும் கடுமையான வசைமொழிகளை நீக்கிவிட்டுக் கடிதத்தை வெளியிட்டிருக்கிறோம். கடிதத்தின் போக்கிலிருந்து கட்சித் துவேஷம் எவ்வளவு தீவிரமடைந்திருக்கிறது என்று தெரிகிறது. சௌந்தராகாரக் கொண்ட இந்தக் கல்கி அன்பருக்கும் இவர் போன்றவர்களுக்கும் ஒரு விஷயம் தெரிவித்துக் கொள்கிறோம். அரசியலிலும் பொது வாழ்க்கையிலும் மனிதர்களுடைய பழைய விருத்தாந்தங்களைக் கிளறிக் கொண்டே இருக்கக் கூடாது. அவ்வப்போது அவர்களுடைய நடவடிக்கைகள் தான் முக்கியமானவை. "தாமிரபரணியில் நேற்று ஏன் தண்ணீர் வரவில்லை? ஆகையால் இன்று வந்திருக்கும் தண்ணீரில் நான் குளிக்க மாட்டேன்" என்று சொன்னால் சொல்லுகிறவனுக்குத்தான் கஷ்டம்; நதிக்கு கஷ்டமில்லை. ஒரு விஷயத்தைப் பற்றி நமக்குச் சந்தேகமே கிடையாது. திருவாங்கூர்த் தமிழர்கள் தமிழ் நாட்டோடு ஐக்கியப்பட வேண்டுமென்று விரும்புவது மிகவும் நியாயமான கோரிக்கை. அதற்காக நடக்கும் இயக்கத்தை யார் நடத்தினாலும் அதைப் பரிபூரணமாக ஆதரிப்பது நம் கடமை எனக் கருதுகிறோம். —ஆசிரியர்.]

நாகர்கோவில்,
23—4—48

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு.

18—4—'48 கல்கி இதழில் "குமரி முனையில் தமிழர் நலம்" என்னும் தலைப்பின் கீழ் ஜெயமணி எழுதிய கட்டுரையைப் படித்தேன்.

திருவிதாங்கூரின் எல்லா முக்கியமான ரோடுகளும் முதல்தரமானவை என்பது உண்மையே. ஆனால் தமிழர் அதிகமாகப் பிரயாணம் செய்யும் நாகர் கோவில் — திருநெல்வேலி ரோடு சீர்கெட்டிருப்பதற்கு மலையாளிகளோ அல்லது சமஸ்தான அரசாங்கமோ பொறுப்பல்ல. நாகர்கோவிலிலிருந்து ஆரல்வாய்மொழிவரை ஐந்து மைல் தூரம் மாத்திரம் சமஸ்தான எல்லைக் குட்பட்டது. பாக்கி 35 மைல்களும் தமிழ்நாட்டைச் சேர்ந்த திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்தது. அதையும் மலையாளிகள்தான் சரிப்படுத்த வேண்டும் என்பது என்ன விபரீதப் போக்கு!

திருவிதாங்கூரில் தமிழர்கள் பிரச்னை வேறு. தி. த. நா. காங்கிரஸ் பிரச்னை வேறு. ஐக்கிய கேரளம் அமையும்போது தமிழர் பெருவாரியாக வாழ்ந்து வரும் பிரதேசம் தமிழ்நாட்டுடன் சேர்க்கப்பட வேண்டும் என்பது தமிழர் பிரச்னை. இது சமஸ்தான காங்கிரஸ் ஒப்புக் கொண்ட விஷயம். ஆனால், திருவிதாங்கூர் மன்னரின் கீழ் ஒரு தனித் தமிழ் மாகாணம் அமையவேண்டும் என்பது தி. த. நா. காங்கிரஸின் கோரிக்கை. அவர்கள் தேர்தல் பிரகடனமும் இதையே குறிப்பிடுகிறது. இதைத்தான் சமஸ்தான காங்கிரசும் தமிழன்பர்களும் எதிர்த்திருக்கிறார்கள்.

தமிழர், திருவிதாங்கூரில் சுமார் 2,000 சதுர மைல் கொண்ட ஒன்பது தாலுகாக்களில் பெருவாரியாக வசிக்கிறார்கள். அதில் 600 சதுர மைல் விஸ்தீரணமுள்ள நாலு தாலுகாக்களில் மாத்திரம் தி. த. நா. கா. வெற்றிபெற்றிருக்கிறது. மற்ற ஐந்து தாலுகாக்களிலும் சமஸ்தான காங்கிரஸ் தமிழர்களே வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

மனத்தில் களங்கமுடையவர்களான தி. த. நா. காங்கிரஸ்காரர்கள் "எங்களுடைய உயிருக்கு எந்த நிமிஷத்திலும் ஆபத்து நேரலாம்" என்று கூறியதிலும் முதலைக் கண்ணீர் வடிப்பதிலும் வியப்பொன்றுமில்லை.

எஸ். ஆர். சாமி.

[ஐக்ய கேரளம் ஏற்படும் வரையில், தமிழர் வாழும் பிரதேசம் திருவாங்கூர் மன்னரின் கீழ் தனித் தமிழ் மாகாணமாக அமைய வேண்டும் என்பது மிக நியாயமான கோரிக்கை. சமஸ்தான காங்கிரஸ் இதை எதற்காக எதிர்க்க வேண்டும்? —ஆசிரியர்.]

வட்ட மேஜைப் பரிசு ரூ. 25

அடுத்த "கல்கி" இதழிலிருந்து "வட்ட மேஜை" என்னும் தலைப்பில் வெளியாகும் நேயர்களின் கடிதங்களில் சிறந்த கடிதத்துக்கு ரூ. 25 பரிசு அளிக்கப்படும்.


நேயர்கள் தங்களுக்குப் பிரியமான எந்த விஷயத்தைப் பற்றியும் எழுதலாம். "கல்கி"யில் வெளியாகும் கட்டுரைகளில் விவாதிக்கப்படும் பிரச்னைகளைப் பற்றியும் எழுதலாம்.

கடிதங்கள் சாதாரணமாக இருநூற்றைம்பது வார்த்தைகளுக்குள் இருப்பது நலம்.

கடிதங்களைப் பிரசுரிப்பதற்கும் பிரசுரியாமல் விடுவதற்கும் நீளமான கடிதங்களைச் சுருக்கிப் பிரசுரிப்பதற்கும் ஆசிரியருக்குப் பூரண உரிமை உண்டு.

வட்ட மேஜைக்கான கடிதம் அனுப்பும் உறையின்மீது தயவு செய்து "வட்ட மேஜை" என்று குறிப்பிடக் கோருகிறோம்.

ஆசிரியர், கல்கி



பதின்மூன்றாம் அத்தியாயம்

வானம் இடிந்தது

ராகவன் பேசத் தொடங்குவதற்கு ஒரு நிமிஷம் ஆயிற்று. பேசத் தொடங்கிய போதும் அவன் கேட்க விரும்பியதை உடனே கேட்க முடியவில்லை. பேச்சை வேறு விதமாக ஆரம்பித்தான்.

"அம்மா! அங்கே யார்? இன்னும் யாராவது வந்திருந்தார்களா? புதிய குரல் ஏதோ கேட்டதே?" என்றான்.

"ஆமாண்டா, அப்பா! பீஹாரிலே பூகம்பம் என்று சொல்லி உண்டிப் பெட்டியுடனே நாலு காந்தி குல்லாக்காரர்கள் வந்தார்கள். உன்னுடைய அப்பாவின் சமாசாரம் தெரியாதா? ஒன்றும் கிடையாது என்று சொல்லி விரட்டி அடித்து விட்டார்!"

இதைக் கேட்டதும் ராகவனுடைய முகம் சுருங்கியதைக் காமாட்சி அம்மாள் கவனித்தாள். ஆனால் அதன் காரணத்தை அவள் நன்கு உணர முடியவில்லை.

சற்று நேரம் ராகவன் முகத்தைத் தொங்கப் போட்ட வண்ணம் இருந்தான். காமாட்சி அம்மாளும் அவனிடம் பேச்சுக் கொடுக்கப் பயந்து கொண்டு சும்மா இருந்தாள். ராகவன் தனக்காகக் காத்திருந்தது இந்தக் கேள்விக்காக அல்ல. இன்னும் ஏதோ முக்கியமான விஷயம் தன்னைக் கேட்கப் போகிறான் என்று அவளுடைய உள்ளுணர்ச்சிக்குத் தெரிந்திருந்தது.

திடீரென்று ராகவன் தலையைத் தூக்கித் தாயாரை எதிரிட்டுப் பார்த்து, "அம்மா! அப்பாவும் நீயுமாகச் சேர்ந்து என் வாழ்க்கையைக் கெடுத்து விட உத்தேசித்திருக்கிறீர்களா? நான் சந்தோஷமாயிருப்பதில் உங்கள் இருவருக்கும் இஷ்டமில்லையா? அப்பாவின் சுயநலம் உன்னையும் பிடித்துக் கொண்டு விட்டதா?" என்று ஆத்திரம் நிறைந்த குரலில் கேட்டான்.

இந்த மாதிரி கேள்வியைத்தான் காமாட்சி அம்மாள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். ஆகையால் அவள் கொஞ்சமும் பரபரப்பு அடையாமல் சாவதானமாகப் பதில் சொன்னாள்.

"ராகவா! உன் அப்பா சமாசாரத்தை என்னிடம் கேட்காதே! என்னைப் பொறுத்தவரையில் கேள், சொல்கிறேன். உன்னைப் பெற்ற நாளிலிருந்து இன்று வரையில், இந்த இருபத்து நாலு வருஷமாக, உன்னுடைய சந்தோஷத்தைத் தவிர எனக்கு வேறு எண்ணமே கிடையாது! உன்னுடைய சந்தோஷத்துக்காக என்னை என்ன செய்ய வேண்டும் என்கிறாயோ, அதைச் சொல்! கிணற்றில் விழச் சொன்னால் விழுந்து விடுகிறேன்; விஷத்தைக் குடிக்கச் சொல்லுகிறாயா, குடித்து விடுகிறேன். ஆனால் உன்னுடைய சந்தோஷத்தைக் காட்டிலும் என்னுடைய சுயநலத்தைப் பெரிய

தாகக் கருதுகிறேன் என்று மட்டும் சொல்லாதேடா அப்பா!" என்று கூறி விட்டுக் காமாட்சி அம்மாள் தன் கண்களில் பொங்கி வந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

மௌனமாகச் சிந்தனையில் ஆழ்ந்திருந்த ராகவனைப் பார்த்துக் காமாட்சி அம்மாள் மறுபடியும், "எதனால் அப்படிக் கேட்டாய், ராகவா! என்ன காரணத்தினால் என்னைச் சுயநலக்காரி என்று சொல்கிறாய்?" என்றாள்.

"எனக்குப் பிடிக்காத பெண்ணை என் தலையில் கட்டிவிடப் பார்க்கிறாயே, அதற்குப் பெயர் என்ன?..." என்று ராகவன் பொருமினான்.

"அப்பா! நீ எவ்வளவோ தெரிந்தவன்; படிப்பிலே இணையில்லையென்று இந்தியா தேசமெங்கும் பேர் வாங்கியவன். அப்படியிருந்தும் என் பேரில் தவறான பழியைப் போடுகிறாயே? உனக்குப் பிடிக்காத பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ளும்படி நான் சொல்வேனா? எப்போதாவது சொன்னதுண்டா? உன் அப்பா ஏதோ வேறுமாதிரியும் சொல்வார். வீடு கட்டிய கடன் பாக்கியை அடைப்பதற்கு உனக்கு வரும் வரதட்சணையை அவர் நம்பியிருக்கிறார். அவர் பணத்தாசை பிடித்தவர் என்பது உனக்குத் தெரியும். ஆனால் நான் எப்போதாவது பணத்தைப் பெரிதாய் நினைத்ததுண்டா? ராகவா! வாசலில் வருகிற ஏழைப் பிச்சைக்காரப் பெண்ணை உனக்குப் பிடித்திருந்து அவளைக் கலியாணம் பண்ணிக்கிறேன் என்று நீ சொன்னால், அதற்கு நான் குறுக்கே நிற்கமாட்டேன். செல்வச் சீமானுடைய பெண்ணைக் காட்டிலும் அவளை அதிக அன்போடு வரவேற்பேன். உனக்குப் பிடிக்காத பெண்ணை ஒருநாளும் கலியாணம் செய்து கொள்ளும்படி சொல்ல மாட்டேன். உன் அப்பா சொல்கிறார் என்று நீ சம்மதித்தால் கூட நான் சம்மதிக்க மாட்டேன்!" என்று காமாட்சி அம்மாள் கூறியபோது அவளுடைய கண்களிலிருந்து மீண்டும் கலகலவென்று கண்ணீர் பொழிந்தது.

"இந்த மாதிரி நீ கண்ணீர் விட ஆரம்பித்தால் நான் உன்னோடு பேசவே தயாராயில்லை. எங்கேயாவது போய்த் தொலைகிறேன். சமுத்திரத்திலே விழுந்து சாகிறேன். இல்லாவிட்டால் ரயில் தண்டவாளத்தில் படுத்துக் கொள்கிறேன்...."

"வேண்டாமடா, ராகவா! வேண்டாம்! இப்படியெல்லாம் சொல்லாதே! நான் இனிமேல் கண்ணீர்விடவில்லை. நீ கேட்க வேண்டியதைக் கேள்; செய்ய வேண்டியதைச் செய்!" என்று கூறிக் காமாட்சி அம்மாள் மீண்டும் நன்றாய்க் கண்ணைத் துடைத்துக் கொண்டாள்.

"நான் சந்தோஷமாயிருப்பதுதான் உன்னுடைய விருப்பம் என்றால், தாரிணியை ஏன் அப்படி விரட்டியடித்தாய்?" என்று ராகவன் மிக்க எரிச்சலுடன் கேட்டான்.


"என்ன சொல்கிறாய், அப்பா! ஐயையோ! இதென்ன வீண் பழி! நானா அந்தப் பெண்ணை விரட்டியடித்தேன்? உண்மையாகச் சொல், ராகவா! நான் விரட்டியடித்தால் அவள் போய்விடக்கூடிய பெண்ணா?"

இந்தக் கேள்வி ராகவனைச் சிறிது திகைக்கச் செய்தது.

"அப்படியென்றால், அவள் ஏன் அவ்வளவு அவசரமாகப் போக வேண்டும்? நான் வெளியே போய்த் திரும்பி வருவதற்குள்ளே அவள் ரயில்வே ஸ்டேஷனுக்குப் பறந்தோடிப் பம்பாய் மெயிலில் ஏறி விட்டாளே? அப்படி அவள் மிரண்டு ஓடும்படி நீ என்ன சொன்னாய்? அம்மா! ஏதோ நீ சொல்லித்தானே இருக்க வேண்டும்?"

"ராகவா! ஆகாசவாணி பூமிதேவி சாட்சியாகச் சொல்கிறேன். அவளை ஒரு வார்த்தைகூட நான் தப்பாகச் சொல்லவில்லை. சொல்லியிருந்தால் அவள் நீ வருகிற வரையில் இருந்து உன்னிடம் புகார் சொல்லியிருக்க மாட்டாளா? அவள் என்ன பட்டிக்காட்டுப் பெண்ணா? படிக்காதவளா? உன் பேரில் அவளுக்கு உண்மையில் அன்பு இருந்தால் அப்படி நான் சொன்னதற்காகப் போய் விடுவாளா? யோசித்துப் பார்!"

ராகவன் கொஞ்சநேரம் யோசித்துப் பார்த்த பிறகு "அம்மா! பின்னே என்னதான் இங்கே நடந்தது, நான்



இல்லாதபோது? நீ என்ன சொன்னாய்? அவன் என்ன சொன்னான்?" என்றான்.

"அவன் சொன்னதை நான் திருப்பிச் சொல்ல வேண்டும் என்கிறாயா? நீயோ நான் கண்ணீர் விடக்கூடாது, அழக் கூடாது என்கிறாய். அவன் சொன்னதைச் சொன்னால் எனக்குக் கட்டாயம் அழுகை வந்து விடுமே, நான் என்ன செய்வேன்?"

"பாதகம் இல்லை, சொல், அம்மா! அப்படி என்ன தான் அவன் சொல்லியிருக்க முடியும்?" என்று ராகவன் ஆவலுடன் கேட்டான்.

"ஐயையோ! அவன் சொன்னதையெல்லாம் என்னால் சொல்ல முடியாது. சொல்வதற்கு என் நாக்குக் கூசும், ராகவா! அவன் என்னமோ நினைத்துக் கொண்டு வந்தானாம் வந்து பார்த்த பின் ரொம்ப ஏமாற்றமாய்ப் போய் விட்டதாம். நானும் உன் அப்பாவும் ரொம்பக் கர்நாடகமாம்! எங்களைப் பற்றி அவன் எது வேணுமானாலும் சொல்லட்டும். உன்னைச் சுத்த அசடு என்று சொன்னான், ராகவா! முதல் கிளாஸி லிருந்து எம். ஏ., பரீட்சை வரையில் முதலாவனாகத் தேறிய உன்னை, பரீட்சைக்குப் பரீட்சை மெடலும் பரிசும் வாங்கிய உன்னை, 'அசடு' என்று சொன்னான், ராகவா! அதுதான் எனக்குப் பொறுக்கவில்லை. புடவை கட்டிக் கொண்ட பெண் யாரைப் பார்த்தாலும் நீ பின்னோடு பல்லைக் காட்டிக் கொண்டு போகிறாயாம்! உனக்கு நல்ல புத்தி சொல்லி அடக்கி வைக்கும்படி சொல்லிவிட்டுப் போவதற்காக மதராஸுக்கு வந்தானாம். இன்னும் என்னவெல்லாமோ கன்ன கடூரமாகச் சொன்னான். என்னால் பொறுக்கவே முடியவில்லை!" என்று சொல்லிக் கண்களைப் புடவைத் தலைப்பினால் மூடிக்கொண்டு காமாட்சி அம்மாள் அழுது விம்மினாள்.

ராகவனுக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது. ஆனால் கோபம் அம்மாவின் பேரில் வந்ததா, தாரிணி

யின் பேரில் வந்ததா என்பது அவனுக்கே சரியாக விளங்கவில்லை.

தாரிணியின் கடிதத்தில் எழுதியிருந்த ஒரு விஷயம் ராகவனுக்குச் சட்டென்று ஞாபகம் வந்தது.

“அழுகையை நிறுத்து, அம்மா! இன்னும் ஒரே ஒரு கேள்விக்கு மட்டும் பதில் சொல்! தாரிணியின் கால்களை எதற்காவது நீ தொட்டதுண்டா? தொட்டு அவளை ஏதாவது கேட்டாயா?” என்றான் ராகவன்.

“ஓகோ! அதை அவள் உனக்கு எழுதியிருக்கிறாளா? என்னவெல்லாம் பொய், புனை சுருட்டுச் சேர்த்து எழுதியிருக்கிறாளோ, அது எனக்குத் தெரியாது. ஆனால் நான் நடந்ததை உள்ளது உள்ளபடி சொல்கிறேன். அவள் என்னைப் பற்றி அலட்சியமாய்ப் பேசிய பிறகு எனக்குக் கொஞ்சம் பயமாய்ப் போய் விட்டது. அதனால் நான் அவளிடம், ‘பெண்ணே! என் பிள்ளைக்கு இந்தப் பக்கத்தில் ஆயிரம் பேர் இருபதினாயிரம், முப்பதினாயிரம் பணத்துடன் பெண்ணைக் கொடுக்கக் காத்திருக்கிறார்கள். ஆனால் ராகவனுக்கு உன்னைத்தான் பிடித்திருக்கிறது. எப்படியாவது அவன் சந்தோஷமாயிருக்க வேண்டுமென்பதுதான் என் பிரார்த்தனை. உன்னை அவன் கலியாணம் செய்து கொள்வதை அவன் அப்பா ஆட்சேபித்தாலும் நான் ஆட்சேபிக்க மாட்டேன். சாதி, குலம், நடவடிக்கை எல்லாம் வித்தியாசமாயிருந்தாலும், ஏதோ எங்கள் பாஷையையாவது நீ பேசுகிறாயே, அதுவரையில் சந்தோஷந்தான். ஒரே ஒரு பிரார்த்தனை உனக்குச் செய்து கொள்கிறேன். என்னையும் என் குழந்தையையும் நீ பிரித்து விடாதே! அவன் ஒருவனுக்காகத்தான் இந்த உயிரை நான் வைத்துக் கொண்டிருக்கிறேன். அவன் நன்றாயிருக்க வேண்டுமென்றுதான் அல்லும் பகலும் அனவரதமும் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியைத் தியானித்துக் கொண்டிருக்கிறேன். அவனும் நீயும் எங்கே போனாலும் எங்கே இருந்தாலும் என்னையும் உங்களோடு அழைத்துக்கொண்டு போ! உங்கள் இருவருக்கும் பணிவிடை செய்து கொண்டிருப்பதுதான் எனக்கு இந்த வாழ்க்கையில் இனி மேல் சந்தோஷம்! இந்த ஒரு வரத்தை எனக்குக் கொடு! உன் காலில் விழுந்து கேட்டுக் கொள்கிறேன்!’ என்று சொல்லி அவளுடைய காலைத் தொட்டேன். அதற்குப் பின் ‘டாம்! இடியட்!’ என்றெல்லாம் உன் அப்பா திட்டுவது போல் என்னைத் திட்டினாள். அதோடு, ‘உங்களுக்கு வயதாச்சே! புத்தி எங்கே போச்சு! நானோ சாதி, மதம் ஒன்றும் இல்லாதவள். கர்நாடக வைதிகமாகிய உங்களுக்கும் எனக்கும் எப்படிச் சரிக்கட்டி வரும்? உங்கள் பிள்ளைக்கு கொஞ்சம் புத்தி சொல்லித் திருத்துங்கள்!’ என்று சொல்லி விட்டு விடுவிடு என்று போய் விட்டாள். அப்பா, ராகவா! நான் சொல்லுவதை நம்புவது உனக்குக் கஷ்டமாய்த்தானிருக்கும். அவள் ஏன் அப்படி அவசரப்பட்டுக் கொண்டு போனாள் என்று எனக்கே புரியவில்லை. அவள் இங்கே இருந்தபோது யாரோ ஒருவன் வந்து கதவை இடித்து, ‘தாரிணி அம்மாள் இங்கே இருக்கிறாளா?’ என்று கேட்டான். இவள் அவசரமாய் எழுந்து போய் ஒரு கடிதத்தை வாங்கிக் கொண்டு வந்தாள். கடிதத்தைப் படித்ததும் அவள் முகத்தில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. ‘நான் போய் வருகிறேன். உங்கள் பிள்ளையைக் கெடுத்து விடுவேன் என்று பயப்பட வேண்டாம்’ என்று சொல்லிக் கொண்டே அவசரமாய் நடந்து வாசலில் நின்ற காரில் ஏறிக் கொண்டு போய் விட்டாள். போகும் அவசரத்தில் அவளுக்கு வந்த கடிதத்தைக் கூடக் கீழே போட்டு விட்டுப் போய் விட்டாள். அதை நான் எடுத்து வைத்திருக்கிறேன். நீ வேணுமானால் அதைப் பார்!” என்று சொல்லிக் கொண்டே காமாட்சி அம்மாள் எழுந்து போய் அலமாரியில் பத்திரப்படுத்தி வைத்திருந்த ஒரு கடிதத்தை எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தாள். ராகவன் அந்தக் கடிதத்தை வாங்கிக் கைகள் நடு நடுங்க நெஞ்சு படபடவென்று அடித்துக் கொள்ளப் படித்துப் பார்த்தான். அதில் சுருக்கமாக நாலைந்து வரிகள் தான் எழுதியிருந்தன.

“என் கண்ணே! என்னுடைய காரியம் நான் நினைத்ததைக் காட்டிலும் சீக்கிரம் ஆகிவிட்டது. இன்று மாலை மெயிலில் அவசியம் பம்பாய் புறப்பட வேண்டும். உடனே

தோட்டத்துக்கு வர முடியாவிட்டால், ரயில் ஸ்டேஷனில் வந்து சேர்ந்து கொள். உனக்கும் டிக்கட் வாங்கி விடுகிறேன். மிஸ்டர் ராகவன் காதல் தமாஷ் எப்படி இருக்கிறது? உன் கையில் உள்ள பணத்தைப் பத்திரமாய்க் கொண்டு வா! ராகவனுக்கு ஏற்கனவே இரண்டாயிரம் ரூபாய் அபராதம் விதித்தது போதும். இன்னும் அவனுக்குத் தண்டம் வைக்காதே! ஏதாவது விபரீதத்தில் வந்து முடியப் போகிறது!''

இதைப் படித்து வருகையில் ராகவனுடைய கண்கள் செக்கர் வானம் போலச் சிவந்து நெருப்புப் பொறி பறந்தது. அவனுடைய நெஞ்சில் எரிமலை வெடித்து நெருப்பைக் கக்கியது; கொல்லன் துருத்தியில் வரும் காற்றைப் போல் அவனுடைய மூச்சு கொதித்துக் கொண்டு வந்தது.

கடிதத்தைப் படித்து முடித்ததும் ஆகாசம், பூமி, திக்குத் திகாந்தம் எல்லாம் தாறுமாறாக வெடித்தன. பட்டப் பகலில் இருள் கவிந்தது. வானத்துக் கிரகங்களும் நட்சத்திரங்களும் பொல பொலவென்று உதிர்ந்து ராகவன் தலைமீது விழுந்தன.

இத்தகைய உணர்ச்சிகளுக்கெல்லாம் உள்ளான ராகவன் சற்று நேரம் ஸ்தம்பித்து உட்கார்ந்து விட்டுத் திடீரென்று எழுந்தான். அம்மாவின் முன்னிலையில் தரையில் விழுந்து சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தான்.

"அம்மா! என்னைப் போல் சர்வ மூடன் யாரும் இல்லை. தாரிணி சொன்னது சரிதான். அந்த மூதேவியின் காலைப் பிடிக்கும்படியான நிலையில் உன்னை வைத்தேன் அல்லவா? என்னைப் போல் அசடு யார்? அம்மா! இந்த க்ஷணம் முதல் நீதான் எனக்குத் தெய்வம். நீ என்ன சொல்கிறாயோ அதைக் கேட்கிறேன். நீ யாரைக் கலியாணம் செய்து கொள்ளச் சொல்கிறாயோ, அவளையே கலியாணம் செய்து கொள்கிறேன்!'' என்றான்.

இவ்விதம் சொல்லிவிட்டுக் கையில் உள்ள கடிதத்துடன் விடு விடு என்று நடந்து மச்சுக்குப் போனான். அங்கே மேஜை மேலே இருந்த தாரிணியின் கடிதத்தையும் தாரிணிக்குத் தான் எழுத ஆரம்பித்திருந்த கடிதத்தையும் தாயார் தன்னிடம் கொடுத்த கடிதத்தையும் சேர்த்துச் சுக்குச் சுக்குச் சுக்காகக் கிழித்துக் குப்பைக் கூடையில் போட்டான்.

காமாட்சி அம்மாள் பூஜை அறைக்குள்ளே சென்று ஸ்ரீ ராமபட்டாபிஷேக படத்துக்கு முன்னால் பயபக்தியுடன் நமஸ்காரம் செய்து எழுந்தாள். இரண்டு கன்னத்திலும் போட்டுக் கொண்டாள்.

பதினாறாம் அத்தியாயம்

வண்டி வந்தது

இந்தக் கதையின் வாசகர்களை இப்போது நாம் பம்பாய்க்கு அழைத்துச் செல்ல வேண்டியதாயிருக்கிறது. அடிக்கடி இது ஒரு கதை தான் என்பதை நாம் ஞாபகப்படுத்தி வருவதையும் வாசகர்கள் கவனித்திருப்பார்கள் என்று நம்புகிறோம். 'கதை' என்பது ஞாபகம் இல்லாவிட்டால் 'அது அவ்வாறு நடந்திருக்குமா!' 'இது இப்படி நடந்திருக்குமா?' 'அவன் அப்படிச் சொல்லியிருப்பானா?' 'இந்த சம்பவம் இந்த ஊரில் நடக்கக் கூடியதா?' என்றெல்லாம் கேட்கத் தோன்றலாம். கதை என்றால் எது எப்படி வேண்டுமானாலும் நடக்கலாம் அல்லவா? முக்கியமாக, இந்தக் கதையில், பல சம்பவங்கள் அப்படியெல்லாம் கேட்கத் தோன்றுமாறு நடைபெறுமென்று எச்சரித்து விடுகிறோம். வாசகர்கள் நம்மோடு பம்பாய்க்கு மட்டுமல்ல,—கல்கத்தாவுக்கும் கராச்சிக்கும் டில்லிக்கும் லாகூருக்கும் கூட வரவேண்டியதாயிருக்கும். ஒரே நாளில் ஒரே நேரத்தில் அவ்வளவு தூர தூரமான இடங்களில் இருந்து கொண்டு அங்கங்கே நடக்கும் சம்பவங்களைக் கவனிக்கும்படியாகவும் நேரிடக் கூடும்!

பம்பாய் நகரின் ஒரு பகுதியான தாதரில் அடையாளங் கண்டுபிடிக்க முடியாத ஒரு வீதி. அடையாளங் கண்டு பிடிக்க முடியாத ஒரு வீடு. பல வீதிகள் ஒரே மாதிரியாயிருப்பதாலும் பல வீடுகள் ஒன்றைப் போல் இன்னொன்று இருப்பதாலும் அடையாளங் கண்டு பிடிக்க முடியாதவை

என்று சொன்னோம். நாம் குறிப்பிடும் வீடு ஐந்து மாடிக் கட்டிடம். அதைப் போல் அந்த வீதியின் இருபக்கங்களிலும் அநேக கட்டிடங்கள் இருந்தன. ஒன்றைப்போல ஒன்று அச்சில் வார்த்தது போல் தோற்றமளித்தன. வீதி முனையிலிருந்து மூன்றாவது வீடு நாம் குறிப்பிடும் வீடு என்று அடையாளம் வைத்துக் கொள்வோம். அந்த வீட்டில் ஒவ்வொரு மாடியிலும் பத்து குடித்தனங்கள் வீதம் மொத்தம் ஐம்பது குடித்தனங்கள்; ஜனத் தொகை மொத்தம் மூந்நூறுக்குக் குறைவு இல்லை. ஒவ்வொரு குடித்தனமும் இரண்டு அறைகளிலோ மூன்று அறைகளிலோ குடியிருந்தன. குடியிருக்கும் அறைகளைத் தவிர ஒரு குளிக்கும் அறையும் உண்டு.

அந்த வீட்டின் நாலாவது மாடியில் மூன்று அறைகளும் ஒரு குளிக்கும் அறையும் சேர்ந்த ஜாகையில் கிட்டாவய்யரின் சகோதரி ராஜம்மாள் சென்ற இருபது வருஷ காலமாக வசித்து வந்தாள். ஹிந்து சமூகப் பெண் குலத்தின் உத்தம குணங்கள் எல்லாம் ஒருங்கு சேர்ந்து உருவெடுத்தாற்போன்ற அந்த மாதரசி கல்யாணமாகிக் கணவனைக் கைப்பிடித்துப் பம்பாய்க்கு வந்த பிறகு அந்த மூன்று அறைகளுக்குள்ளேயே தன்னுடைய ராஜ்ய பாரத்தைச் செலுத்திவந்தாள். இருபது ஆண்டு இல் வாழ்க்கையின் இன்ப துன்பங்களையெல்லாம் அந்த மூன்று அறைகளுக்குள்ளேயே அவள் அனுபவித்தாள். குழந்தைகளைப் பெற்று வளர்த்ததும் அங்கேதான்; குழந்தைகளைப் பறிகொடுத்து விட்டு அலறி அழுததும் அங்கேதான். கணவனுடனே கூடிக் குலாவிச் சிரித்துக் களித்ததும் அங்கே தான். கணவனுடைய விசித்திர நடவடிக்கைகளை எண்ணி உள்ளம் வெதும்பி இதயம் வெடித்துக் கண்ணீர் பெருக்கியதும் அதே இடத்தில்தான்.



அந்த மூன்று அறைகளில் ஒன்றிலே தற்சமயம் ராஜம்மாள் படுத்த படுக்கையாகி, பிழைப்போம் என்ற நம்பிக்கையையும் இழந்து, இருபது தினங்களுக்கு மேலாகப் படுத்திருந்தாள். வீட்டில் வைத்திய சிகிச்சைக்கும், பணிவிடைக்கும் அவ்வளவு வசதி போதாது என்று அவளை ஆஸ்பத்திரியில் சேர்ப்பதாக அவளுடைய கணவர் துரைசாமி எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். ஆஸ்பத்திரிக்குப் போக ராஜம் கண்டிப்பாக மறுத்து விட்டாள். "இருபது வருஷமாக இருந்த இடத்திலேயே இருந்து கண்ணை மூடுகிறேன்; ஆஸ்பத்திரிக்குப் போக மாட்டேன்" என்று பிடிவாதமாகச் சொல்லி விட்டாள்.

பத்து வருஷத்துக்கு முன்னால் ஒரு மகாராஷ்டிர வேலைக்காரி வீட்டுச் சில்லறை வேலைகள் செய்வதற்காக வந்தாள். ராஜத்தை அவளுக்கு ரொம்பப் பிடித்து விட்டது. வீட்டு வேலைகளை எல்லாம் அவளே இப்போது செய்தாள். ராஜம் படுத்துக்கொண்ட

பிறகு வீட்டு வேலைகளைப் பார்த்துக் கொண்டதோடு ராஜத்துக்குக் கஞ்சி வைத்துக் கொடுப்பது மருந்து கொடுப்பது முதலிய காரியங்களையும் அந்த வேலைக்காரியே செய்து வந்தாள். கூடிய வரையில் குழந்தை சீதா அவளுக்கு உதவி புரிந்து வந்தாள்.

சீதா பள்ளிக்கூடம் போவதை நிறுத்தி ஒரு வருஷம் ஆயிற்று. ராஜம்மாள் மிக்க முன் யோசனையுடன் குழந்தையை எந்த மாதிரி இடத்தில் கலியாணம் செய்து கொடுக்க வேண்டியிருக்குமோ என்னமோ என்று எண்ணி அவளைச் சமையல் முதலிய வீட்டு வேலைகளுக்குப் பழக்கப் படுத்திக் கொண்டு வந்தாள். அது இப்போது மிக்க சௌகரியமாயிருந்தது.

இதோ இந்தக் குறுகலான மாடி வராந்தாவில் கைப்பிடிச் சுவர் ஓரமாக நின்று கீழே வீதியைக் குனிந்து பார்த்துக் கொண்டிருப்பது யார்?-சந்தேகம் என்ன? அகன்று விரிந்த அவளுடைய வட்ட வடிவமான கண்களிலிருந்தே தெரிந்து விடுகிறதே! லலிதாவின் அருமை அத்தங்காள் சீதாதான் அவ்வளவு ஆவலுடன் வீதியைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

ஏதேனும் சந்தேகம் இருந்தாலும் அடுத்த நிமிஷமே தீர்ந்து விடுகிறது. உள்ளே இருந்து "சீதா!" என்று ஒரு தீனக்குரல் கேட்கிறது. "அம்மா! இதோ வந்து விட்டேன்!" என்று வீணைக் குரலில் கூவிக்கொண்டு சீதா உள்ளே ஓடுகிறாள். மூன்று அறைகளில் ஒன்றில் படுத்திருக்கும் தாயார் அருகே செல்கிறாள். "சீதா! ஏதோ கார் சத்தம் கேட்டதே!" என்று ராஜம்மாள் தன் மெலிந்த முகத்திலே ஆர்வம் ததும்பக் கேட்கிறாள். "இல்லை, அம்மா! அது வேறு எங்கேயோ போகிற கார். இன்னும் நேரமாகவில்லை, அம்மா! ரயிலே இப்போது தான் வந்திருக்கும்! ஸ்டேஷனி



விருந்து இங்கே வரக் கால்மணி நேரமாவது வேண்டாமா? இப்படி அவசரப்பட்டால் என்ன செய்கிறது?" என்று கல கலவென்று வார்த்தைகளைக் கொட்டுகிறாள் சீதா.

இதற்குள் மறுபடியும் கார் சத்தம் கேட்கவே சீதா வராந்தாவுக்கு ஓடி வந்து வீதிப்புறம் எட்டிப் பார்த்தாள். ஒரு மோட்டார் வந்து அந்த வீட்டு வாசலில் நின்றது. "அம்மா! மாமா வந்தாச்சு! நான் கீழே போய் அழைத்து வருகிறேன்!" என்று கூவிக் கொண்டே சீதா மாடிப் படிகளின் வழியாக ஒரே எட்டில் இரண்டு மூன்று படிகளைத் தாண்டிக்கொண்டு இறங்கினாள். இரண்டு மச்சு இறங்கியதும் கையில் தோல் பையுடன் டாக்டர் வருவதைப் பார்த்துத் தயங்கி நின்றாள். "டாக்டர்! உங்கள் காரா இப்போது வந்தது? ஊரிலேயிருந்து மாமா வந்து விட்டாராக்கும் என்று நினைத்தேன்!" என்றாள். "ஓகோ! உன் மாமா இன்றைக்கு வருகிறாரா? அவர் வந்த பிற்பாடாவது உன் அம்மாவுக்கு உடம்பு சரியாகிறதா, பார்ப்போம்!" என்றார் டாக்டர். வழக்கம்போல் சீதா டாக்டர் கையிலிருந்த தோல் பையை வாங்கிக் கொண்டாள். பிறகு இருவரும் மௌனமாக மேலே ஏறி வந்தார்கள்.

நாலாவது மாடி வராந்தாவுக்கு வந்ததும் சீதாவின் ஆவல் அவளை மறுபடியும் வீதிப் பக்கம் எட்டிப் பார்க்கச் செய்தது. அச்சமயம் ஒரு கோச்சு வண்டி வந்து அந்த வீட்டு வாசலில் நின்றது. அந்த வண்டியிலிருந்து தன் தகப்பனாரும் மாமாவும் இறங்குவதைச் சீதா பார்த்தாள். உடனே சீதாவின் மௌனம் கலைந்து விட்டது. "அம்மா! அம்மா! மாமா வந்தாச்சு! நிஜமாகவே வந்தாச்சு!" என்று கூவிக் கொண்டு உள்ளே போனவள், "முதலில் வந்தது மாமா இல்லை, அம்மா! டாக்டர் வந்தார்! நான் மாமா தானாக்கும் என்று நினைத்துக்கொண்டு அழைத்து வருவதற்கு ஓடினேன். கையிலே தோல் பையுடன் டாக்டர் வந்து சேர்ந்தார். அவரை அழைத்துக் கொண்டு மேலே வந்தேன். மேலே வந்ததும் வீதியில் பார்த்தால், அப்பாவும் மாமாவும் கோச்சு வண்டியில் வந்து இறங்குகிறார்கள். ஒரு டாக்ஸி வைத்துக் கொண்டு வரக் கூடாதோ? அதனால்தான் இவ்வளவு தாமதம்!..." என்று அலாரம் கடிகாரம் மணி அடிப்பது போலப் பொழிந்தாள் சீதா.

"அதனால் என்ன, சீதா? ஒரு வேளை டாக்ஸி கிடைத்திராது. நீ மறுபடியும் கீழே போக வேண்டாம், அம்மா! இங்கேயே டாக்டருக்கு ஒத்தாசையாயிரு! அவர்கள் வந்து விடுவார்கள்!" என்றாள் ராஜம்.

சீதா கொஞ்சம் அதிருப்தியுடன் அங்கேயே இருந்தாள். டாக்டர் வழக்கம் போலத் தர்மாமீட்டர் வைத்துப் பார்த்தார்; முதுகிலே குழாயை வைத்துப் பார்த்தார்; தொண்டைக்குள் டார்ச் விளக்குப் போட்டுப் பார்த்தார். எல்லாம் பார்த்து விட்டு, 'பிரிஸ்க்ரிப்ஷன்' மாற்றி எழுதிக் கொண்டிருக்கும் சமயத்தில் துரைசாமியும் கிட்டாவய்யரும் வந்து விட்டார்கள்.

ராஜத்தைப் பார்த்ததும் கிட்டாவய்யர் திகைத்துப் போனார்.

கிராமத்தை விட்டுப் புறப்படும் போது கிட்டாவய்யர் உற்சாகக் குறைவுடன் கிளம்பினார். ஆனால், சென்னையில் பத்மலோசன சாஸ்திரி வீட்டுக்குப் போய் 'மாப்பிள்ளைப் பையனை'ப் பார்த்ததின் காரணமாக அவருக்குக் கொஞ்சம் உற்சாகம் ஏற்பட்டிருந்தது. வரன் நிச்சயமானதாகவே வைத்துக் கொள்ளலாம் என்று சுப்பய்யர் உறுதி சொல்லியிருந்தார். ஆகவே சென்னையிலிருந்து பம்பாய்க்குப் புறப்பட்டபோது கிட்டாவய்யர் உற்சாகமாயிருந்தார். அந்த உற்சாகங் காரணமாக, 'ராஜத்துக்கு அப்படி ஒன்றும் உடம்பு அதிகமாயிராது. சரசு சொன்ன மாதிரி கொஞ்சம் அதிகப்படுத்தியே கடிதத்தில் எழுதியிருக்கலாம்' என்று அவருடைய மனம் எண்ணத் தொடங்கியது.

ஸ்டேஷனில் அவரைச் சந்தித்த துரைசாமியும் 'காபரா'ப் படுத்தும் முறையில் ஒன்றும் சொல்லவில்லை.

ஆகவே, பல நாள் காய்ச்சலினால் உலர்ந்து மெலிந்து போயிருந்த ராஜத்தைத் திடீரென்று பார்த்ததும் கிட்டா

வய்யரின் அன்பு நிறைந்த உள்ளம் பெரும் துன்பத்துக்கு உள்ளாயிற்று. ராஜத்தின் உடல் மெலிவு மட்டுமல்ல; அவளுடைய முகத் தோற்றத்தில் பிரதிபலித்த ஏதோ ஒரு அம்சம், 'இவள் பிழைப்பது துர்லபம்' என்ற எண்ணத்தைக் கிட்டா வய்யரின் மனதில் உண்டாக்கியது. அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டு 'ராஜம் பிழைப்பாள்' என்று உறுதி பெற விரும்பியவராய், கண்ணீர் ததும்பிய கண்களுடன் கிட்டாவய்யர் டாக்டரை நோக்கினார்.

ஒரு வருஷத்துக்கு முன்னால் வந்திருந்தபோதே பழக்கப்பட்ட டாக்டர் தானாகையால், "என்ன, டாக்டர்! ராஜத்துக்கு உடம்பு எப்படியிருக்கிறது?" என்று கேட்டார்.

"நீங்கள் இன்று வந்து விட்டீர்கள் அல்லவா? இனிமேல் ஒருவேளை சீக்கிரம் குணமாகிவிடும். உங்கள் சகோதரிக்கு உடம்புக் கோளாறு காற்பங்கு; மனக் கோளாறு முக்காற் பங்கு. 'எனக்கு உடம்பு சொஸ்தமாகாது' என்று இந்த அம்மாள் திடமாகத் தீர்மானம் செய்து கொண்டிருக்கிறாள். நான் மருந்து கொடுத்து என்ன பயன்? நீங்கள் கொஞ்சம் பிரயத்தனம் செய்து உங்கள் சகோதரிக்கு மனோ தைரியம் உண்டாக்குங்கள். அப்போது உடம்பும் சரியாய்ப் போய்விடும்."

இவ்விதம் சொல்லி விட்டு டாக்டர் புறப்பட்டார். அவரைக் கொண்டு போய் விடுவதற்காகத் துரைசாமியும் கூடச் சென்றார்.

கிட்டாவய்யர் தம் அருமைச் சகோதரியின் அருகில் சென்று உட்கார்ந்து, "ராஜம்! டாக்டர் சொன்னதைக் கேட்டாயல்லவா? தைரியமாயிருக்க வேண்டும், அம்மா! வீணாக மனதை அதைரியப் படுத்திக் கொள்ளக் கூடாது!" என்றார்.

"அண்ணா! டாக்டர் சொல்லுவதை நீ நம்புகிறாயா? என்னைப் பார்த்தால் பிழைப்பேன் என்று தோன்றுகிறதா?" என்று ராஜம் நேரடியாகக் கேட்டதும் கிட்டா வய்யரால் பதில் ஒன்றும் சொல்ல முடியவில்லை. இது வரைக்கும் அவருடைய கண்களில் ததும்பிக் கொண்டிருந்த கண்ணீர் இப்போது கல கல வென்று கொட்டியது. அங்கவஸ்திரத்தினால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, "நானே உன்னை அதைரியப் படுத்துகிறேன்! இத்தனை நாளும் உன்னைக் கவனியாமல் இருந்து விட்டேனே என்பதை நினைத்தால் எனக்குத் துக்கம் பொங்கி வருகிறது" என்றார்.

"அண்ணா! உன் பேரில் என்ன தவறு? இத்தனை நாளும் என்னை நீ கவனித்து ஆகக்கூடியது ஒன்றுமில்லை. என்னுடைய விதிக்கு நான் பிறந்தவள். நீ என்ன செய்வாய்? ஒரு வேளை நீ இப்போது வராமல் இருந்து விடுவாயோ என்றுதான் பயந்து கொண்டிருந்தேன். எப்படியாவது நீ வருகிற வரையில் உயிரோடு என்னை வைத்திருக்க வேண்டும் என்றுதான் பகவானைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தேன். நல்ல வேளையாக நீ வந்து விட்டாய். என் மனதிலுள்ளதை உன்னிடம் சொல்லி விட்டால், பாரம் தீர்ந்தது. அப்புறம் நிம்மதியாகக் கண்ணை மூடிப் பரமாத்மாவின் பாதாரவிந்தத்தை அடைவேன்!"

பீறி வந்த துக்கத்தையும் விம்மலையும் அடக்கிக் கொண்டு கிட்டாவய்யர், "சீ, பைத்தியமே! இது என்ன இப்படிப் பேசுகிறாய்? அதெல்லாம் உனக்கு ஒன்றும் வராது. சீதாவுக்குக் கலியாணம் பண்ணிப் பேரன் பேத்திகள் பெற்றெடுத்துச் சௌக்யமாயிருப்பாய்!" என்றார்.

அவநம்பிக்கையைக் குறிப்பிடும் சோகப் புன்னகை புரிந்தாள் ராஜம். மரணச் சாயல் படர்ந்திருந்த அவளுடைய முகத்துக்கு அந்தப் புன்னகை ஒரு கணம் உயிர் ஒளி அளித்தது.

அந்த அறையின் கதவண்டை சீதா கண்ணீருடன் நின்று தங்களுடைய சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருப்பதை ராஜம் கவனித்தாள். கையினால் சமிக்ஞை செய்து அவளை அருகில் அழைத்தாள்.

"சீதா! ஊரிலேயிருந்து மாமா வந்திருக்கிறாரே? காப்பி போட்டுக் கொடுக்க வேண்டாமா?" என்று ராஜம்மாள் சொன்னதும், சீதா "இதோ ஒரு நிமிஷத்தில் போட்டுக் கொண்டு வருகிறேன் அம்மா!" என்று சமையலறைப் பக்கம் ஓடினாள்.



திருவாங்கூர்த் தமிழர் தலைவர்கள் :

1. ஸ்ரீ பி. தாணுலிங்க நாடார், பி. ஏ. பி. எல்., அரசியல் நிர்ணய சபை அங்கத்தினர். 2. ஸ்ரீ ஏ. என். சத்தியநேசன், ஆசிரியர், "பாரதி", மலையாளம் தினசரி, திருவனந்தபுரம். 3. ஸ்ரீ வி. தாஸ், அ. தி. சபை அங்கத்தினர். 4. ஸ்ரீ கே. ராமன் பிள்ளை, அ. தி. சபை அங்கத்தினர். 5. ஸ்ரீ ஆர். செல்லசாமி நாடார், பி. ஏ. பி. எல்., அ. தி. சபை அங்கத்தினர். 6. ஸ்ரீ டி. கோச்சு கிருஷ்ண பிள்ளை, அ. தி. சபை அங்கத்தினர்.

குமரி முனையில் தமிழர் தவம்

ஜெயமணி



போலீஸார் சுட்டதில் தோட்டா தொடையில் பாய்ந்து முடமான ஓர் ஏழை விவசாயி.

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களைப் பார்த்து வந்தாலன்றிக் குமரி முனைப் பிரயாணம் பூர்த்தி அடைந்ததாகுமா? அது போலவே, கவிமணி அவர்களின் கருத்துக்களைக் குறிப்பிட்டாலன்றித் திருவாங்கூர்த் தமிழர்களைப் பற்றிய கட்டுரையும் முற்றுப் பெறுவதாகாது அல்லவா?

நாகர்கோவிலை அடுத்துள்ள புத்தேரியில் வசிக்கும் கவிமணியின் இல்லத்துக்கு நானும் மற்றும் இரண்டு அன்பர்களுமாகச் சென்றோம். நோய்வாய்ப்பட்டுள்ள கவிமணி எங்களைக் கண்டதும் மிகுந்த சிரமத்துடன் எழுந்து உட்கார்ந்தார். எனவே, அந்தப் பெரியாருடன் ஐந்து அல்லது பத்து நிமிஷங்களுக்கு மேல் பேசி அவருக்குக் கஷ்டத்தைக் கொடுக்கக் கூடாது என்று தீர்மானம் செய்து கொண்டேன்.

அவ்வளவு சிரமத்திலும் கவிமணி அவர்களுடைய அகத்தின் அன்பு முகத்தில் பிரகாசித்தது. அதிலும் குறிப்பாக, திருவாங்கூர்த் தமிழர்களின் இயக்கத்தைப் பற்றிப் பிரஸ்தாபம் எழுந்தபோது, அந்தப் பெரியாருக்கு ஏற்பட்ட உற்சாகத்தைப் பார்க்க வேண்டுமே! நோயின் சிரமம் எங்கேயோ பறந்தோடி விட்டது!

“தமிழ் நாட்டுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்பவர் யார்? அந்தப் பிரசைபதியை இப்படிக் கொண்டு வந்து நிறுத்துங்கள்!” என்றார் கவிமணி.

மலையாளம், கொச்சி, திருவாங்கூர் இந்த மூன்றும் அடங்கிய சேர நாட்டையும், சோழ நாட்டையும், பாண்டிய நாட்டையும் ஆண்ட சேர, சோழ, பாண்டியர்கள் அந்த கால முதல் தமிழ்நாட்டு மூவேந்தர் என்றே வழங்கப்படுகின்றனர்.

தமிழர் பகுதிகள் மாத்திரமல்ல, மலையாளிகளின் பகுதிகளும் தமிழ் நாட்டுடன் இணைக்கப்பட வேண்டும் என்று சொல்வதில் கூடத் தவறு ஏதும் இல்லையென்பது கவிமணி காட்டிய ஆதாரங்களிலிருந்து தெளிவாயிற்று.

“ஆதியில் மலையாளம் என்று ஒரு தனி பாஷை இருக்கவில்லை. தமிழ்ப் பாஷையை மூக்கால் பேசினால் அது மலையாளம் ஆகிவிடுகிறது!” என்று கவிமணி கூறியதைக் கேட்டு எல்லோரும் சிரித்தோம்.

மேற்கே அடிக்கடி மழை பெய்யுமாதலால், தமிழர்கள் அந்தப் பிரதேசங்களில் குடியேறியபோது அவர்களை ஜலதோஷம் பிடித்துக் கொண்டது. எனவே அவர்கள்

மூக்கால் பேசவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதன் விளைவாக 'எங்கள்' என்பது 'ஞெங்ஙள்' என்றும், தேங்காய் 'தேங்ஙாய்' ஆகவும், மாங்காய் 'மாங்ஙாய்' ஆகவும் மாறின. தமிழர்கள் மூக்கால் பேசிய அந்தப் பாஷையும் சம்ஸ்கிருதமும் சேர்ந்து மலையாள பாஷையாக மாறியது.

இவ்வாறு கவிமணி கூறியது வேடிக்கையான கற்பனை அல்லவென்பதையும் மேற்கொண்டு அப்பெரியார் எடுத்துக் காட்டிய ஆதாரங்களிலிருந்து தெரிந்துகொண்டேன்.

அதாவது ஸ்ரீ எம். ஸ்ரீனிவாச ஐயங்கார் எழுதியுள்ள "தமிழ் ஆராய்ச்சிகள்" என்ற அரிய நூலில் தமிழும் சம்ஸ்கிருதமும் சேர்ந்து மலையாள பாஷை ஆகிறது என்பது நிரூபிக்கப் பட்டிருப்பதையும் கவிமணி எடுத்துக் கூறினார்.

* * *

திருவாங்கூரிலுள்ள தமிழர் பகுதிகள் பல தாலூக்காக்களாக இருக்கின்றன. எனினும், நாஞ்சிநாடு என்பது அவற்றில் முக்கியமாகத் தோவாளை, கன்னியாகுமரி அடங்கியிருக்கும் அகஸ்தீசுவரம் இந்த இரண்டு தாலூக்காக்களையுமே குறிக்கிறது. மேற்படி இரண்டு தாலூக்காக்களும் விவசாயத்துக்குப் பெயர் போன பிரதேசமாகும்.

1. நாஞ்சில் என்றால் கலப்பை அல்லவா? கலப்பையை முக்கிய பூஷணமாகக் கொண்ட பிரதேசமாதலால் அதற்கு நாஞ்சிநாடு என்ற பெயர் வழங்கப் படுகிறதாம்.

2. நாஞ்சிநாடு என்பது கஞ்சாசியிருந்துள்ள நாடு என்பதையும் குறிக்கிறது.

3. மற்றும் நாஞ்சில் வள்ளுவன் ஆண்டதனால், அதற்கு நாஞ்சிநாடு என்ற பெயர் வந்ததாகவும் சொல்லுகிறார்கள். நாஞ்சில் வள்ளுவனைப் பற்றிப் புறநானூற்றில் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

4. நாஞ்சில் என்றால் மதில் என்றும் கூறலாம். மூன்று புறம் மலையாகிற மதில்களாலும் ஒரு புறம் கடலாகிற மதிலாலும் சூழப்பட்டிருப்பதால் நாஞ்சிநாடு என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது போலும்.

நாஞ்சிநாடு முற்றிலும் தமிழர்களின் நாடு என்பதற்குக் கவிமணி அவர்கள் மேற்படி ஆதாரங்களை யெல்லாம் அடுக்கடுக்காக எடுத்துக் கூறினார்கள்.


இதைத் தவிர, பதிற்றுப் பத்து, சிலப்பதிகாரம், புறப்பொருள் வெண்பா மாலை, கலிங்கத்துப் பரணி முதலிய இலக்கிய நூல்களிலும் நாஞ்சிநாடு தமிழர்களுடையது என்பதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன.

* * *

திருவாங்கூரைச் சேர்ந்த விழிஞம் என்ற இடத்தில் ஒன்பதாம் நூற்றாண்டில் சுத்தத் தமிழ்ப் பாஷையே பேசப்பட்டு வந்தது என்பது திருவாங்கூர் சமஸ்தான ஆராய்ச்சி நூல்களிலிருந்தும் தாமிரத் தகடுகளிலிருந்தும் தெரிகிறது.

வேலை கொண்டு விழிஞம் அழித்ததும்
சாலை கொண்டதும் தண்டு கொண்டல்லவோ

என்று கலிங்கத்துப் பரணி கூறுவதால், அதை ஒரு காலத்தில் சோழ மன்னன் ஜெயித்தான் என்பது நிச்சயமாகிறது. அந்த மன்னன் விழிஞத்தையும் காந்தளூர்ச் சாலையையும் தன் படைகளைக் கொண்டே கைப்பற்றினான் என்பதை மேற்படி பாட்டு



ஸ்ரீ எம். சங்கரலிங்கம், திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினர். ஸ்ரீ என். அம்புரோஸ், அரசியல் நிர்ணய சபை அங்கத்தினர்.

விளக்குகிறது. விழிஞம், திருவனந்தபுரத்திலிருந்து பத்து மைல் தூரத்தில் உள்ளது. காந்தளூர்ச் சாலையும் மேற்படி ஊரைச் சார்ந்ததே. இந்த இரண்டும் அக்காலத்தில் சோழ வேந்தரின் கப்பல்கள் தங்கும் துறைமுகங்களாக விளங்கின. கல்குளம் தாலுக்காவிலுள்ள ராஜேந்திர சோழனின் கல்வெட்டுகளும் இதை நிரூபிக்கின்றன.

தொல்காப்பியத்தை அதங்கோட்டு ஆசானிடம் அரங்கேற்றியதாகச் சொல்லுவது உண்டு. மேற்படி அதங்கோடு என்ற ஊர் கல்குளம் தாலுக்காவிலுள்ள திருவிதாங்கோடுதான் என்று பலர் கூறுகிறார்கள்.

சிறிதும் தங்கு தடையின்றி மடை திறந்தாற் போன்று கவிமணி அவர்கள் மேற்படி ஆதாரங்களை எடுத்துக் கூறியபோது எனக்கு உண்டான ஆச்சரியம் அற்ப சொற்பமன்று. அதை என்னால் வெளியில் காட்டிக் கொள்ளாமல் இருக்கவும் முடியவில்லை.

"உடல் நலம் குன்றியிருந்தாலும் வார்த்தைகளின் வேகம் குறையவில்லை. பேச்சு வெள்ளமாகவே இருக்கிறது" என்று சொல்லி வைத்தேன்.

"ஆமாம், விஷயம் எப்படிப்பட்டது? அது என்னை இப்படிச்செய்து விடுகிறது!" என்று கவிமணியும் ஆமோதித்தார்.

எனவே, இந்த நிமிஷ நேரத்தில் அவரிடம் விடைபெற்றுக் கொண்டு திரும்பி விட வேண்டும் என்று நினைத்த நான் ஐம்பது நிமிஷ நேரத்துக்கு மேல் பேசிக் கொண்டிருந்தேன்.

* * *

திருவாங்கூர்த் தமிழர்களின் கோரிக்கையை ஆதரித்துக் கற்களும் பேசுகின்றன!

மேற்படி சமஸ்தானம் முழுவதும் மொத்தம் உள்ள நானூற்றைம்பது புராதனக் கல்வெட்டுகளில் எத்தனை தமிழில் பேசுகின்றன என்பதைப் பாருங்கள்.

தமிழ்க்	கல்வெட்டுகள்	425
மலையாளம்	,,	8
சம்ஸ்கிருதம்	,,	13
கன்னடம்	,,	1
ஹிந்துஸ்தானி	,,	1
டச்சு	,,	1
லத்தீன்	,,	1

ஆதாரபூர்வமான திருவாங்கூர் ஸ்டேட் மான்யுவல் என்ற நூலில் மேற்படி புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

எனவே அந்தப் புள்ளி விவரங்கள் ஆதாரமற்றவை என்று பிரம்ம தேவனும்கூட மறுக்க முடியாது!

கன்னியாகுமரி பாண்டிய நாட்டைச் சேர்ந்தது என்பதற்குக் கல்வெட்டுகளில் ஆதாரம் இருக்கிறது. "ராஜ ராஜ பாண்டிய நாட்டு உத்தம சோழ வள நாட்டு புறத்தாய நாட்டு கன்னியா குமரி" என்று கல்வெட்டுகளில் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

இதைத் தவிர, பாண்டிய அரசனுக்குக் "குமரி சேர்ப்பன்" என்பது சிறப்புப் பெயர் என்பதையும் கவனிக்க வேண்டும். திருவாங்கூர் புராதன ஆராய்ச்சி நூல்கள் குமரி தேவியை "தென்னவர் (பாண்டியர்) தம் குல தெய்வம்" என்று கூறுகின்றன.

மற்றும் கன்னியாகுமரி ஸ்தல புராணம் பாண்டிய நாட்டைப் பற்றித்தான் வர்ணித்திருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்க விஷயமாகும்.

* * *

கன்னியாகுமரிப் பிரதேசங்கள் தமிழ் நாட்டுடன் இணைக்கப்பட வேண்டும் என்பதற்கு இன்னும் எத்தனை ஆதாரங்கள் வேண்டும்?

திருவாங்கூர்த் தமிழர்களின் கோரிக்கை பூகோள ரீதியாக நியாயமானது என்பதை திருவாங்கூர்ப் படம் உறுதிப் படுத்துகிறது

அவர்களின் கோரிக்கை ஜனநாயக முறைக்கு முற்றிலும் உகந்தது என்பதைச் சமீபத்தில் நிகழ்ந்த தேர்தல்கள் நிரூபித்திருக்கின்றன.

இலக்கிய ரீதியாகவும் கல்வெட்டுகளின் மூலமாகவும் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

மற்றும் பேச்சு, பண்பாடு, விழாக்கள், பழக்க வழக்கங்கள், ஆராதனைகள் எல்லாம் திருவாங்கூர்த் தமிழர் பகுதிகள் தமிழ் நாட்டையே சேர்ந்தவை என்பதை ஐயம் திரிபுக்கு இடமின்றிச் சுட்டிக் காட்டுகின்றன.

ஆனால், தமிழர்களின் கோரிக்கை சரியல்ல என்பதற்குத் திருவாங்கூர் சர்க்கார் காட்டும் ஆதாரம் தடியடியையும் அடக்கு முறையையும் தவிர வேறெதுவும் இருப்பதாகத் தெரியவில்லை! சர்க்கார் இவ்வாறு அடக்கு முறையில் இறங்கியிருப்பது அவர்களின் பலத்தைக் காட்டவில்லை, பலவீனத்தையே காட்டுகிறது.

தற்போது திருவாங்கூர் சர்க்காரின் அதிகார பீடத்தில் அமர்ந்திருக்கும் மந்திரிகள் சிறந்த காங்கிரஸ் வாதிகள். உயர்ந்த கொள்

கைக்காகச் சிறை சென்றவர்கள். பல வருஷங்களாக அடக்கு முறையை எதிர்த்துப் போராடி வெற்றி பெற்றவர்கள். சாத்வீகமான எந்த இயக்கத்தையும் பலாத்காரத்தினால் அடக்க முடியாது என்பதை நிரூபித்தவர்கள்.

அப்படியிருக்க, அவர்களே அதிகாரத்துக்கு வந்ததும் வராததுமாக அதர்மமான அடக்கு முறையைக் கையாள முற்பட்டிருப்பது அறிவுடைமை ஆகாது. அதிலும் சுயநிர்ணய உரிமை கோரி சாத்வீகமாகவும் ஜனநாயக விதிகளுக்கு முரணின்றியும் போராடும் தமிழர்கள் விஷயத்தில் அவர்கள் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்வது, இறுதியில் அவர்களுடைய பெருமைக்கும் நற்பெயருக்குமே குந்தகத்தை விளைவிக்கும்.

திருவாங்கூர்த் தமிழர்கள் தாங்கள் வசிக்கும் பகுதிகளை உடனடியாகத் தமிழ் நாட்டுடன் இணைக்க வேண்டுமென்று கூற வில்லை. திருவாங்கூர்த் தமிழ் நாடு காங்கிரஸின் இலட்சியம் இதுதான்: திருவாங்கூர் மன்னரின் கீழ் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்கள் அடங்கிய தமிழ் மாகாணம் ஒன்றை உடனே அமைக்க வேண்டும். அத்தகைய மாகாணம் பொறுப்பாட்சி முறையை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். பின்னர் பாஷாவாரியாக மாகாணப் பிரிவினை ஏற்படும்போது மேற்படி தமிழ் மாகாணம் தமிழகத்துடன் ஐக்கியமாக வேண்டும்.

தமிழ் நாட்டிலிருந்து ஸ்ரீ ம. பொ. சிவஞான கிராமணியார், ஸ்ரீ க. சோமயாஜுலு போன்ற தலைவர்கள் திருவாங்கூர்த் தமிழ்ப் பிரதேசத்துக்கு அடிக்கடி வந்து தமிழரின் கோரிக்கையை ஆதரித்து உற்சாகப்படுத்தி வருவதைத் திருவாங்கூர்த் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர்கள் வெகுவாகப் பாராட்டினார்கள்.

மேற்படி தமிழர்களின் தர்ம நியாயமான கோரிக்கைக்கு தமிழ் நாட்டு மக்களின் பூரண அனுதாபமும் ஆதரவும் கிடைக்கும் என்பதைத் திருவாங்கூர் சர்க்கார் உணர்ந்து கொள்ள வேண்டும்.

* * *

திருவாங்கூர் சமஸ்தான சர்க்காரின் அடக்குமுறை தமிழர்களிடையே எவ்வளவு உணர்ச்சியை உண்டுபண்ணியிருக்கிறது என்பதை நேரில் கண்டுகொள்ள எனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது.

அன்று நாகர்கோவிலில் ஸ்ரீ ஜெயப்பிரகாச நாராயணரை வரவேற்பதற்காக மாபெரும் கூட்டம் ஒன்று நடந்தது. அதற்கு நானும் சென்றிருந்தேன். பதினாயிரக்கணக்கான ஜனங்கள் கூடியிருந்தனர். தலைவர் ஸ்ரீ ஜெயப்பிரகாசர் வருவதற்குத் தாமதமாயிற்று. எனவே சிலர் தேசிய கீதம் பாடினார்கள். பின்னர் ஒரு பிரமுகர் ஸ்ரீ ஜெயப்பிரகாச நாராயணரின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துக் கூறுகையில், வேலை நிறுத்தங்களைப் பற்றிக் குறிப்பிட்டு வழக்கம் போல் காங்கிரஸ் சர்க்காரைக் கண்டித்தார்.

பிறகு நாகர்கோவிலைச் சேர்ந்த ஒரு மாணவன், அந்தப் பகுதிகளில் சமஸ்தான சர்க்காரின் அடக்குமுறையினால் துன்பத்துக்கு உள்ளான ஜனங்களின் கஷ்ட நஷ்டங்களை விவரித்து இயற்றப்பட்ட ஒரு பாடலைப் பாடியபோது, மேலே குறிப்பிட்ட பிரமுகரும் மற்றும் ஓரிருவரும், "ஒரு பெரிய தலைவரை வரவேற்று மரியாதை செய்வதற்காகக் கூட்டப்பட்டுள்ள இந்தக் கூட்டத்தில் தகராறுக்கு இடமான எந்த விஷயத்தையும் கொண்டுவரக் கூடாது" என்று ஆட்சேபித்தனர்.

அவ்வளவுதான்! சிறிதும் சலனமின்றி அமைதியாக இருந்த தண்ணீர்த் தேக்கத்தில் ஒரு பெரிய பாறாங் கல்லைத் தூக்கிப் போட்டால் என்ன ஆகும்? அது போலவே அமைதியாக இருந்த ஜனங்களிடையே மேற்படி ஆட்சேபனை மிகுந்த ஆவேசத்தை உண்டு பண்ணியது.

"தகராறுக்கு இடமான வேலை நிறுத்தங்களைப் பற்றிக் குறிப்பிடும்போது இங்குள்ள தமிழர்களின் கஷ்டநஷ்டங்களைப் பற்றிக் குறிப்பிடுவது தவறா?" என்று சிலர் கேட்டனர். ஜனக் கூட்டம் ஒரே குரலாக அந்த ஆட்சேபணையை எதிர்த்துக் கோஷம் செய்தது. ஆட்சேபித்தவர்கள் வாயடைத்துப் போயினர்!

சர்க்காரின் அடக்கு முறையினால் ஜனங்கள் எவ்வளவு தூரம் ஆத்திரம் அடைந்துள்ளனர் என்பதை மேற்படி சம்பவத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

நிதான புத்தியிழந்து காரியங்களைச் செய்வது சர்க்காருக்குப் பெருமை யல்ல; திருவாங்கூர் சமஸ்தானத்துக்கும் பெருமை யல்ல. எனவே, இனிமேலாவது சர்க்கார் தங்களுடைய போக்கை மாற்றிக்கொண்டு, தமிழர்களுடன் சமரசமான ஒரு முடிவுக்கு வருவதுதான் புத்திசாலித் தனமாகும்.

(முற்றும்)

பத்திரிகைகள்

ஹிந்து: 9-4-48: இந்த ராஜதானியிலோ அல்லது இந்தியாவின் வேறு எங்கேயோ இத்தகைய பிரமாதமான காட்சி ஜோடனைகளைக் கொண்டு ஜெமினி சந்திரலேகாவுடன் ஒப்பிடும்படியான சித்திரம் எதுவும் வெளிவந்ததில்லை. அது மாத்திரமா? உல்லாசமூட்டும் உன்னதச் சித்திரம். இது ஒரு அசாதாரணமான அருஞ்செயல்.

மெயில்: 9-4-48: இது ஜெமினி ஸ்டுடியோவின் வெற்றி. இச் சித்திரம் முழுதும் மிக சிரேஷ்டமான பொழுது போக்குக்குரிய அம்சங்கள் நிறைந்துள்ளன. இச் சித்திரம் நம் நாட்டின் சிறப்பு வாய்ந்த விசேஷ அம்சங்களுடன் ஜாஜ்வல்யமாக பிரகாசிக்கிறது.

ப்ரீ பிரஸ்: 9-4-48: இந்தப் படம் பிரும்மாண்டமான தயாரிப்பு. திகைப்பூட்டும்படியான பல ஆச்சரியமான சம்பவங்கள் நிறைந்து, விறுவிறுப்புடன் விளங்கும் படம். ஹாலிவுட்டில் சிறப்பாக தயாரிக்கப்பட்ட எந்தப் படத்துடனும் ஒப்பிடக்கூடிய அளவுக்கு இந்திய ஸினிமா உலகிலேயே முதன்மை வாய்ந்த சித்திரம்.

இந்தியன் எக்ஸ்பிரஸ்: 10-4-48: பாலரும் பெண்டிரும் பார்த்து ரசிக்கும்படியான சிங்கம், யானை, புலி, குதிரை, கோமாளிக்கூத்து, கயிற்றூஞ்சல் ஆட்டம் முதலிய பலவித அம்சங்களுடன் ஹாஸ்யம் நிறைந்த சித்திரம்.

ஸண்டே டைம்ஸ்: 11-4-48: இது அமரத்வம் வாய்ந்த அரியதொரு சித்திரம். இந்திய திரையுலகிலேயே இது மாதிரி எதுவும் அமைந்ததில்லை. ஹாலிவுட்டில் சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட பிரமாதமான படங்கள் கூட, வியப்பூட்டும் மகத்துவத்துடன் மகோன்னதமாக எஸ். எஸ். வாஸனால் தயாரிக்கப்பட்ட இச் சித்திரத்திற்கு இணையாகாது. ஸினிமா கலைக்கே பெருமையளிக்கும் சின்னம். பொது ஜனங்களின் ஆதரவு மாதக்கணக்கில் இருக்கும். ஆரம்ப முதல் கடைசிவரை உல்லாசமளிக்கும் சித்திரம்.

ப்ரீ இந்தியா: 11-4-48: இந்திய ஸினிமா உலகிலேயே இதுவரை செய்திராத பிரமாதமான வகையில் விளங்கும் கண் நிறைந்த நடனங்கள். கவர்ச்சியிருந்த காட்சிகளை விசேஷமாய் அமைத்து, மூன்று வருஷ காலம் சிறப்பாய் தயாரிக்கப்பட்டுள்ள உன்னதச் சித்திரம். சிருங்காரமும் திகைப்பூட்டும் காட்சிகளும் நிறைந்துள்ளன. உண்மையிலேயே கண்டும் கேட்டும் அனுபவிக்க வேண்டிய சித்திரம்.

சுதந்திரா: 24-4-48: ஜனரஞ்சகமான பொழுதுபோக்கு அம்சங்களை வெவ்வேறு ருசியுள்ளவர்களும் பார்த்து ரசிப்பதற்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவும் 'சந்திரலேகா' படத்தில் இருக்கிறது.

அதனாலேயே நாளுக்கு நாள் மேற்படி படத்தைப் பார்ப்பதற்காக பிரும்மாண்டமான ஜனக் கூட்டம் கொட்டகை வாசலில் காணப்படுகிறது.

சுதேசமித்திரன்: 10-4-48: மேல்நாட்டுப் படங்களில் பிரும்மாண்டமான காட்சிகளைப் பார்க்கும்போது "தமது ஸினிமாக்காரர்களாவது இந்த மாதிரி எடுப்பதாவது, முடியவே முடியாது" என்று ஜனங்கள் தீர்த்துக் கட்டிவிடுவது வழக்கம். அந்த மாதிரி இனிமேல் யாரும் சொல்ல முடியாதபடி



இப்பொழுது ராஜதானி பூராவும்
அநேக இடங்களில் நடைபெறுகிறது

சென்னையில்: பிரபாத், வெலிங்டன்,
தினசரி 3 காட்சிகள்

பாராட்டுகின்றன

அபாரமான காட்சி ஜோடனைகளை அமைத்து ''சந்திரலேகா''வைத் தயாரித்திருக்கிறீர்கள்......சாதாரண கண்ணாடியை [illegible] ராவினால் வைரத்தைப்போல் ஜொலிக்கச் செய்யலாம் என்பதை ஜெமினி நிரூபித்திருக்கிறீர்கள்...... ஆங்கில ஆசிரியர் கோல்ட்ஸ்மித்தைப் பற்றி ஒரு வார்த்தை சொல்வதுண்டு: ''அவர் தொடாத வேலையில்லை; அவர் தொட்டு சிறப்படையாத காரியமுமில்லை'' என்று சந்திரலேகாவைப் பார்த்த பின்பு இந்த வார்த்தைகளை ஸ்ரீ வாஸன் விஷயத்திலும் சொல்லலாமென்று தோன்றுகிறது.

தினமணி: 10-4-48: 'சந்திரலேகா' ஒரு முதல்தர தமிழ்ப்படம் மட்டுமல்ல; அதை ஒரு சர்வ தேசப் படம் என்று சொல்ல வேண்டும். ...நல்ல மேனாட்டு படங்களைப் பார்க்கையில், இந்த மாதிரி ஒரு தமிழ்ப் படம் வராதா என்று ஏங்கியிருந்தவர்களுக்கு ஒரு பெருமைப் படம்...சர்வ ஜன ரஞ்சிதமாய் எல்லா அம்சங்களும் அடங்கியிருக்கின்றன இப்படத்தில்.

பாரத தேவி: 10-4-48: தமிழ்ப்பட உலகிலும் ஒரு முதல்தரமான சிறந்த படத்தை எடுக்க முடியுமென்பதை 'சந்திரலேகா' மூலம் ஜெமினி ரூபித்துவிட்டது. கதையை அமைத்ததிலேயே முதல் வெற்றியை ஜெமினி பெற்றுவிட்டது.

ஹிந்துஸ்தான்: 11-4-48: பிரமிப்பூட்டும் காட்சி ஜோடனைகள், கண்ணைக் கவரும் இனிய காட்சிகள். இயற்கையான நடிப்பு, சாமான்ய மக்களும் புரிந்து கொண்டு திருப்பிப் பாடக் கூடிய இனிய கீதம், ஹாஸ்யம் கலந்த எளிதமான சம்பாஷணை இவைதான் ஜெமினி சந்திரலேகாவின் தனிச் சிறப்புகள்......இந்தப் படத்தின் முரசொலி தமிழ் நாடெங்கும் கேட்டு எதிரொலிக்கும் என்பதில் எனக்கு சந்தேகம் இல்லை.

ஹனுமான்: 18-4-48: ஜெமினியின் அற்புத சிருஷ்டி சந்திரலேகா. தமிழ்ப்படத் தயாரிப்பிலே பிரமிக்கத்தக்க காட்சிகள், கட்டங்கள், பலவற்றைப் புகுத்தி பிரமாதமாகத் தயாரிக்கப்பட்டுள்ள படம் இது.

ஆந்திர பிரபா: 10-4-48: காட்சி ஜோடனைகள் பிரும்மாண்டமாகவும் பிரமிக்கத்தக்கதாகவும் இருப்பதாகச் சொன்னால் மட்டும் போதாது. நாம் மற்ற படங்களில் பார்த்தவைகள் எல்லாவற்றையும் காட்டிலும் மிகமிகப் பெரிதானவை.

ஆந்திர பத்திரிகா: 16-4-48: எக்காலத்திலும் எல்லா வகுப்பினருக்கும் இன்பமயமான சித்திரம் இது. தென்னிந்திய சினிமாத் துறையிலே ''சந்திரலேகா'' உன்னத ஸ்தானத்தை வகிக்கிறது

சந்திரலேகா

ஜெமினியின் அற்புத சிருஷ்டி

ஸ்டார், கிரௌன் ஆகிய 4 தியேட்டர்களிலும்

2. 6. 9-45

நீடித்த உழைப்பிற்கு இணையற்றவை

"போனிக்ஸ்"

மின்சார விசிறிகளே

இரண்டு வருஷங்கள்
உத்திரவாத முள்ளவை

●

தென் சென்னைப் பிராந்தியங்களுக்கு
(சென்னை நகரம், சமஸ்தானங்கள்
உள்பட) பூரண விற்பனை
உரிமையாளர்கள் :

ஆர். எம். எஸ்.

& கம்பெனி, லிமிடெட்

16, பிராட்வே : மதராஸ்

●

சப் டிஸ்ட்ரிபூட்டர்கள் :

சேலம், கோயமுத்தூர்
ஜில்லாக்களுக்கு :

**எஸ். எம். டி. வேலு அன் கோ.,
சேலம்**

மதுரை, ராமனாதபுரம்,
திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு :

**இண்டர் நேஷனல் டிரேடிங் கம்பெனி
பாரத் மான்ஷன்ஸ், மதுரை**


தஞ்சாவூர் ஜில்லாவுக்கு :

ராஜு எலக்ட்ரிக் ஸ்டோர்ஸ், தஞ்சாவூர்

தீப்பெட்டிகளில் உத்திரவாதமுள்ளது.

கோபுரம் மார்க்

தீப்பெட்டிகளே!



எல்லா சில்லரைக் கடை
வியாபாரிகளுக்கும்

ஓர் வேண்டுகோள்!

★


தீப்பெட்டிகளை
ரூ. 0-0-9 க்கு விற்பனை செய்
யுங்கள். அப்படி விற்றால்
நிதி மந்திரி அவர்களின்
போஸ்டாபீஸ் விற்பனைத்
திட்டம் அமுலுக்கு வர
வேண்டிய அவசியமில்லை.

★

சிம்கோ - சிவகாசி


RAJAN PUBLICITY

“அவர்கள் தேனீரை விரும்பிய போதிலும் நல்ல டீ என்ன வென்பது அவர்களுக்குத் தெரியாது. எப்படித் தெரியும்? அவர்கள் பாலை பாத்திரத்திலேயே கலந்து, கோப்பையில் சர்க்கரை பாகவே கொடுத்து விடுகின்றனர். நல்ல டீ தயாரிக்க பாலை பாத்திரத்தில் கலக்கக்கூடாது. கோப்பையிலேயே சேர்த்துக்கொள்ள வேண்டும்.”



கோடிக்கணக்கான மக்கள் சோர்வு நீங்கி புத்துணர்ச்சி பெறுவதற்கு டீ அருந்துகிறார்கள். ஆனால் டீ அருந்தும் பலருக்கு நல்ல டீ என்ன வென்பது தெரியாமலிருப்பது வருந்தத்தக்க விஷயம். நல்ல டீ தயாரிக்க எவ்வித அதிகச்செலவும் கிடையாது. ஐந்து சுலபமான விதிகளைப் பின்பற்றினாலே போதும். உங்கள் பணத்துக்கு முழு மதிப்பு பெறவும், தேகாரோக்கியம் நலம் பெறவும் இவ்விதிகளை உங்கள் மனதில் பதிய வைத்து, எப்போதும் வீட்டில் இவ்விதிகளைப் பின்பற்ற செய்வது அவசியம்.

ஐந்து சுலபமான விதிகள்



இந்தியன் டீ மார்க்கெட் - எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது

வீடு கிடைத்தது!

பத்மநாபன்

நான் குடியிருந்த வீட்டில் அசௌகரியம் எதுவும் இருப்பதாகவே எனக்குத் தோன்றவில்லை. ஆனால் என் மனைவிக்கு வீட்டைப் பற்றிய குறைதான் பெரிய குறையாக இருந்தது. நாங்கள் குடியிருந்த வீட்டில் கீழ் இரண்டு அறைகள் இருந்தன. ஆனால் என் பெண்ணுக்கு மாடியில் ஒரு தனி அறை இல்லையே என்று குறை. மனைவிக்கோ 'வேஷ் பேஸினைப்' அருகில் இல்லையே என்று குறை. ஆகவே, தாயாரும் பெண்ணுமாகச் சேர்ந்து என்னைப் புதிய வீடு பார்க்கும்படி நச்சரித்துக் கொண்டிருந்தார்கள். நானும் பகீரதப் பிரயத்தனம் செய்து சில வீடுகளைத் தேடிப் பிடித்து, அவர்களை அழைத்துக் கொண்டு போய்க் காட்டினேன். அவற்றில் ஒரு வீட்டையும் அவர்களுக்குப் பிடிக்கவில்லை. "அப்பா! இந்த வீடா, ஒரே புழுக்கமாக இருக்குமே!" என்றாள் என்னுடைய பெண்.

"நன்றாக வீடு பார்த்தீர்கள்! நான் ஸ்கூலுக்குப் போகக் கூடாது என்று உங்களுக்கு இருந்தால் நேரிடையாகச் சொல்லி விடுங்களேன். எதற்காக இப்படி ஸ்கூலிலிருந்து ஒன்றரை மைல் தூரத்திலுள்ள வீட்டைப் பார்த்திருக்கிறீர்கள்!" என்று சண்டைக்கு வந்தாள் என் மனைவி.

இப்படியே அவர்கள் நான் பார்த்து வந்து சொன்ன ஒவ்வொரு வீட்டுக்கும் ஏதாவது குறை சொல்லிக் கொண்டே வந்தார்கள். எவ்வளவுதான் சுற்றி அலைந்தபோதிலும் வீட்டில் இருப்பவர்களுக்குத் தக்கபடி வீடு கிடைப்பது அரிதாய்ப் போய்விட்டது. ஆகவே நான் அலுத்துப்போய் வீடு பார்க்கும் யோசனையையே அடியோடு கைவிட்டு விட்டேன்.

"இந்த ஆண்பிள்ளைகளுக்கே கையால் ஒன்றும் ஆகாது. இதோ பாருங்கள். இன்னும் இரண்டே நாளில் வீடு பார்த்துத் தருகிறேன்" என்று என் மனைவி விருப்புடன் கூறினாள். எப்படியாவது நம்மை நச்சரிப்பது விட்டால் போதுமென்று நானும் அவள் இஷ்டப்படியே விட்டு விட்டேன்.

அன்று இரவு என் மனைவி தன் தம்பியிடம் தன்னுடைய குறைகளை எல்லாம் எடுத்துச் சொல்லி ஒரு வீட்டைப் பார்த்துத் தரும்படி கேட்டுக் கொண்டாள்.

மறுநாள் என் மைத்துனன் சிரித்துக்கொண்டே வந்து, "வீடு கிடைத்து விட்டது!" என்றான்.

"எங்கே, எங்கே?" என்று கேட்டுக் கொண்டே சமையல் அறையிலிருந்து ஓடோடியும் வந்தாள் என் மனைவி.

"மாம்பலத்தில்!" என்றான் என் மைத்துனன்.

"மாடியில் எனக்கென்று ஒரு அறை இருக்கிறதா?" என்று ஆவலுடன் கேட்டாள் என் பெண்.

"இப்போது இல்லை. ஆனால் வீட்டுக்காரர் நம்மையே கட்டிக் கொள்ளச் சொல்லி விட்டாராம்! வாடகை மட்டும் ரூ. 50 கொடுக்க வேணுமாம்."

"அதற்கென்ன, பேஷாய்க் கொடுத்தால் போகிறது!"

"ஸ்கூலுக்குப் பக்கத்திலிருக்கிறதா?"

"ஆமாம்."

"வீடு எந்தத் தெருவில்?"

"எனக்குத் தெரியாது, அக்கா! என் சிநேகிதர் ஒருவர் சொன்னார். இப்போதே வந்தால் கூட வீட்டைப் பார்க்கலாமென்றார்."

"உன்னுடைய சிநேகிதர் எங்கே குடியிருக்கிறார்?"


"எழும்பூரில் இருக்கிறார்."

"பார்த்தீர்களா, என் தம்பியின் சாமர்த்தியத்தை!" என்று என்னைப் பார்த்துப் பெருமையடித்துக் கொண்டாள் என் மனைவி.

சிறிது நேரத்திற்குப் பிறகு, நாங்கள் எல்லோருமாக எழும்பூர் போய்ச் சேர்ந்தோம். நான் வந்த விஷயத்தை அந்த நண்பரிடம் சொன்னேன். அவர் வீட்டைக் காட்ட எங்களுடன் புறப்பட்டார். எல்லோரும் 'டாக்ஸி' ஒன்று வைத்துக்கொண்டு மாம்பலத்திலுள்ள புது வீட்டை நோக்கிச் சென்றோம்.

வழியெல்லாம் நான் பார்த்து வைத்திருக்கும் வீட்டைப் பற்றி வர்ணித்துக் கொண்டே வந்தார் அந்த நண்பர். எல்லோரும் திறந்த வாய் மூடாமல் கேட்டுக் கொண்டே வந்தோம். அந்த நண்பர் அடிக்கடி டாக்ஸி டிரைவரை நோக்கி, "இப்படிப் போ, அப்படிப் போ!" என்று வழி காட்டிக் கொண்டே வந்தார். திடீரென்று கார் நின்றது. எல்லோரும் இறங்கினோம். "இந்த வீடுதான், ஸார்!" என்றார் அவர்.

நான் அந்த வீட்டைப் பார்த்ததும் குபீரென்று சிரித்துவிட்டேன். என் மைத்துனன், மனைவி இருவர் முகத்திலும் அசடு வழிந்தது! ஏனெனில் அவர் காட்டிய புதிய வீடு, நாங்கள் குடியிருந்த அதே பழைய வீடுதான்.



கணவன்:—குழந்தை நடப்பதற்குக் கற்றுக் கொண்டுவிட்டான்; ஓடி வந்து பார்!

மனைவி:—அப்படின்னா, 'டான்ஸ்' கற்றுக்கொடுக்க ஆரம்பித்துவிடலாம் போலிருக்கிறதே!



பரம்பரைப் பங்கு

பத்மா சேஷாத்திரி

மீனம்பட்டி மிராசுதார் முத்துலிங்க முதலியாருக்கும் வேலம்பட்டி மிராசுதார் வைத்தியநாத முதலியாருக்கும் இடையிலிருந்த பகைமையும் வெறுப்பும் எழுத்தி லடங்காது. ஒவ்வொரு விஷயத்திலும் போட்டிதான். மீனம்பட்டி மிராசுதார் புதிதாகக் கோச்சு வண்டியும் குதிரையும் வாங்கின மறுநாள், வேலம்பட்டியார் வீட்டில் அழகிற் சிறந்த புரவியும் கோச்சு வண்டியும் காட்சி யளிக்கும். மீனம்பட்டி மிராசுதார் தம் மனையாளுக்கு முன்னூறு ரூபாயில் சரிகைச் சேலை எடுத்தால், மறு தினமே வேலம்பட்டி மிராசுதார் வீட்டில் நானூறு ரூபாய் சரிகைப் புடவை காட்சி யளிக்கும். ஆனால், இன்னொரு விஷயத்தில் தெய்வமே சதி செய்யும்போது யாராவது ஒருவர் போட்டியில் தோல்வி யடையத்தானே வேண்டும்!

மீனம்பட்டி முத்துலிங்க முதலியாருக்கு ஒரு சுபயோக சுப தினத்தில் ஒரு சத்புத்திரன் ஜனித்தான் என்று கேட்டதும், வேலம்பட்டி மிராசுதார் கோபத்தால் துள்ளினார். "அந்தப் பயலுக்கு ஒரு பிள்ளை பிறக்க, அதை நான் வெறுமனே பார்த்துக் கொண்டிருப்பதா?" என்று பொருமினார். அதற்கேற்றாற்போல் மீனம்பட்டியில் நடந்த கோலாகலங்கள் அவருடைய காதில் விழாமலில்லை. கையைப் பிசைந்தார்; குறுக்கும் நெடுக்கும் உலாவினார்; பெருமூச்செறிந்தார். ஆனால் பணம் கொடுத்து வாங்கக்கூடிய வஸ்து அல்லவே அது?

கடைசியாக அவர் குறையைத் தீர்த்து வைப்பதற்காக அவருடைய மனைவியும் கருவுற்றாள். வைத்தியநாத முதலியாரின் சந்தோஷத்துக்கு எல்லையே இல்லை. குழந்தையின் பிறப்பைப் பக்கத்துக் கிராமத்தில் கொண்டாடியதைக் காட்டிலும், பன்மடங்கு விசேஷமாகக் கொண்டாட ஏற்பாடு செய்தார். "எனக்குப் பிறக்கப்போகும் குழந்தைதான் எவ்விதத்திலும் மேம்பட்டவனாயிருப்பான். என் குழந்தைக்கு அந்த மீனம்பட்டி பிள்ளை தலை வணங்காவிட்டால், என் தலையை மழுங்க மொட்டையடித்துக் கொள்கிறேன்" என்று சபதமிட்டார்.

நாளடைவில் அவர் மனைவி பிரசவித்தாள். ஆனால், மிராசுதார் எதிர்பார்த்த சத்புத்திரனுக்குப் பதில், தங்க விக்ரகம் போன்ற பெண் குழந்தைதான் பிறந்தது. முதலி

யாரின் கோபத்துக்கு எல்லையே இல்லை; விதியே தன்னைச் சதி செய்வதாகப் பொருமினர். ஆனால் அவர் சகதர்மிணி, எல்லா தானங்களைக் காட்டிலும் கன்னிகைதானம் சிறந்ததென்றும், மீனம்பட்டியாருக்கு அந்த பாக்கியம் கிட்டவில்லையென்றும் அவருக்கு நினைவுறுத்தியதும், அவர் சந்தோஷமடைந்து குழந்தையின் பிறப்பை வெகுவாகக் கொண்டாடினர்.

குழந்தை பிறந்த பின்னராவது போட்டி முடிந்ததோ என்றால், அதுதான் கிடையாது. மீனம்பட்டி குழந்தை வாசுதேவனுக்கு வாங்கப்படும் ஒவ்வொரு பொம்மையும் விளையாட்டுச் சாமானும், வேலம்பட்டி குழந்தை சுலோசனாவுக்கும் வாங்கப்பட்டது. இவ்விஷயத்தைப் பொறுத்த வரையில் வேலம்பட்டியின் அந்தஸ்தே ஒரு படி உயர்ந்தது என்று சொல்லவேண்டும். ஏனென்றால், சுலோசனா பெண் குழந்தையாதலால், அவளுக்கு வைர நகைகளாகவே இழைத்துப் போட்டார் அவள் தந்தை. இதற்கு ஈடு செய்ய மீனம்பட்டியார் பட்ட கஷ்டம் — அப்பப்பா! சொல்லி முடியாது! இப்படியாகத்தானே, குழந்தைகளிருவரும் வாலிப வயதை அடைந்தனர். வாசு, பட்டணத்திலுள்ள கலாசாலைக்கு அனுப்பப்படுகிறான் என்பதை யறிந்த மிராசு வைத்தியநாத முதலியார், அவசர அவசரமாகத் தம் பெண் சுலோசனாவுக்கும் பட்டணத்திலேயே கல்வி பயில வேண்டிய ஏற்பாடுகள் செய்தார்.

★

வருஷங்கள் பல ஓடி மறைந்தன. சென்னை ராஜதானிக் கல்லூரியில் இளங்காளையான வாசுதேவன் பி. ஏ. இரண்டாம் வருஷம் வாசித்து வந்தான். மேரி ராணி கல்லூரியில் அழகி சுலோசனா இன்டெர் இரண்டாம் வகுப்பில் படித்து வந்தாள். இருவரும் படிப்பில் மேதாவிகளா யிருந்தார்கள்.



ஒருநாள் சுலோசனா மாலை சினிமாவுக்குச் சென்றுவிட்டு, இரவு ஒன்பது மணிக்கு ஹாஸ்டலுக்குத் திரும்பினாள். பஸ்ஸிலிருந்து இறங்கி ஹாஸ்டலுக்குச் சிறிது தூரம் நடக்கவேண்டும். அன்றும் அவ்வாறு செல்லும்போது, ஒரு குடிகாரன் கையை ஆட்டிக்கொண்டு, பாடியவாறு எதிர்ப்பட்டான். அவன் கண்கள் கோவைப் பழம் போல் சிவந்திருந்தன. "ராதே, உனக்குக் கோபம் ஆகாதடி!" என்று குழறியவாறு, நீட்டிய கைகளுடன் அவன் அவளை அணுகினான். ஜனசந்தடியற்ற தெருவில் தனியாக அகப்பட்டுக்கொண்ட சுலோசனா, தப்பிக்கும் வழியறியாது "ஐயோ!" என்று அலறி விட்டாள்.

மறு நிமிஷம் குடிகாரன் கீழே வீழ்த்தப்பட்டதும், தன்னைக் காப்பாற்றியவர் தன் முன்னால் நிற்பதையும் உணர்ந்த சுலோசனா, நன்றியறிதலுடன் ஏறெடுத்து நோக்கினாள். சிறிது தூரம் பேசாமல் நடந்த இருவரும், ஹாஸ்டலை யடையுமுன், பரஸ்பரம் விலாசம் மாற்றிக்கொண்டு பிரிந்தனர்.

இதற்குப் பின் கடற்கரையில் அவர்கள் அடிக்கடி சந்தித்து வந்தனர். அவர்கள் நட்பு முதிர்ந்து காதலாகக் கனிந்தது. காலேஜ் மூடும் தினத்திற்கு முதல் நாள் இருவரும் சந்தித்தார்கள். "சுலோ! என் படிப்பு முடிந்துவிட்டது. இனி நான் உன்னை எப்படிப் பார்ப்பது? நீ எங்கே இருப்பாய் என்று சொன்னால், விடுமுறை நாட்களிலாவது வந்து பார்ப்பேன்" என்றான் வாசுதேவன் ஒரு பெருமூச்சுடன்.

"ஐயோ, அது சாத்தியமா? சென்னையிலிருக்கும் தாங்கள், திருநெல்வேலிக்குப் போகும் என்னை எப்படி வந்து பார்க்க முடியும்?" என்று அங்கலாய்த்தாள் சுலோசனா.

"திருநெல்வேலிக்கா! பழம் நழுவிப் பாலில் விழுந்தது. நானும் அங்கேதான் போகிறேன். அது சரி, நீ திருநெல்வேலியிலிருந்து எங்கு செல்லவேண்டும்?" என்று கேட்டான் வாசு.

"வேலம்பட்டி என்னும் கிராமத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அந்தக் கிராமத்து மிராசுதார் பெண்தான் நான்!"

இதைக் கேட்டதும் வாசுவின் முகம் வாட்டமடைந்தது. "சுலோ! நீ எனக்கு வட்டாச் சனியாகி விடுவாயோ என்று பயமாயிருக்கிறது. ஏனெனில், வேலம்பட்டிக்குப் பக்கத்திலுள்ள உன் தந்தை



யின் ஜன்ம விரோதியான மீனம்பட்டி மிராசுதாரின் பிள்ளை நான்!" என்றான்.

ஒருவரைப் பற்றி யொருவர் அறிந்து கொண்டதும் செய்வது இன்னதென் றறியாது திகைத்தனர்.

கடைசியாக, வாசு மார்பைத் தட்டிய வண்ணம், "சுலோ! நான் ஆண் மகனாயிருந்து இதுகூடச் செய்ய முடியாவிட்டால் என்ன பிரயோஜனம்? கல்யாணம் செய்து கொள்ளும் விஷயத்தில் நான் எப்படியும் என் தந்தையைச் சரிக்கட்டி விடுவேன். அதேமாதிரி நீயும் உன் தந்தையைச் சரிக்கட்டி விட்டால்............" என்று மேலே சொல்வதற்குள், சுலோசனா குறுக்கிட்டு, "என்னால் என் தந்தையைச் சரிப்படுத்த முடியாவிட்டாலும், தாயாரைச் சரிப்படுத்தி விட முடியும். எப்படியும் நாம் இருவரும் விரும்பிய விதமே வாழ்வோம்!" என்று உறுதி கூறினாள்.

இருவரும் ஒருவரை விட்டு ஒருவர் பிரிய மனமில்லாமல் பிரிந்து சென்றனர்.

★

விடுமுறை நாட்கள் ஒவ்வொன்றாகக் கழிந்து வந்தன. சுலோசனா எப்பொழுது பார்த்தாலும் 'ஒரு மாதிரி'யாக இருப்பதைக் கண்ட தாயார் வேதனையடைந்தாள். "என்ன, அம்மா! என்ன விஷயம், சொல்லேன்!" என்று அடிக்கடி அவளை வற்புறுத்திக் கேட்டாள். "ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை!" என்று பல நாட்கள் அவளை ஏமாற்றிய பிறகு, ஒரு நாள் தன் விருப்பத்தை அவளிடம் வெளியிட்டாள் சுலோசனா. இதைக் கேட்டதும் முதலில் அதிர்ச்சியடைந்து நின்றுவிட்டாள் அவள் தாயார். அவளுக்கென்னவோ சுலோசனாவின் விருப்பத்தை நிறைவேற்றி வைப்பதில் யாதொரு ஆட்சேபமும் இல்லைதான். ஆனால், 'அந்த மனுஷன்' அதற்கு இணங்கித் தொலைக்க வேண்டுமே!


ஒருநாள் தன் கணவரிடம் மெல்ல விஷயத்தைத் தெரிவித்தாள் சுலோசனாவின் தாயார். அவ்வளவுதான்; அந்த மனுஷனைக் கட்டிப் பிடிக்க முடியவில்லை. அவர் தம் மனைவியின் மீது 'வள், வள்' என்று எரிந்து விழுந்துவிட்டு, நேரே 'விடு விடு' வென்று உள்ளே போனார். அங்கே சுலோசனா அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக நின்றுகொண்டிருந்தாள். அந்தக் கோலத்தைக் கண்டுகூட அவர் மனம் இரக்கவில்லை. "ஏம்மா! என் குலத்தைக் கெடுக்கவா நீ வந்து பிறந்தே? அந்த மீனம்பட்டியானுடன் உனக்கு என்ன அம்மா, சகவாசம்? நீ படிச்ச லட்சணம் தெரிந்துபோச்சு, இனிமேல் உனக்குப் படிப்பும் வேண்டாம், இடிப்பும் வேண்டாம்! வீட்டிலேயே அடைந்துகிட!" என்று சரமாரியாகப் பொழிந்து தள்ளிவிட்டார்.

ஆயினும் அவர்களுடைய கல்யாணம் நடைபெறாமற் போகவில்லை. பெண்ணின் சந்தோஷத்தையே பெரிதும் விரும்பிய தாயார், சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தாள். அந்தச் சந்தர்ப்பமும் வாய்த்தது. வைத்தியநாத முதலியார் ஒரு வழக்கு சம்பந்தமாகச் சென்னைக்குச் சென்று ஒருமாத காலம் தங்க நேர்ந்தது. அந்தச் சந்தர்ப்பத்தை வெகு துணிச்சலுடன் பயன்படுத்திக் கொண்டாள் சுலோசனாவின் தாயார். அதன் பயனாக, சுலோசனா தன் மனம்போல் வாசுவுக்கு மாலையிட்டாள்!

★

சென்னையிலிருந்து திரும்பி வந்த வேலம்பட்டி மிராசுதாருக்கு விஷயம் தெரிந்தது. அவ்வளவுதான்; அவருடைய கோபத்தைப் பார்க்க வேண்டுமே! "தன் மனைவியே தனக்கு எதிராகச் சதி செய்திருக்கிறாள்!"—இதை நினைத்ததும் அவர் உடல் நடுங்கியது. தள்ளாடிக் கீழே விழப் போனார். மறுகணம் எப்படியோ சமாளித்துக் கொண்டார்.

கோபம் மீண்டும் தலை யெடுத்தது. முதல் காரியமாகத்



தம் மனைவியை உடனே பிறந்தகத்துக்கு அனுப்பி வைத்தார். இனி தம்முடைய மகளைத் தம் மகள் என்றே அழைப்பதில்லையென்றும், அவளை அறவே ஒழித்துத் தலைமுழுகிவிடப் போவதாகவும், அவள் பெயரை இனி யாரேனும் தம் எதிரில் பிரஸ்தாபித்தால் தெரியும் சேதி என்றும் கர்ஜித்தார். கிராமத்துப் பெரியவர்கள் சேர்ந்து எவ்வளவோ சொல்லிப் பார்த்தும், அவர் பிடிவாதம் தளரவில்லை. ஆதி கால முதற் கொண்டு நடந்து வந்த போட்டியில் மீனம்பட்டியான் ஜெயித்து விட்டானே என்ற வயிற்றெரிச்சல் அவரை வாட்டியெடுத்தது.

★

வருஷங்கள் இரண்டாயின. சுலோசனாவிடமிருந்து வந்த பல கடிதங்களைக் கிழித்துப் போட்டார் வைத்தியநாத முதலியார். அவர் மனதில் அகங்காரமும் பகைமையுமே தலைகாட்டினவென்றாலும், அவர் உள்ளத்தின் ஓரத்தில் சுலோசனாவின் நினைவும், புத்திர வாஞ்சையும் இருக்கத்தான் செய்தன. ஆனால், கடைசியில் பரம்பரைப் பிடிவாதமே வென்று வந்தது. ஆயினும் நாளடைவில் அவர் உள்ளம் பெண்ணுக்காக ஏங்கித் தவித்தது. ஒருநாள் ஏக்கத்துடன் தெருத் தாழ்வாரத்தில் உட்கார்ந்திருந்தார். அப்போது தெருவில் இருவர் பேசிக்கொண்டு சென்றார்கள். "மீனம்பட்டி மிராசுதார் தாத்தாவாகப் போகிறாராமே? பிள்ளை பிறந்த வைபவத்தை அவர் கொண்டாடியது இன்னும் எல்லோருடைய நினைவிலும் இருக்கிறது. பேரன் பிறந்துவிட்டால் கேட்க வேணுமா?" என்றான் ஒருவன். மற்றொருவன், மிராசுதார் வீட்டைச் சைகை காட்டி ஏதோ சொல்ல, இருவரும் மௌனமாகச் சென்றுவிட்டனர்.

இதைக் கேட்ட வேலம்பட்டி மிராசுதார் மனதில் ஒரு பெரும் புயல் வீச ஆரம்பித்தது. "தாத்தா!" — ஆகா! எத்தனை இன்பமளிக்கும் பதவி! சுலோசனாவுக்குப் பிறக்கும் குழந்தைக்குத் தானும் தாத்தாவன்றோ? நியாயமாகக் குழந்தையின் பிறப்பை வேலம்பட்டியே அல்லவா கொண்டாட வேண்டும்?

அவ்வளவுதான்; இளங் குரலொன்று, தம்மை "தாத்தா" என்று அழைப்பதாக அவர் கற்பனை செய்து பார்த்தார். அவருடைய உள்ளத்தில் இன்ப ஊற்று எடுத்தது. அந்த இன்ப நினைவின் உற்சாகத்திலே உள்ளே சென்று உடையணிந்தார். கையில் கைத்தடியைச் சுழற்றிய வண்ணம், கால் நடையாகவே மீனம்பட்டிக்குப் புறப்பட்டார்.

வழி நெடுக, "வருஷக் கணக்கில் பிறந்தகத்துக்கு வரவேயில்லை, குழந்தை! இப்பொழுது இளைத்து உருமாறிப் போயிருப்பாள்!" என்றெல்லாம் பாவனை செய்து கொண்டு, மீனம்பட்டியை அடைந்தார்.

மீனம்பட்டி மிராசுதார் வீட்டுத் தோட்டத்தில், சுலோசனாவும் வாசுதேவனும் உட்கார்ந்து உல்லாசமாக வார்த்தையாடிக் கொண்டிருந்தனர்—இளைத்து உருமாறிய சுலோசனாவா? இல்லையில்லை, இளமையின் மெருகுடன், புது அழகுடன் அல்லவா சோபிக்கிறாள் சுலோசனா?—புத்திர வாத்ஸல்யம் மேலிட, அவர் தயாரித்து வைத்திருந்த பேச்சுக்களெல்லாம் மறந்து போயின. "சுலோசனா!" என்று கூப்பிட்டார். அவர் குரல் தழதழத்தது.

தலையெடுத்துப் பார்த்த சுலோசனா, கண்களில் மகிழ்ச்சி பொங்க, "அப்பா!" என்று கூவிக்கொண்டே ஓடிவந்தாள். வாசுதேவன் இதற்குள் தந்தையை அழைத்து வர, வேலம்பட்டி மிராசுதாருக்கு அமோக மரியாதை நடந்தது.

சம்பந்திகள் இருவரும் வெகுநேரம் பேசிக்கொண்டு உட்கார்ந்திருந்தனர். வாசுதேவனும் சந்தோஷத்துடன் அவர்களுடைய பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தான். சுலோசனா திடீரென்று அவனை அழைக்கவே, உடனே அவன் விரைந்து உள்ளே சென்றான். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு மீனம்பட்டி மிராசுதார் புன்னகையுடன், "உம்ம பெண் கீறின கோட்டைத் தாண்டுறதில்லை, பிள்ளையாண்டான்! அவள் பேச்சுக்கெல்லாம் தலை வணங்குகிறான்!" என்றார்.

இதைக் கேட்டதும், வேலம்பட்டி மிராசுதார் குபீரென்று சிரித்துவிட்டார். காரணம் புரியாமல் தவித்த சம்பந்திக்கு, "இல்லை, சுலோசனா பிறக்குமுன், மீனம்பட்டி பிள்ளை என் குழந்தைக்குத் தலை வணங்காவிட்டால் என் பெயர் வைத்தியநாதன் இல்லை என்று சபதமிட்டேன். சபதம் எப்படிப் பூர்த்தியாச்சு என்று எண்ணும்போது சிரிப்பு வந்தது!" என்றார்.

"எட்டிக்குப் போட்டி, சரியாய்ப் போச்சு!" என்று சொல்லி, சிரிப்பில் கலந்து கொண்டார் மீனம்பட்டி மிராசுதார்.



வியாபார முறை!

மூக்குக் கண்ணாடி வியாபாரி தம் பிள்ளைக்கு வியாபார முறைகளைச் சொல்லிக் கொண்டிருந்தார்.

"தம்பி, ஒருவர் உன்னிடம் மூக்குக் கண்ணாடி வாங்க வந்தால் அவருக்கு எப்படிக் கண்ணாடி விலையைச் சொல்ல வேண்டும் என்று சொல்கிறேன், கேள். மூக்குக் கண்ணாடியை அந்த மனிதர் அணிந்து கொண்டவுடன், நீ 'இருபது ரூபாய்' என்று சொல்லி நிறுத்திவிட்டு அவரது முக பாவத்தைக் கவனிக்க வேண்டும். அவர் முகத்தைச் சுளிக்காமல் இருந்தால் 'ப்ரேமுக்கு மட்டும் இந்த விலை; கண்ணாடியின் விலை ரூபாய் இருபது' என்று கூறி அவரைக் கவனிக்க வேண்டும். அவர் மூகம் சுளிக்காமல் இருந்தால் 'ஒவ்வொரு கண்ணாடியின் விலை தனித்தனியாக இருபது ரூபாய்!' என்று உறுதியாய்க் கூறிவிட்டு 'பில்' தயார் செய்ய வேண்டும். இதுதான் வியாபார முறை!"

★

தனியாகவா?

ஒருவர் ஒரு வீட்டுக் கதவைத் தட்டினார். ஒரு பையன் வந்தான்.

அவர்:—என் தம்பி, வீட்டில் யாரும் இல்லையா? நீ மாத்திரம் தனியாகவா இருக்கிறாய்?

பையன்:—ஆமாம், மாமா! அம்மா ஆஸ்பத்திரியில் இருக்கிறாள். அப்பா, அண்ணா, தங்கச்சி, நான் எல்லோரும் தனியாகத்தான் இருக்கிறோம்.

★

அவருக்கு வேண்டியது

ஹோட்டல் முதலாளி:—நீங்கள் இங்கேயே சாப்பிடலாம், ஸார்! வீட்டுச் சமையல் மாதிரியே சௌகரியமாயிருக்கும்.

சாப்பிட வந்தவர் (முகத்தைச் சுளித்துக்கொண்டு):— அப்படியா? எனக்கு அது அவசியமில்லையே! நான் வீட்டிலிருந்துதானே வருகிறேன்? எனக்கு ஹோட்டல் சாப்பாடுதான் வேண்டும்.

சரிதான்!

"பையனை என்ன செய்வதென்று தெரியவில்லை. அவன் டாக்டராக வேண்டுமென்று என் மனைவிக்கு ஆசை. எனக்கோ அவன் வியாபாரம் செய்ய வேண்டும் என்று ஆசை. பையனோ ஆகாச விமானம் ஓட்ட வேண்டும் என்கிறான்."

"பையனுக்கு என்ன வயதாகிறது?"

"காது மாதம் பூர்த்தியாகிறது!"

★

எப்படி?

கடன் கொடுத்தவர்:—ஐயா, நீர் என்னை ஏமாற்ற முடியாது. உள்ளே இருந்து கொண்டே இல்லையென்று சொல்லுகிறீர்? உமது செருப்பு இதோ வெளியில் இருக்கிறது. நீர் உள்ளேதான் இருக்கிறீர். வெளியே வாரும்!

கடன் வாங்கியவர் (உள்ளேயிருந்து):— இல்லை; நான் செருப்புப் போட்டுக் கொள்ளாமலேயே வெளியே போயிருக்கிறேன்!

★


டாக்டர் சொன்னது!

டாக்டர்:—தினம் பத்து சிகரெட்டுக்கு அதிகமாகப் பிடிக்கக் கூடாது என்று நான் சொன்னேனே, ஞாபகமிருக்கிறதா? இப்பொழுது எத்தனை சிகரெட்டுகள் உபயோகிக்கிறாய்?

நோயாளி:—தினம் இருபது சிகரெட்டுகள்தான் உபயோகிக்கிறேன்.

டாக்டர்:—இருபதா! நான் பத்துக்கு மேலே உபயோகப் படுத்தக் கூடாது என்று அல்லவா சொன்னேன்?

நோயாளி:—ஆமாம். நான் இன்னொரு டாக்டரிடம் போயிருந்தேன். அவரும்



பத்து சிகரெட்டுக்கு மேலே உபயோகப் படுத்தக் கூடாது என்றார். நீங்கள் இரண்டு பேரும் சொன்னதைக் கூட்டிப் பார்த்தால் இருபது ஆகவில்லையா?



லிப்டன்ஸ்

எக்ஸல்

முதல்தரமான டீ

LTX-151-TM



வளரும் தமிழ்

நவயுகப் பிரசுரங்கள்

தமிழில் நவயுக மறு மலர்ச்சி ஏற்பட்டதும் அம் மறு மலர்ச்சி நூல்களை மறு மலர்ச்சி முறையிலேயே வெளியிட்ட பெருமை காரைக்குடி நவயுகப் பிரசுராலயத்துக்குத்தான் உரியது. உயர்ந்த விஷயம், அழகான அச்சு, கண்ணைக் கவரும் புத்தக அமைப்பு இவற்றைக் குறிக்கோளாகக் கொண்டு பல நூல்களை நவயுகப் பிரசுராலயம் வெளியிட்டிருக்கிறது.

அவற்றுள் அசலும் நகலும் என்ற கலை கவிதை விமர்சன நூலும் ஒன்று. எழுதியவர் ஆ. முத்துசிவன்.

"அருள் நிறைந்த ஞானியாகிய கவிஞனையும், அவன் தன் கற்பனை மிகுந்த கவிதையையும் கண்டனம் செய்யும் ஆசிரியர் பிளேட்டோவின் வாதங்களைத் தவிடுபொடியாக்கும் பொருள் செறிந்த விமர்சனக் கட்டுரையே இப் புத்தகத்தின் தலைப்பு" என்பது பிரசுராலயத்தாரின் வாக்கு.

அசலும் நகலும், அழகின் மர்மம், துன்பம், கம்பர் காட்டும் மதம் ஆகிய நான்கு கட்டுரைகள் அடங்கி யிருக்கின்றன.

சாதாரணமாகக் கூறப்படும் ஓர் உண்மையையும் அதே உண்மையைக் கவிதை நயத்துடன் கூறும்போது ஏற்படும் பாவத்தையும் ஆசிரியர் நன்கு விளக்கி யிருக்கிறார் இந்நூலில். விலை ரூ. 3-0-0.

ஸ்ரீ முத்து சிவம் அவர்களின் இன்னொரு நூல் மின்னல் கீற்று.

சென்ற நூற்றாண்டில் திருநெல்வேலி ஜில்லாவில் தோன்றிப் பல அற்புதத் திருவிளையாடல்கள் புரிந்து மறைந்த ஸ்ரீ வைகுண்ட சிவம் என்னும் மகானைப் பற்றிய ருசிகரமான சம்பவங்கள் இந்நூலில் நிறைந்திருக்கின்றன.

நினைத்த மாத்திரத்தில் வேண்டிய பொருள்களை அருளிச் செய்த அற்புதமும், மரணமடையும் தறுவாயில் இருந்த உயிரை நிறுத்தி வைத்த நம்ப முடியாத செயலும், வழிப்பறிக் கொள்ளைக்காரர்கள் மகானின் அருட் பார்வையால் புனிதமடையும் அதிசயமும் வாசகர்களைப் பிரமிக்க வைக்கும். ஐந்து வயதில் காதாளம் போட்டுத் தமிழோடு இசை பாடிய இந்த மகான் பிற்காலத்தில் பல தமிழ்க் கீர்த்தனங்களை இயற்றியுள்ளார்.

"லௌகிக மேகங்கள் மண்டிச் செறிந்த வான வெளியிலே இப்படியான தெய்விக மின்னல் கீற்று ஒன்று வெளிப்படுவது அதிசயம்" என்று ஆசிரியர் முன்னுரையில் கூறுவது முற்றும் உண்மை. விலை ரூ. 1-8-0.

இந்தியாவுக்கு வந்துவிட்டுப் போகும் வெள்ளைக்காரப் பத்திரிகை நிருபர்களுக்கும் உண்மைக்கும் வெகுதூரம் என்பது ஜகப் பிரசித்தம். ஆனால், அதற்கு விதிவிலக்கு லூயி பிஷர் என்ற புகழ்பெற்ற அமெரிக்க நிருபர். ஸ்ரீ பிஷர் சென்ற மகாயுத்த காலத்தில் இந்தியாவுக்கு வந்து, இந்தியாவைப் பற்றிய உண்மைகளை எல்லாம் அமெரிக்காவுக்கும் உலகத்துக்கும் எடுத்துக் கூறி, இந்தியாவுக்காக அருந்தொண்டு செய்தவர். ஸ்ரீ பிஷர் உண்மையைச் சொன்னார் என்ற குற்றத்துக்காக, அப்போதிருந்த இந்திய சர்க்கார் கோபம் கொண்டு, அவர் எழுதிய புத்தகங்களுக்குத் தடை விதித்தனர்!

ஸ்ரீ பிஷர் சென்ற 1942-ம் வருஷம் இந்தியாவுக்கு வந்து காந்திஜியுடன் ஒரு வாரம் தங்கி யிருந்தபோது, அவருடன் தாம் நடத்திய சம்பாஷணைகளை நான் கண்ட காந்தி என்ற புத்தகத்தில் எழுதியுள்ளார். ஸ்ரீபிஷர் மாம்பழம் சாப்பிடத் தெரியாமல் தவித்தது, தண்ணீர்த் தொட்டியில் உட்கார்ந்து 'டைப்' அடித்தது ஆகிய விஷயங்கள் எல்லாம் வெகு ரசமாக இருக்கின்றன. விலை ரூ. 2.

'முஸ்லிம்கள் ஒரு தனி சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், மற்ற இந்திய மக்களுக்கும் அவர்களுக்கும் யாதொருவிதமான சம்பந்தமும் இல்லை' என்று ஜனாப் ஜின்னாவும் முஸ்லிம் லீகும் சொல்லும் வாதத்துக்குக் கொஞ்சங்கூட நியாயமே இல்லையென்பதை பாபு ராஜேந்திர பிரஸாத் தாம் எழுதிய பிளக்கப்பட்ட இந்தியா என்ற புத்தகத்திலே வெகு தெளிவாக விளக்கியுள்ளார். இதற்காக அவர் சிரமப்பட்டுச் சேகரித்துக் கொடுத்திருக்கும் சரித்திர ஆதாரங்களும் புள்ளி விவரங்களும் நமக்குப்

பிரமிப்பையும் பெரு வியப்பையும் உண்டு பண்ணுகின்றன.

உதாரணமாக, பாபர் தம்முடைய மகன் ஹுமாயூனுக்குக் கடைசிக் காலத்தில் எழுதி வைத்த உயிலைப் பாருங்கள்:

“மகனே, இந்திய ராஜ்யம் வித்தியாசமுள்ள மதங்கள் நிரம்பியது. அதன் ராஜ்யாதிகாரத்தை உனக்கு அளித்த இறைவன் போற்றப்படுவாராக. உன் இதயத்தில் உள்ள மதக் குரோதங்களை எல்லாம் ஒழிப்பது உன்னுடைய பொறுப்பாகும். ஒவ்வொரு மதத்தினுடைய வழிகளையும் அறிந்து நீதி வழங்குவாயாக. பசுக் கொலையை நீக்குவதன் மூலம் இந்திய மக்களின் மனதைக் கவர முடியும்......கொடுங்கோன்மையால் இஸ்லாம் முன்னேறுவதைக் காட்டிலும் சேவையின் மூலமே இஸ்லாம் அதிகம் பரவும்.”

பாபரும் ஹுமாயூனும் அக்பரும் இப்போது மேலுலகத்திலிருந்து கொஞ்சம் இந்தியாவை எட்டிப் பார்த்தால் அவர்களுடைய மனம் என்ன பாடுபடும்!

ராஜன் பாபு எழுதிய இவ்வருமையான நூலைத் தமிழில் கொண்டு வந்ததன்மூலம், வையகப் பிரசுராலயத்தார் தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் அருமையான தொண்டு செய்திருக்கிறார்கள். விலை ரூ. 10—8—0

தற்போதுள்ள இந்திய சமூக அமைப்பை எப்படித் திருத்தி அமைப்பது என்பதைப் பற்றிப் பலர் பலவிதமாகச் சொல்லுகிறார்கள். இந்தியாவிலே சோஷியலிஸ சமுதாயத்தை ஏற்படுத்தினால் நம்முடைய கஷ்டங்களும் தொல்லைகளும் தீர்ந்துவிடும் என்று பலர் கருதுகிறார்கள்.

ஆனால், அந்த சோஷியலிஸ சமுதாயத்தை எப்படி ஏற்படுத்துவது? ஏட்டிலே எழுதினால் ஏற்பட்டு விடுமா? பொதுக் கூட்டங்களில் தீர்மானம் நிறைவேற்றினால் சோஷியலிஸ சமுதாயம் உண்டாகி விடுமா? இந்தக் கஷ்டமான விஷயத்தைப் பற்றி ஸ்ரீ கே. சந்தானம் தாம் எழுதிய இந்தியாவும் பொதுநல சமுதாயமும் என்ற நூலில் அழகாக விளக்கியுள்ளார்.

இந்தியாவில் சோஷியலிஸக் குடியரசு ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லுபவர்களில் சிலர், “வெறும் சோஷியலிஸக் குடியரசு ஏற்படுத்தி என்ன பிரயோஜனம்? அதை ஏற்படுத்துவதற்கு முன், ஏராளமான இரத்தத்தை வெள்ளமாகப் பாய்ச்ச வேண்டும். அந்த வெள்ளத்திலே நீந்திச் சோஷியலிஸக் குடியரசை ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் அது நிலைத்து நிற்கும்” என்று சொல்லுகிறார்கள்.

சோஷியலிஸத்துக்கும் இரத்தத்துக்கும் சம்பந்தமே இல்லை; பலாத்காரப் புரட்சி இல்லாமல் அமைதியான முறையில், பாரத நாட்டின் பண்டைப் பண்புக்கும் நாகரிகத்துக்கும் ஏற்ற முறையில் அதைத் திருத்தியமைக்க முடியும் என்பதை ஸ்ரீ கே. சந்தானம் இந்நூலில் தெளிவாக எழுதி நிலை நாட்டுகிறார். விலை ரூ. 2—4—0.

இந்துக்களும் முஸ்லிம்களும் இன்று பிளவுபட்டிருப்பதுபோல் 1857-ம் ஆண்டில் பிளவுபட்டிருக்கவில்லை. இரு பிரிவினரும் ஒன்று சேர்ந்து அந்த நாளில் வெள்ளையரை எதிர்த்து நின்றார்கள். இந்துக்களைத் திருப்தி செய்ய வேண்டுமென்பதற்காக முஸ்லிம்கள் பசுக் கொலையை நிறுத்தினர்; முஸ்லிம்களைத் திருப்தி செய்ய வேண்டுமென்பதற்காக இந்துக்கள் தங்களுடைய தேசியக் கொடியில் பிறை மதியின் சின்னத்தைப் பெருந்தன்மையுடன் பொறித்தனர். இந்த ஐக்கிய ஒற்றுமையுடன் இரு சாராரும் நடத்திய அந்த மகத்தான புரட்சியைப் பற்றி ஸ்ரீ அசோக் மேதா இந்தியாவின் முதல் புரட்சி என்றொரு புத்தகம் எழுதியிருக்கிறார். ஸ்ரீ என். என். மாரிசாமி அந்த நூலைத் தமிழ் படுத்தித் தந்திருக்கிறார். இந்தியாவின் சுதந்திர தினத்தன்று காரைக்குடி வையகப் பிரசுராலயத்தார் மேற்படி நூலை வெளியிட்டுப் பெருமை யடைந்திருக்கிறார்கள். விலை ரூ. 1—4—0

மன்னிப்பு

ஆல்பர்ட்

அந்தி நேரமாகி விட்டதால் ஆட்டுக் குட்டிகளுக்கு அவசர அவசரமாகத் தழை பறித்துப் போட்டுக் கொண்டிருந்தான் அருளப்பன். காற்று வாக்கில் மிதந்து வந்துகொண்டிருந்த மாதா கோவில் மணி யோசை அவனை 'வா', 'வா' என்று அழைப்பது போலிருந்தது. வழக்கமாக அவன் திரும்பும் நேரம் அதுதான். தழை ஒடிக்கும் கோலைக் கையில் எடுத்துக்கொண்டு போய், எங்கெங்கெல்லாமோ சிதறிப் போய் நின்று கொண்டிருந்த ஆடுகளை ஒன்று சேர்த்து, கிராமத்துக்குப் போகும் பாதையில் திருப்பி விட்டான். மந்தை முன்னே போகப்போக, அதன் புழுதியும் சத்தமும் பின்னே தங்கி, மாலைப் பொழுதை நெருங்கி வரும் இருளோடு கலந்து மறைந்தன.

கொள்ளிடக் கரையிலிருந்து கூப்பிடு தூரத்திலுள்ள ஒரு சிறிய கிராமம் மிக்கேல் பட்டி. அருளப்பன் ஆடு மேய்ப்பதற்காக தினந்தோறும் கொள்ளிடக் கரையோரம் வருவான். இருட்டும் வேளையில் கிராமத்திற்கு வந்துவிடுவான். வந்ததும் மந்தையை ஒரு இடத்தில் அடை கட்டிவிட்டு நேராக ஞானுதிக்கம் சுவாமியாரிடம் ஓடிவிடுவான். அன்று எப்படியாவது அவரைக் கெஞ்சிக் கேட்டாவது அந்தப் படத்தை வாங்கிவிட வேண்டுமென்று அவன் நினைத்திருந்தபடியால் கொஞ்சம் வேகமாகவே கிராமத்தை நோக்கி வந்துகொண்டிருந்தான்.

கிராமத்தின் மேற்கேதான் அந்த மாதா கோவில் இருந்தது. கோவில் சிறியதுதான். அதற்குப் பின்னால் சுவாமியார் தங்கி யிருப்பதற்காக ஒரு சிறிய கட்டிடம் இருந்தது. அதில் ஒரு அறையும் தாழ்வாரமும்தான் இருந்தன. அங்கிருந்த படியேதான் அவர் மிக்கேல்பட்டியில் தமது அன்பு ஆட்சியைச் செலுத்தி வந்தார். ரொம்பவும் நல்லவர். கிராமத்தில் அவருக்கு நல்ல மதிப்பு உண்டு. எல்லோரிடமும் நெருங்கிப் பழகுவார்.

காட்டாண்மைக்கார சாந்தப்பக் கோனார் மகன்தான் அருளப்பன். வயது சுமார் பன்னிரண்டு இருக்கும். அவனைப் படிக்க வைக்கலாம் என்று சுவாமியாருக்கு ஆசை. ஆனால் அவனுக்கு ஆடு மேய்க்கவே பொழுது சரியாக இருந்தது. மாலை நேரத்தில் சுவாமியாரிடம் ஓடி வருவான். அவரும் அன்போடு அவனுக்கு ஏதாவது சொல்லிக் கொடுப்பார். அவரிடம் அவனுக்கு அளவற்ற விசுவாசம். என்னவெல்லாமோ கேள்விகளெல்லாம் கேட்பான். அவரும் சலிக்காமல் பதில் சொல்லுவார். அன்பின் அவதாரமான ஏசுவின் புனித வாழ்க்கைச் சம்பவங்களை அவனுக்குக் கூறுவார். அவனும் அவைகளை யெல்லாம் ஆசையோடு கேட்டுக் கொண்டிருப்பான். மணிக் கணக்காக இப்படி இருவரும் பேசிக்கொண்டே யிருப்பார்கள். குரு - சிஷ்ய பாவம் இப்படியாக வளர்ந்து கொண்டே வந்தது.

அன்றும் அவன் வந்தான். சுவாமியார் ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தார். அருளப்பன் பார்வை சுவரில் மாட்டியிருந்த ஒரு படத்தின் மீது விழுந்தது. என்னவோ, அந்தப் படம்



அவனை மயக்கிவிட்டது. ஒரு செம்மறி ஆட்டுக் குட்டியை அன்புடன் அரவணைத்திருக்கும் பாலகனாக ஏசுவைச் சித்திரித்திருந்தது அந்தப் படத்தில். அழகாகத்தான் இருந்தது. ஏசுவின் அருள் விழிகளில் இரக்கமும் பரிவும் குடி கொண்டிருந்தன. குழந்தையாக இருந்த அந்த அழகிய உருவம் அருணப்பன் நெஞ்சில் ஆழப் பதிந்துவிட்டது. ஆட்டுக் குட்டியோடு நின்ற அந்தப் பாலகன் உருவம் நிரந்தரமாக அவன் இதயத்தில் இடம் பெற்றுவிட்டது. ஆடுகளுடன் அவனும் பழகிய காரணத்தாலோ என்னவோ அவனுக்கு இந்தப் படத்தில் ஒரு அலாதி ஆசை. சுவாமியாரிடம் வரும்பொழுதெல்லாம் அந்தப் படத்தை அப்படியே விழுங்கிவிடுபவன் போலப் பார்ப்பான். சில சமயங்களில் அவன் அந்தப் படத்தைப் பார்த்தபடியே வெகு நேரம் நின்றுவிடுவான். ஒருவேளை அந்தப் பாலகன் உயிர் பெற்று ஓடி வந்து அருணப்பனோடு கூடப் பேசுவதாக அவன் கனவு கண்டானோ என்னவோ? கையிலிருக்கும் ஆட்டுக் குட்டியைத் தன்னிடம் கொடுத்து விடுவார் என்று நினைத்து மகிழ்ந்தானோ என்னவோ!

இரவும் பகலுமாக வளர்ந்து விட்ட இந்த பக்தியும் ஆசையும் அவனுக்குக் கொஞ்சம் துணிவு கொடுக்கவே, அன்று சுவாமியாரிடம் கேட்டு விட்டான்:

“சாமி, ஒண்ணு கேக்கறேன்; கொடுப்பீங்களா?” என்றான் மெதுவாக.

சுவாமியார் நிமிர்ந்து பார்த்தார். “என்ன அருணப்பா, எது வேணும்? சும்மா கேள், ஏன் பயப்படறே?”

“கோவிக்காமல் கொடுப்பீங்களா?” தயக்கத்துடன் கேட்டான் அருணப்பன். இருந்தாலும் அதில் கொஞ்சம் நம்பிக்கையும் இருந்தது.

சுவாமியார் அவனைப் பார்த்தார். அவன் அந்தப் படத்தையே பார்த்துக் கொண்டு நின்றான். அவர் பையனுடைய விருப்பத்தைத் தெரிந்து கொண்டு விட்டார். அவன் வாய் திறந்து கேட்காவிட்டாலும் அவனுடைய விழிகளில் தேங்கியிருந்த ஆசை அவருக்குக் காட்டிக் கொடுத்து விட்டது.

“அருணப்பா, இங்கே வா! இந்தப் படம் போலவே வேறு படம் உனக்கு வாங்கித் தருகிறேன். நான் சிறுவனாயிருக்கும் பொழுது என் அம்மா கொடுத்தது இது. அவள் நினைவுக்கு இது ஒன்றுதான் இருக்கிறது. நிச்சயமாக அடுத்த தடவை கும்பகோணம் போகிற போது உனக்கு இந்த மாதிரிப் படம் வாங்கி வருவேன். நீ நல்ல பிள்ளை. அதுவரையில் பேசாமலிருக்க வேண்டும். சரிதானே!”

ஏமாற்றம் அருணப்பன் கண்களில் கண்ணீராக வெளிப்பட்டது. அவனைத் தேற்றி வீட்டுக்கு அனுப்பி வைத்த பாடு பெரும்பாடாகி விட்டது.

அன்று இரவு வெகு நேரம் வரை அருணப்பன் தூங்கவே இல்லை. குழந்தை ஏசு அவனைக் கூப்பிடுவது போன்ற பிரமை ஏற்பட்டது. என்ன நினைத்தானோ, வெளியே படுத்திருந்தவன் மெதுவாக எழுந்து சுவாமியார் அறைப் பக்கம் நடந்தான்.

கிராமத்தில் எல்லோருமே தூங்கிக் கொண்டிருந்தார்கள். பகல் முழுவதும் உழைத்தவர்கள் இரவில் விழித்திருந்து விளையாடுவார்களா?

கோவிலுக்குச் சமீபமாக வந்துவிட்டான். இன்னும் கொஞ்ச தூரம் தான். சுற்றிலும் பார்த்தான். எங்கும் ஒரே இருட்டுத்தான். சத்தமும் கிடையாது. எங்கேயோ வயல் வரப்புகளில் கிடந்த தவளைகள் மட்டும் கத்திக் கொண்டிருந்தன. வெகு தூரத்தில் மின்மினிப் பூச்சிகள் சில பறந்தோடி மறைந்தன.

இன்னும் கொஞ்சம் வேகமாக நடந்தான். கோவிலுக்குப் பக்கத்தில் வந்து விட்டான். என்னவோ மனத்தில் ‘திக்’ என்றது. கோவிலுக்குள் எட்டிப் பார்த்தான். நந்தா விளக்கு மட்டும் மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. மற்றபடி அங்கும் இருட்டுதான். மெதுவாக சுவாமியாருடைய அறைப் பக்கம் கண்களைத் திருப்பினான். அங்கு மட்டும் வெளிச்சம் தெரிந்தது. ‘சுவாமியார் இன்னும் தூங்கவில்லையா. என்ன? ஒருவேளை ஜெபம் செய்து கொண்டிருப்பார். இப்பொழுது போனால்......



சட், விளக்கு வெளிப்பக்கம் தெரிகிறதே! வேறு யாராவது இருக்குமோ? அருளப்பன் அங்கே வேகமாக நடந்தான். ஆமாம், யாரோ நிற்பது தெரிந்தது. ஆனல் மறு நிமிஷம் அந்த மனிதன் அங்கிருந்து ஓடப் பார்த்தான். அருளப்பன் அவனைத் தாவிப் பிடித்தான். அவ்வளவுதான்; ஒரு அடி அவன் தலையில் பலமாக விழுந்தது. அருளப்பன் நினைவு தவறிக் கீழே விழுந்தான்.

மறுநாள் காலையில் சுவாமியார் அறையின் வெளியே ஒரு பெரிய கூட்டம் நின்றது. யாரோ ஒரு மனிதனைப் பிடித்திழுத்துக் கொண்டு வந்து சுவாமியாரிடம் காட்டி என்னவெல்லாமோ சொல்லிக் கொண்டிருந்தார்கள் கிராமத்தார்கள்.

அந்த மனிதன் தலை குனிந்தபடி நின்று கொண்டிருந்தான்.

பக்கத்தில் சாந்தப்பக் கோனரின் குரல் தான் பிரமாதமாகக் கேட்டது.

"சாமி, இந்தப் பயலைச் சும்மா விடக் கூடாதுங்க. துணிந்து கோவில் உண்டிப் பெட்டியைத் திருடி விட்டானுங்க. பாவிப் பயல் என் மகனையும் அடித்துவிட்டான்."

அவர் துடித்துக் கொண்டிருந்தார். சுவாமியார் மட்டும் அங்கிருந்து அவர்களைச் சமாதானப்படுத்தியிரா விட்டால் அந்தத் திருடன் கதி என்னவாகி யிருக்குமோ?

சுவாமியார் அந்த மனிதனருகே வந்தார். அவன் உடலெல்லாம் பயத்தால் நடுங்கிக் கொண்டிருந்தது. அவனிடம் நெருங்கி வந்து அவனுடைய தோள்களைப் பிடித்து அன்புடன் கேட்டார் சுவாமியார்:

"மகனே, நீ திருடியது உண்மையா?" இதை அந்த மனிதன் எதிர்பார்க்கவே இல்லை. அவன் திருடிய விஷயம் எல்லோருக்கும் தெரிந்து விட்டது. இருந்தும் தன்னை அன்போடழைத்து, 'திருடினுயா?' என்று சாந்தமாகக் கேட்கும் ஒரு மனிதன் கூட இருக்கிருர் என்பதை அவனல் நம்ப முடியவில்லை. சுவாமியாரை ஒரு முறை பார்த்தான். ஆச்சரியத்தோடு பதில் சொல்ல முடியாது தலை கவிழ்ந்து கொண்டான். சுவாமியார் அங்கு கூடியிருந்த ஜனங்களைப் பார்த்துச் சொன்னர்.

"கோபத்தைக் கொஞ்சம் அடக்குங்கள். அவன் செய்தது குற்றம்தான். இருந்தாலும் அதை மன்னிக்க வேண்டியது தான் நம் கடமை. நம் கர்த்தர் நமக்கு இதைத்தான் சொல்லியிருக்கிருர். பழி வாங்குவது என்பது கூடாது. பாருங்கள், இவன் இந்த குற்றத்தைச் செய்வதற்கு நாம்தான் பொறுப்பாளிகள். அவனுக்குத் தேவையாயிருந்தவைகளை அவன் பெற வழியில்லை. அதனல் தானே அவன் திருடுகிருன். பசித்தவர்களுக்கு உணவு கொடுங்கள், உடையில்லாதவர்களுக்கு உடை கொடுங்கள்' என்று ஏசு நாதர் நமக்குச் சொல்லியும்கூட நாம் அதைப் பின்பற்றுவதில்லை. இல்லாதவர்களுக்குக் கொடுக்காததால் அவர்கள் திருடுகிருர்கள். இதற்கு நாம்தான் காரணம். ஆகவே அவனை மன்னித்துவிட்டு இனியும் திருடாமலிருக்க இவனுக்கு நல்ல வழி காட்ட வேண்டும். அவனை எல்லோரும் மன்னித்துவிடுங்கள். அவனை உங்கள் சகோதரனுக நினைத்துக்கொள்ளுங்கள்."

உபதேசம் நீண்டுவிட்டாலும் அதில் பலன் இருக்கத்தான் இருந்தது. கூட்டத்தில் கொஞ்சம் அமைதி உண்டாயிற்று. இருந்தாலும் மகனை அடித்துவிட்டான் என்ற காரணத்தால் சாந்தப்பக் கோனர் மட்டும் பொருமிக் கொண்டிருந்தார்.

சுவாமியார் தெரிந்துகொண்டார். அவர் அருளப்பனை அழைத்தார்.

"இங்கே பார், அருளப்பா! நான் உனக்குச் சொல்லிக் கொடுத்தது நினைவு இருக்கிறதா? நம் கர்த்தர் சாகும்பொழுது என்ன சொன்னர்?"

சட்டென்று அருளப்பன் பதில் சொன்னன்: "பிதாவே, இவர்களை மன்னித்துவிடும். ஏனெனில் இவர்கள் செய்வது என்னவென்று தெரியாமல் செய்கிருர்கள்!"

சுவாமியார் சந்தோஷத்தோடு அவனை அருகிலழைத்து வைத்துக்கொண்டு சொன்னர்:

"ஆமாம், தம்மைச் சிலுவையில் அடித்துக் கொன்றவர்களைக்கூட கர்த்தர் மன்னித்து விட்டார். அவரைப் பின்பற்றும் நாம் சிறு பிழைகளைக்கூடவா மன்னிக்கக் கூடாது? அருளப்பா, எங்கே உன்



வாயால் தவிலை மன்னித்துவிட்டேன் என்று சொல். பார்ப்போம். கடவுள் உன்னை ஆசிர்வதிப்பார்"

அருளப்பன் மன்னித்துவிட்டான்.

கண்ணிலிருந்து விழும் நீர்த்துளிகளைத் துடைக்கக்கூடத் தோன்றாமல் அந்தத் திருடன் நின்று கொண்டிருந்தான். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவனுக்கு தண்டனை ஏதாவது கொடுத்திருந்தால் அதை லட்சியம் செய்திருக்க மாட்டான். ஆனால் எதிர்பாராமல் கிடைத்த இந்த மன்னிப்பு அவன் நெஞ்சை அழுத்தியது. அவன் சுவாமியார் முன் மண்டியிட்டு விழுந்தான். அவருடைய கருணையும் அன்பும் மீண்டும் அவனை மனிதனாக்கி விட்டன. சுவாமியார் தெரிந்து கொண்டார், இனி அவன் எப்பொழுதும் திருடமாட்டானென்று.

பிறகு என்னவோ நினைத்துக் கொண்டவர்போல அவர் அருளப்பனிடம் கேட்டார். "ஆமாம், அருளப்பா நீ ஏன் இரவு அந்த நேரத்தில் இங்கு வந்தாய்?"

அருளப்பன் கெஞ்சுவதுபோல் சுவாமியாரைப் பார்த்தான். அந்தப் பார்வை 'நான் செய்தது தவறு நீங்கள் என்னை மன்னித்து விடுங்கள்' என்பது போல் இருந்தது. அவன் பதில் சொல்லவில்லை. சுவாமியாருக்குத் தெரியும், அவன் எதற்கு அந்த நிசியில் கோவிலை நோக்கி வந்தானென்று. அவர் சுவரில் மாட்டப்பட்டிருந்த படத்தைப் பார்த்துவிட்டு அவனைப் பார்த்தார். அவனுடைய ஆசையும் பக்தியும் எல்லையை மீறி விட்டன என்பதை அவர் கண்டு கொண்ட பின்பும் சும்மா இருக்க அவர் மனம் இடங்கொடுக்கவில்லை.

படத்தை எடுத்து அவனிடம் கொடுத்தார். "அருளப்பா, இன்று நீ நம் கர்த்தருக்குப் பிரியமானவனாகி விட்டாய். நீ உன்னை அடித்தவனையே மன்னித்து விட்டாய் அல்லவா? உன்னுடைய குற்றங்களையும் கடவுள் மன்னித்து விட்டார். எப்பொழுதாவது உன்னைத் துன்பப்படுத்துபவர்களை நீ பழிவாங்க நினைத்தால் இந்தப் படம் உன்னைக் காப்பாற்றும். 'மன்னித்து விடு' என்று இந்தப் படத்தில் உள்ள தெய்வக் குழந்தை உனக்குச் சொல்லும். உன் உள்ளத்தைக் கவர்ந்த இந்தப் பாலகனுடைய வார்த்தைகளை நீ மீறமாட்டாய் அல்லவா?"

அருளப்பன் ஆசையோடு அந்தப் படத்தை வாங்கித் தன்னுடைய நெஞ்சுடன் அணைத்துக் கொண்டான்.

மந்திரியின் எச்சரிக்கை

டாக்டர் பட்டாபி சீதாராமையா தாம் எழுதிய ஒரு புத்தகத்தில் ஸ்ரீமதி அனிபெஸண்டின் வீரத்தையும் துணிச்சலையும் பாராட்டிவிட்டுக் கூறுவதாவது:

வெகு காலத்துக்கு முன்பு, வடக்கே வெகு தூரத்துக்கு அப்பால் உள்ள ஒரு தேசத்துக்கு ஒரு சாது போனார். அவரைப் பார்த்த அந்த நாட்டு ஜனங்களில் சிலர் தங்கள் அரசனிடம் சென்று, "மகாராஜா, நம்முடைய தேசத்துக்கு ஒரு சாது வந்திருக்கிறார். அவர் நினைத்தால், வானத்திலே கூடப் பறக்க முடியும்" என்றார்கள். இதைக் கேட்டு வியப்படைந்த ராஜா, தன்னுடைய சேனாபதியை அழைத்து, "அந்த சாதுவை நான் பார்க்க வேண்டும். உடனே அவரைக் கைது செய்து என் முன் கொண்டு வாருங்கள்" என்று தன்னுடைய சேனாபதிக்குக் கட்டளை யிட்டான். சேனாபதி தம்முடைய படையைத் திரட்டிக் கொண்டு, சாது தங்கியிருந்த வீட்டுக்குப் போனான். அது ஒரு பிரமாண்டமான வீடு. நாற்புறமும் பன்னிரண்டு ஜன்னல்கள் இருந்தன. சேனாபதியும் மற்றவர்களும் அந்தப் பன்னிரண்டு ஜன்னல்கள் வழியாக உள்ளே எட்டிப் பார்த்தார்கள். என்ன அதிசயம்! அங்கே பன்னிரண்டு சாதுக்கள் இருந்தார்கள். சேனாபதிக்கும் படைவீரர்களுக்கும் திகைப்பு உண்டாயிற்று. அவர்கள் ராஜாவிடம் சென்று விஷயத்தைச் சொல்லி, "நாங்கள் எந்த சாதுவைக் கைது செய்வது?" என்று கேட்டார்கள். அரசனுக்கும் என்ன செய்வதென்று விளங்கவில்லை. அவன் சாதுவைக் கைது செய்யும் எண்ணத்தைக் கைவிட்டான்.

• • • •

1917-ம் வருடம் லார்ட் செம்ஸ்போர்ட் இந்திய வைசிராயாக இருந்தார். அப்போது ஸ்ரீமதி அனிபெஸண்ட் தேசமெங்கும் சுதந்தர ஆவேசத்தை உண்டாக்கி வந்தார். அதைச் சமாளிக்க லார்ட் செம்ஸ்போர்டால் முடியவில்லை. அவர், அப்போது இந்தியா மந்திரியாக இருந்த லார்ட் மாண்டேகுக்கு ஒரு கடிதம் எழுதி, "இந்தப் பொல்லாத கிழவியை நான் எப்படி அடக்குவது?" என்று கேட்டார்.



அதற்கு மாண்டேகு கூறியதாவது: "உங்களுக்கு எது உசிதமென்று தோன்றுகிறதோ அதைச் செய்யுங்கள். அதை நான் பூரணமாக ஆதரிப்பேன். ஆனால், முன்கூட்டியே அதைப்பற்றி என்னிடம் ஆலோசனை கேட்க வேண்டாம். ஆனால் ஒரே ஒரு எச்சரிக்கை மாத்திரம் செய்கிறேன். சிவபெருமான் பார்வதியை ஐம்பது துண்டுகளாக வெட்டித் தள்ளினார். ஆனால், அந்த ஐம்பது துண்டுகளும் ஐம்பது பார்வதிகளாக எழுந்து நின்றன. ஸ்ரீமதி பெஸண்டுக்கு ஏதாவது தண்டனை கொடுக்கும்போது இதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவும்.'

கம்பர் தரும் காட்சி

• • •

டி.கே.சி

209. எரி நுழைந்தால் என மெலிவாள்

இலங்கையிலுள்ள மாடமாளிகைகள், கூட கோபுரங்கள் எல்லாவற்றையும் அனுமன் பார்த்து அதிசயித்தான். அதிசயித்ததோடு நிற்கவில்லை. விதவிதமாக அமைந்திருந்த பற்பல சாளரங்களின் ஊடே பார்த்துத் தேடினான், சீதா பிராட்டி இருக்கிறாளா என்று.

எத்தனையோ மாளிகைகளில் எவ்வளவோ நேரம் தேடிப் பார்த்தான். ஒன்றிலும் காண முடியவில்லை. மனம் சோர்ந்தவனாய், நாளை பார்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்தோடு ஊருக்கு வெளியே வந்தான். அசோக மரச்சோலை ஒன்றை அடைந்தான். ஒரு மரத்தின் மேல் ஏறி உட்கார்ந்து கொண்டான்.

அந்த மரத்துக்குப் பக்கத்தில் ஒரு வெளியிடம். அங்கே சீதையும் உட்கார்ந்து கொண்டிருக்கிறாள். அவளுடைய மனசில் பல வகைப்பட்ட எண்ணங்கள் வந்து ஊடாடிப் போகின்றன.

அழகிய நீல மேகத்தைச் சில வேளை காண நேரும். தன்னைப் பார்க்க வரும் பெண்களது கண்களில் நல்ல மையைக் காண நேரும். உடனே ராமனது மேனியும் அழகும் சீதாபிராட்டியின் நினைவுக்கு வந்து விடும். கண்களிலிருந்து கண்ணீர் 'பொல பொல' என்று கொட்டும். கொட்டிய கண்ணீர் தரையில் விழுந்து ஓடும்போது கடலை நோக்கிப் போகிறதோ என்று எண்ணத் தோன்றும்.

அரிய மஞ்சினோ(டு)
அஞ்சனம் முதலிவை
அதி கம்

கரிய காண்டலும்
கண்ணின்நீர் கடல்புகக்
கலுழ் வாள் :

உரிய காதலின்
இருவரில் ஒருவரை
உல கில்

பிரிவெ னும்துயர்
உருவுகொண் டாலன
பிணி யாள்.

[அரிய மஞ்சினோடு : அழகிய நீல மேகத்தோடு ; அஞ்சனம் : கண்ணுக்கிடும் மை ; அதிகம் கரிய காண்டலும் : அதிகமான கரிய நிறம் எதிரிருக்கக் கண்டால் ; கலுழ்வாள் : வருந்துவாள் ; சீதையின் முகமும் மேனியும் எப்படி யிருந்தது ! உரிய காதலின் இருவரில் ஒருவரை : ஒத்த அன்போடிணைந்த இருவரில் ஒருவரை ; உலகில் : இந்த உலகில் உயிரோடிருக்கும்போது தானே ; பிரிவெனும் துயர் : மீண்டும் காண்பது இல்லை எனும்படி பிரிகிறது என்னும் துயரம்—உருவு எடுத்ததோ என்று சொல்லும்படியான அத்தனைத் துன்பத்துக்கு ஆளானவள் - கலுழ்வாள்.]

* * *

துயர வெறி அதிகமாகி விட்டது. பலவிதமான எண்ணங்கள் சீதையின் மனசில் தோன்றுகின்றன. முரண்பட்ட எண்ணங்களும் வந்து தோன்றுகின்றன.

“இப்போது பாதுகாப்புக்குள்ளேயே இருக்கிறேன். ஏதோ எங்குமில்லாத தந்திரத்தினால் இந்த இடத்தை விட்டுத் தப்புவோம் என்பது, விதியின் ஆணையை விட்டுத் தப்பிப் போகிற காரியந்தான்” என்று சீதா பிராட்டியாரின் மனமானது அஞ்சி இடிகிறது. இந்த மன நிலையை அடுத்தே ஒருவிதமான நம்பிக்கை பிறக்கிறது. “சூரிய குலத்தின் பெருமையைப் பார்த்தால், என்னை வந்து மீட்காதிருத்தல் எத்தகைய பழி என்று ராமனுக்குத் தெரியாமலா இருக்கும்?”

அரிது போகவோ
விதிவலி கடத்தல்,
என்றஞ் சிப்.—

பரிதி வானவன்
குலத்தையும் பழியையும்
பாரா
கருதி நாயகனை
வரும்வரும் என்பதோர்
ஆணி வாள்க்
கருதி மாதிரம்
அனைத்தையும் அளக்கின்ற
கண் ணாள்.

[பரிதி வானவன்: சூரியனாகிய தெய்வத்தின்; பாரா: பார்த்து; கருதி நாயகன்: வேதங்களுக்கு லக்ஷ்யமான ராமன்; கருதி மாதிரம் அனைத்தையும்: வருவான் வருவான் என்று நினைந்துத் திசைகள் எல்லாவற்றையும்; அளக்கின்ற கண்ணாள்: அளவிடுதல் போல் சுற்றிப் பார்க்கிறாள்;]

* * *

அடுத்தபடியாக சோர்வு உண்டாகிறது. "தேடிப்போன தம்பி லக்ஷ்மணன் தன் தமயனையே காணவில்லை தானே! சமுத்திரத்துக்கு மத்தியில் இலங்கை யென்று ஒரு தீவு உண்டென்று அயோத்தியில் இருந்த ராமலக்ஷ்மணர்களுக்குத் தெரியவா போகிறது?"

கண்டிலன் கொலாம்
இளவலும்; கனைகடல்
நடுவண்
உண்டி லங்கையென்(று)
உணர்ந்திலர், உலகெலாம்
ஒறுப் பான்
கொண்(டு)இ றந்தமை
அறிகில ராம்எனக்
குழையாய்,
புண்தி றந்ததின்
வேல்நுழைந் தாலெனப்
புகை வாள்.

[கனை கடல் நடுவண்: அலைமோதும் சப்திக்கிற சமுத்திரத்தின் நடுவே; உணர்ந்திலர்: உணர்ந்திலராய்; உலகெலாம் ஒறுப்பான்: உலகத்தை எல்லாம் வருத்துபவனான ராவணன்; கொண்டு இறந்தமை: என்னை எடுத்துக் கொண்டு கடலைக் கடந்தமை: அறிகிலராம் எனக் குழையா: அறிந்து கொள்ள முடியாதுதானே என்று சோர்ந்து; புண் திறந்து அதில் வேல் நுழைந்தால் எனப் புகைவாள்: புண்ணாய்த் திறந்திருக்க அதில் வேலைப் பாய்ச்சியது போன்ற சகிக்க முடியாத துன்பத்தால் பெருமூச்செறிவாள்.]

"கழுகுகளுக்கு அரசனான ஜடாயுவோ ராவணனோடு வாளால் வெட்டுண்டு இறந்துபோனான். ஆகையால் என்னுடைய உண்மை நிலையை ராமலக்ஷ்மணருக்குத் தெரியப்படுத்த ஒருவரும் இல்லை."

மாண்டு போயினன்
எருவைகட்(கு) அரசனும்;
மற் றோர்
யாண்டை என்நிலை
அறிவுறுப் பார்கள்: இப்
பிறப் பில்
காண்ட லோஅரி(து)
என்றென்(று) விம்முறும்
கலங் கும்
மீண்டும் மீண்டும்புக்(கு)
எரிநுழைந் தாலென
மெலி வாள்.

[மாண்டு போயினன் எருவை கட்கு அரசன்: கழுகுகளுக்கு அரசனான ஜடாயுவும் இறந்து போய் விட்டான்; மற்றோர் யாண்டை என்நிலை அறிவுறுப்பார்கள்: என் நிலையைத் தெரிவிக்க வேறு மனிதர்கள் எங்கே இருக்கிறார்கள்; (யாண்டை: எங்கே இருக்கிறார்கள்); மீண்டும் மீண்டும் புக்கு எரி நுழைந்தால் என மெலிவாள்: அக்கினிக் குள்ளே விழுகிறது வெளியே வருகிறது. மறுபடியும் விழுகிறது என்றிருந்தால் எப்படி இருக்கும் வேதனை. அத்தகைய வேதனைக்கு உள்ளாகிச் சோர்கிறாள்.]

சீதா பிராட்டியின் ஆற்ற முடியாத துயரம் கம்பருக்குப் பிரத்யக்ஷம். நமக்கும் அப்படியே பிரத்யக்ஷமாகிறது!



மனைவி:—உங்களைத் தேடிக் கொண்டு டாக்டர் வந்திருக்கிறார்.

கணவன்:—'ஜுரமாகப் படுத்திருக்கிறார்: இப்போது பார்க்க முடியாது' என்று சொல்லி அனுப்பு.

செப்பிடு வித்தை

அக்ஷயம்

பகவான் சிரித்தார்.

"ஏன் சிரிக்கிறீர்கள்? பிரபு, மாயை பக்தர்களையும் கூடவா வியாபிக்கும்? சொல்லுங்களேன்!" என்று நாரதர் கேட்டார்.

பகவான் மறுபடியும் சிரித்தார்.

"சொல்ல மாட்டீர்களா? சொல்லா விட்டால், உங்களை நான் இலேசில் விட மாட்டேன். மாயைக்குப் பக்தர்களையும் ஆட்டிவைக்கும் சக்தியுண்டா?" என்று நாரதர் மறுபடியும் விடாக் கண்டராகக் கேட்டார்.

"உண்டு" என்று இந்தத் தடவை பகவான் பதில் அளித்தார்.

"ஆனால், எனக்கு நம்பிக்கை ஏற்பட மாட்டேன் என்கிறதே, சர்வேசா!"

"நான் சொல்லியும் கூடவா?" என்று பகவான் ஆச்சரியத்துடன் கேட்டார்.

நாரதர் மௌனம் சாதித்தார். ஆனால் அவரது முகத்தில் பெரும் அவநம்பிக்கை தாண்டவமாடியது.

பகவான் மனதுக்குள் சிரித்துக் கொண்டார். பிறகு உதட்டைக் கடித்துக் கொண்டு, மிகவும் சிரமப்பட்டுப் பேசுபவரைப் போல நடித்தவாறு, "முனி சிரேஷ்டரே! எனக்கு மிகவும் தாகமாயிருக்கிறது. எங்கேயாவது தாகத்துக்குத் தண்ணீர் கிடைக்குமா?" என்று கேட்டார்.

"கிடைக்காமல் என்ன? இதோ, பக்கத்தில் தானே புண்ணிய தீர்த்தமான கங்கை நதி ஓடுகிறது. நானே கொண்டு வந்து தருகிறேன்" என்று சொல்லி விட்டு நாரதர் தன் கமண்டலத்தை எடுத்துக் கொண்டு புறப்பட்டார்.

பகவான் அப்பொழுதும் சிரித்துக் கொண்டே நின்றார்.

* * *

நாரதர் நதிக் கரைக்குப் போனார்.

பரிசுத்தமான வெண்மை நிறமுள்ள, நீர் ஆடை யுடுத்தி பாகீரதி வெகு குதூகலத்துடன் தன் கணவன் வீட்டை நோக்கி வெகு வேகமாக ஓடிக்கொண்டிருந்தாள். அந்தி மயங்கும் நேரம். 'நிசிதேவி பவனி வருகிறாள்' என்பதை உலகத்துக்கு அறிவிக்கும் பொருட்டு ஆகாயத்தின் கீழ்க்கோடியில் ஒரு நட்சத்திரம் மினுக்கிக் கொண்டு வெகு ஒய்யாரமாக வந்து நின்றது. ஜன நடமாட்டமற்ற கரை. போகிகள் போகங்களை அநுபவிப்பதற்கும் யோகிகள் யோகம் புரிவதற்கும் ஏற்ற இடம் அது.

நாரதர் தன் கமண்டலத்தில் நீரை நிரப்பிக் கொண்டு புறப்பட்டார். அப்போது வீணையின் நாதத்தைக் காட்டிலும் இனிமையான குரலில், யாரோ "தேவா!" என்று அழைப்பது அவருடைய காதில் விழுந்தது.

நாரதர் குரல் வந்த திக்கைத் திரும்பிப் பார்த்தார். அவ்வளவுதான்! வியப்பு மிகுதியினால் அப்படியே அசைவற்று நின்றுவிட்டார். அழகிற்குப் பெயர் போன ஊர்வசிகூட நாணமுற வேண்டும்; அவ்வளவு எழில் வாய்ந்த பெண் ஒருத்தி அங்கே நின்று கொண்டிருந்தாள். பக்கத்தில் நீர் நிறைந்த குடம் ஒன்று இருந்தது. நாரதர் தன்னையே மறந்து அவளை உற்று நோக்கினார்.

"தேவா!"—தன் கண்களை நிமிர்த்தி அந்த யுவதி அன்பொழுகக் கூப்பிட்டாள்.

"என்ன அம்மா?" என்று மந்திர வசப் பட்டவர் போல நாரதர் அவளைப் பார்த்துக் கேட்டார்.

"சற்று என் குடத்தைத் தூக்கி விடுங்களேன்!"

யுவதியின் குரலினிமை நாரதரின் மனதைக் கவர்ந்தது. குடத்தைக் கைகளால் தூக்கிப் பார்த்தார். "தேவி! நானே கொண்டு வந்து தருகிறேன். நீ வழியை மட்டும் காட்டு" என்றார்.

"மிகவும் வந்தனம், தேவா!"

யுவதி முன்னே சென்றாள். நாரதர் மிகவும் பழக்கப் பட்டவர் போலப் பின்னே சென்றார். போகும் அவசரத்தில் தன் கமண்டலத்தைக் கூட மறந்து விட்டார். கமண்டலத்தை மட்டுமா?

தாகத்தால் தவிக்கும் பகவானைக்கூட மறந்து விட்டார்.

பகவான் அப்பொழுதும் சிரித்துக் கொண்டிருந்தார். எதற்காகவோ?

*　　*　　*

நாரதருடைய ஒரே கலை நாரதருடைய மனதைத் தன் வசப்படுத்தி விட்டது.

அந்த அழகியிடம் கையேந்திக் காதற் பிச்சை கேட்டதன் மூலம், அவர் தன் வாழ்நாள் முழுவதும் பாடு பட்டுச் சேர்த்திருந்த தவம், சாதனை, யோகம் அனைத்தையும் ஒரு நொடியில் மண்ணோடு மண்ணாக்கி விட்டார்.

பிறகு, அந்த விலையுயர்ந்த காதற் பிச்சையை, கௌஸ்துப மணியைப் போல சர்வ ஜாக்கிரதையாக உள்ளத்தில் தரித்துக் கொண்டு தன்னையே மறந்து விட்டார். ஜன சஞ்சாரமற்ற கங்கைக் கரையோரத்தில், நாரதரின் காதற் குடிசை எழுந்தது. ஜன நடமாட்டமற்ற சூன்ய திக்குகளில், அவருடைய காதற் கடல் தன் ஓசையை எழுப்பத் தொடங்கியது. அங்கே, அவரையும் அவருடைய காதலியையும் தவிர வேறு யாருமே இல்லை.

அவருடைய காதல் விருட்சத்தில் பழம் பழுத்தது. அவர் தந்தை ஆனார். வெண்ணையைப் போன்ற கோமளமும், ரோஜாவைப் போன்ற மலர்ச்சியும், பாலைப் போன்ற வெண்மையும் உடைய அவருடைய குழந்தை, அவருடைய வாழ்க்கையில் ஓரேயடியாகச் சுகத்தைக் கொண்டு வந்து கொட்டியது. நாரதர் அனைத்தையும் மறந்து விட்டார். சந்தோஷ மிகுதியினால் பித்தன் போலானார். பகவான் அப்பொழுதும் சிரித்துக் கொண்டு தான் இருந்தார்.

குளிர் காலத்தில் நாரதர் தன் காதலியின் சரீரத்தில் மணமிக்க பொடிகளைப் பூசுவார்; பனி காலத்தில் கஸ்தூரியைப் பூசுவார்; வசந்தகாலத்தில் தன் காதலிக்குத் தலைவாரிப் பின்னி வாடா மல்லிகைப் புஷ்பத்தைத் தொடுத்துச் சூட்டுவார். கோடை காலத்தில் தாமரைப் புஷ்பங்களினால் அவளை அலங்கரிப்பார். குழந்தையின் படுக்கையும் தாமரை இதழ்களினாலேயே தயாரிக்கப்பட்டிருந்தது.

அன்றைக்கும், அவர் தன் குடிசையில் நாற்புறங்களிலும் தண்ணீர் தெளித்து விட்டு, தாமரைப் புஷ்பங்கள் கொண்டு வருவதற்காகப் புறப்பட்டார். கங்கையில் இறங்கி, மடு நிறையத் தாமரைப் புஷ்பங்களைப் பறித்துக் கொண்டு கரையேறினார். தாமரைப்பூ பறிக்கும் வேலையில் நேரம் போவது தெரியாமல் இரண்டு நாழிகைக்கு மேல் ஆகிவிட்டது. பிறகு முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடத் தன் குடிசைக்குப் புறப்பட்டார்.

அடா! — புஷ்பங்களை அப்படியே போட்டுவிட்டு ஓரே மூச்சில் ஓட்டம் பிடித்தார், நாரதர். ஐயோ!—குடிசையில் நெருப்புப் பற்றிக் கொண்டுவிட்டது. அவருடைய காதலியும் குழந்தையும் குடிசைக்குள் அல்லவா இருந்தார்கள்? "ஐயோ, பிரியே!" என்று நாரதர் இரைந்து கூவிக்கொண்டே அழலானார். பித்தனைப் போல வயிற்றிலும் வாயிலும் வேறு அடித்துக் கொண்டார். அடுத்த கணம் கையில் குடத்தை எடுத்துக் கொண்டு ஓடி. நீர் நிரப்பிக் குடிசையில் ஊற்றலானார். ஆனால் எல்லாம் வீண்! அவருடைய அந்த முயற்சி சிறிதும் பலிக்கவில்லை.



எல்லாம் எரிந்து சாம்பலாகியது. நாரதர் தம் கண்களால் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே அவருடைய 'பொன்னுலகம்' சாம்பலாகிக் கொண்டிருந்தது.

நாரதர் மூர்ச்சையடைந்து அப்படியே தரையில் சாய்ந்து விட்டார். சற்று அறிவு தெளிந்ததும்

எழுந்து விசித்து விசித்து அழலானார். பக்கத்திலிருந்த மிருகங்களும் பறவைகளும் கூட வாட்ட முற்றன.

ஆனால் பகவான் அப்பொழுதும் புன்முறுவல் பூத்தவாறுதான் இருந்தார்.

* * *

"முனிவரே! தண்ணீர் கிடைத்ததா?" என்று பகவான் கேட்டார்.

"பிரபோ, என் சகா!" என்று கதறியவாறு நாரதர் பகவானுடைய கால்களைக் கட்டிக் கொண்டார். "இதென்ன கூத்து? என் சுகத்தை யெல்லாம் இப்படிப் பிடுங்கிக் கொண்டு விட்டீர்களே! நான் உங்களுடைய பரம பக்தன் அல்லவா! என்னையுமா இப்படிக் காலத்தின் கோலத்தில் உழல வைக்க வேண்டும்? என் ஆருயிர்க் காதலி, என் அருமைக் குழந்தை, என் சின்னஞ் சிறு வீடு எல்லாம் இப்படித் தொலைந்து விட்டதே! பகவானே!......" என்று புலம்பலானார்.

"அடேடே! என்ன இது?—'காதலி! குழந்தை! வீடு!' என்று என்னவெல்லாமோ சொல்லுகிறீரே! அவர்கள் எல்லாம் எங்கே, முனிவரே?"

நாரதர் தலையை நிமிர்த்திப் பார்த்தார். ஒன்றையும் காணோம். அங்கே அவருடைய காதற் குடிசை எரிந்துபோன சாம்பலைக் கூடக் காணோம். பக்கத்தில் பகவான்தான் நின்று கொண்டிருந்தார். சொல்ல முடியாத ஒருவகைத் துயரம் நாரதருடைய மனதில் குடி கொண்டது.

பகவான் புன்முறுவல் பூத்தவாறே "பேஷ், நாரதரே! நீங்கள் கமண்டலத்தில் தண்ணீர் நிரப்பிக்கொண்டு வருவதற்காகத் தானே போனீர்? அதற்குள், வீடு, தோட்டம் - துரவு, மனைவி மக்கள் எல்லாரையும் சிருஷ்டித்துக் கொண்டு விட்டீரே!" என்று கேட்டார்.

நாரதர் வெட்கித் தலை குனிந்தார்.

"என்ன மாயை!" என்று பகவான் சற்றுத் தெளிவற்ற குரலில் சொன்னார். அதைக் கேட்ட நாரதர் திடுக்கிட்டார். உடனே அவருடைய மடமை, துயரம் எல்லாம் எங்கோ ஓடி மறைந்து விட்டது.


"நீங்கள் பெரிய செப்பிடு வித்தைக்காரர், சுவாமி!" என்று நாரதர் பக்தி பரவசத்துடன் சொல்லிக் கொண்டே பகவானுடைய பாதாரவிந்தங்களை வணங்கினார்.

பகவான் மறுபடியும் சிரித்தார்.

(ஸ்ரீமதி சந்திரகிரண் எழுதிய கதை: அனுமதியுடன் மொழிபெயர்க்கப்பட்டது.)



ஸாரிடோன்
எல்லா வலிகளையும் நிறுத்துகிறது
10 Saridon
ANALGESIC TABLETS




200
பாகங்களுக்குள் ஒரு பாகம்
அது இந்தியாவிலுள்ள மிகப்பெரிய தொழிற்சாலையான ஹிண்டு சைகிள் லிமிடெட் ஆல் தயார் செய்யப்பட்டது. பரிசோதனை செய்யப்பட்ட பாகங்களை உபயோகிப்பதும், தேசத்தின் பழக்க வழக்கங்களை நன்கு அறிந்துகொள்வதும்தான், கரடுமுரடான பாதைக்கு ஏற்ற உறுதியான சைகிளை தயார்செய்ய உதவி புரிகின்றன.
எங்கள் எல்லா ஸ்டாக்கிஸ்ட்டுகளிடமும் எப்பொழுதும் விற்பனைக்குக் கிடைக்கும்
தயாரிப்பாளர்கள்:
ஹிண்ட் சைகிள்ஸ் லிமிடெட்.
பம்பாய்.
HIND CYCLE
THE TOUGH CYCLE FOR THE ROUGH ROAD

[illegible]

No 1.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras

கல்கி



KALKI மே 9,1948 4 அண


REGD. NO. M. 4392

உங்கள் சருமம் வெல்வெட் போன்று மிருதுவாயிருக்க . . .



ஏர்ஸ்பன் பவுடர்
ஏர்ஸ்பன் ரூஜ்

உங்கள் இயற்கை நிறத்துடன் ஒவ்வி அலாதி வசீகரமளிக்கும்படி தயாரிக்கப்பட்டது.



அப்பழுக்கற்ற அந்த மிருதுவான முகச்சாயையில் என்னேவசீகரம்! . . . ஏர்ஸ்பன் பவுடர், ரூஜ் இவைகளின் மூலம் அத்தகைய வசீகரமடையுங்கள். சருமத்தின்மீது மிக இலேசாகப் படிந்து அலாதி வசீகரமும் மிருதுத்தன்மையும் விக்கும் அவ்வளவு மெல்லியதானது. எல்லாவித முகச்சாயைக்கும் ஏற்றவாறு மிகுந்த கவனத்துடன் பல்வேறு நிறங்களில் தயாரிக்கப்பட்டுள்ளன.

Coty

கோட்டி

ஏர்ஸ்பன் பவுடர் . . . ஏர்ஸ்பன் ரூஜ்.

பூரண விநியோகஸ்தர்கள்:
ஜியாப்ரி மானர்ஸ் அண்ட் கோ லிமிடெட்
பம்பாய் - கல்கத்தா - மதராஸ் - லாகூர் - டில்லி

AS 29 TM